அன்பளிப்பு 40P

களத்தில்

தாயகத்தின் உண்மை நிகழ்வுகளை தாங்கிவரும் பத்திரிகை 05-11-1993

அகதியும் அவனே, இராணுவமும் அவனே

சிறீலங்கா அரசு கொழும்பு வாழ் தமிழ்த் துரோகக் குழுக்களுக்கு இரு வழிகளில் நிதியீட்டம் செய்யும் மோசடி அம்பலமாகியுள்ளது. அகதிகள் என்ற பெயரில் இக் குழுக்களில் உள்ளவர்களுக்கு சர்வதேச புனர்வாழ்வு உதவிகளிலிருந்து காசோலைகள் தாராளமாகக் கிழிக்கப்படுகின்றன. மறுபுறத்தில், ஒவ்வொருவரையும் சிறீலங்கா இராணுவத்தில் பதிவு செய்து, இராணுவத்துக்குரிய சம்பளம் எல்லாம் தாராளமனத்துடன் வழங்கப்படுகின்றது. இச் செய்தியை சமீபத்தில் இலண்டன் வந்த பிரமுகர் வாய் தடுமாறியோ அல்லது குழுநிலைப் போட்டியினாலோ அவரது மற்றோர் நண்பருக்கு தெளிவாக விளங்கப்படுத்தி அம்பலமாக்கியுள்ளார். ■

மக்கள் நடமாட்டத்தை கட்டுப்படுத்த சிறீலங்கா சதி

மீண்டும் கிளாலி மீது தாக்குதலுக்கு முயற்சி

தமிழீழ மக்கள் மீது சர்வதேச யுத்தவிதிகளுக்கு எதிரான முறையில் போரினை நடாத்தி வரும் சிறீலங்கா அரசு, சர்வதேச சட்டங்களை மதிப்பதற்கோ, சர்வதேச அழுத்தங்களை ஏற்பதற்கோ ஒருபோதும் ஆயத்தமாக இல்லை என்பதற்கு மற்றொரு சான்று வெளியாகியுள்ளது.

தமிழீழ மக்களின் சாதாரண வாழ்வியல் நடவடிக்கைகளைத் தடைசெய்யக் கூடிய வகையில், பொருளாதாரத் தடைகளையும் மக்கள் முற்றுகைகளையும் பிரகடனப்படுத்திய சிறீலங்கா அரசு, அவை வெற்றியளிக்காததினால் மிகவும் எரிச்சலடைந்து காணப்படுகின்றது. எப்படியாவது தமிழீழ மக்களின் நடமாட்டச் சுதந்திரத்தின் கழுத்தாக இருக்கும் கிளாலிக் கடலேரிப் போக்குவரத்துப் பாதையை, அழித்தொழிக்க வேண்டும் என சிறீலங்கா அரசாங்கம் கங்கணம் கட்டி நிற்கிறது.

கடந்த மாதத்தில், யாழ்தேவி இராணுவ நடவடிக்கை மூலம் கிளாலியைப் பிடிக்கவெனப் புறப்பட்டு, புலிகளிடம் படுதோல்வி அடைந்த சிறீலங்கா, அந்த நப்பாசையை இன்னும் விட்டபாடாகத் தெரியவில்லை.

"கிளாலிக் கடலேரிப் படகுப் பயணம், எமக்கு விடுக்கப்பட்டிருக்கும் பெரும் சவால். இந்தச் சவாலை முறியடித்து வெற்றி கொள்ள வேண்டும். இதற்காக மற்றுமொரு இராணுவ நடவடிக்கை விரைவில் மேற்கொள்ளப்பட உள்ளது." என சிறீலங்கா இராணுவம் அறிவித்துள்ளது. மக்கள் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தும் மற்றொரு சதி நடவடிக்கையின் முன்னறிவித்தலாகவே இது உள்ளது.

இதேவேளையில், சிறீலங்கா மீண்டும் கிளாலி மீது படையெடுப்பு நடத்துமானால் அதனை ஆரம்ப நிலையிலேயே முறியடிப்பதற்கான முன்னேற்பாடுகளில் தமிழீழ விடுதலைப் புலிகள் உற்சாகத்துடன் ஈடுபட்டு வருவதாக தமிழீழச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வல்லரசுகளின் ஆயுதங்களைப் பெற முயற்சி

இதுவரை நடைபெற்ற யுத்தங்களில் ஏற்பட்ட தோல்விகளை மூடிமறைக்க முடியாமல் தவிக்கும் சிறீலங்கா அரசு, மேலும் மேலும் நவீன ஆயுதங்களைக் கொள்வனவு செய்து, மனச்சோர்வுற்றுள்ள தனது படையணியினரை உற்சாகப்படுத்த முயல்கிறது. கிழக்கு ஐரோப்பிய நாடுகள், சீனா போன்ற நாடுகளின் ஆயுதங்கள் தரக்குறைவானதாக உள்ளதினால் புலிகள் அவற்றை நொருக்கி விடுகிறார்கள் எனக் கருதும் சிறீலங்கா இராணுவத்தின் ஒரு பகுதியினர், வல்லரசுகளிடம் ஆயுதக் கொள்வனவைச் செய்யும்படி வற்புறுத்தி வருகின்றனர். இதனால் பிரிட்டன், அமெரிக்கா, ருஸ்யா போன்ற நாடுகளிடம் இருந்து ஆயுதக் கொள்வனவு செய்ய சிறீலங்கா முயற்சித்து வருவதாக மேலும் செய்திகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

மேலும், இவ் யுத்தத்தைப் பயன்படுத்தி ஆயுதப் பேரத்தால் கோடீஸ்வரர்களாக மாறிவரும் ஆயுத விற்பனைத் தரகர்கள் பலரே, சிறீலங்கா [illegible] இராணுவத்தின் மூலம்

தொடர்ச்சி 15ம் பக்கம் ....

புலோப்பளையில் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்ட சிறீலங்கா இராணுவ டாங்கிகளில் ஒன்று எரிந்து கொண்டிருக்கின்றது

புலிகளின் முன் T-55 தாங்கிகள் செயலிழப்பு

28 கோடி நாசம் என அங்கலாய்ப்பு

செக். நாட்டில் இருந்து புலி வேட்டைக்கென சிறீலங்கா அரசு முப்பது T-55 தாங்கிகளை இறக்குமதி செய்தது அனைவரும் அறிந்ததே. இந்த T-55 தாங்கிகளை புலிகளின் தாங்கி எதிர்ப்புப் பிரிவினர் வெற்றிகரமாக செயலிழக்கச் செய்து அழித்து வருகின்றனர். அதிலும் ஒவ்வொன்றும் 90 இலட்சம் ரூபா பெறுமதியான நான்கு தாங்கிகள் புலிகளின் தாங்கி எதிர்ப்புப் பிரிவினரால், யாழ்தேவி இராணுவ நடவடிக்கையின்போது மட்டும் அழித்தொழிக்கப்பட்டு விட்டது. இந்த தாங்கிகள் புலிகளின் முன்னால் பல தடவைகளில் செயலிழந்து போய்விட்டதால் இந்த தாங்கிகளில் செலவிடப்பட்ட 28 கோடி ரூபாவும் சிறீலங்காவுக்கு நட்டமே என கலாய்ப்பு நிலவி வருவதாகத் இராணுவ வட்டாரங்களில் அங் தெரிகிறது. ■

சிறீலங்கா அரசாங்கத்தின் களத் தளபதிகளிடையே மோதல்

யாழ்தேவி இராணுவ நடவடிக்கையின் தோல்வி, சிறீலங்கா அரசாங்கத்தின் களத் தளபதிகளிடையே கருத்து மோதல்களாக வெடித்துள்ளது. "எந்த அளவுக்கு புலிகளை அழிக்க முடியுமோ, அந்த அளவுக்கு புலிகளைக் கொன்று குவிக்க வேண்டும்" என சிறீலங்காப் பாதுகாப்புப் படைகளுக்கு விடுக்கப்பட்ட உத்தரவு, களத் தளபதிகளிடையே கடும் விமர்சனத்துக்கு உள்ளாகியுள்ளது. "இருபது புலிகளை அழித்தால் நாற்பது புலிகள் உயிர்த்தெழுவார்கள். இருநூறு புலிகளை அழித்தாலோ நானூறு புலிகள் உயிர்த்தெழுவார்கள். எனவே சிறீலங்கா இராணுவத்தின் ஒவ்வொரு நடவடிக்கையும் புலிகளின் பலத்தைப் பல மடங்காகப் பெருக்குகின்றது. இந்த உண்மையை உணராத சிறீலங்கா, சிங்களவர்களை இராணுவத்தின் மூலம் பலியிட்டு வருகின்றது." என்னும் கருத்தை பல களத் தளபதிகள் வெளியிட்டுள்ளனர். "பாரிய இராணுவ நடவடிக்கைகள் இராணுவத்தினரிடை உயர்ந்து செல்லும் உயிரிழப்புக்களையும், பாதிப்புக்களையும், ஆயுத இழப்புக்களையுமே தேடிக் கொடுக்கின்றது. இதனால், இராணுவத்தினரிடை ஏற்படும் எதிர்வினைவுகளை சிறீலங்கா இராணுவத் தலைமைப் பீடத்திற்குத் தெரிவிக்க யாரும் இல்லையே" எனும் ஏக்கம் யாழ்தேவி இராணுவ நடவடிக்கையின் தோல்வியின் பின் களத்தில் நிற்கும் இராணுவத்தினரிடை வலுப்பெற்று வருகிறது. ■

நீதிமன்ற உத்தரவை அவமதிக்கும் சிறீலங்கா

இனவிகிதாசார அடிப்படையில் பதவியுயர்வு வழங்கும் சிறீலங்காவின் நிர்வாக முறை, சட்டவிரோதமானது என சிறீலங்கா உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு, சிறீலங்கா அரசின் இனவெறியை உலகிற்கு படம் பிடித்துக் காட்டியுள்ளது.

இதற்கிடை, சிறீலங்கா அரசு தனது ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளுக்குத் தொடர்ந்தும் இனவிகிதாசார அடிப்படையையே கடைப்பிடிக்கப் போவதாக, சிறீலங்காவின் பொதுநிர்வாக அமைச்சர் பெஸ்ரஸ் பெரேரா விடுத்துள்ள அறிக்கை, சிறீலங்

தொடர்ச்சி 15ம் பக்கம் ....

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

சக்தி தேவை!

இன்றைய உலகில் எதைச் செய்வதென்றாலும், அதைச் செய்பவர்களுக்குச் 'சக்தி' உண்டா? என்றே முதலில் எடுத்து நோக்கப்படுகின்றது. ஒரு தேசிய இனம் தன் ஆட்சியைப் பெறுவதற்கு அதற்குச் சக்தி தேவை. சக்தியற்ற நிலையில் எத்தனை விளக்கமாகத் தன் நிலையைக் கூறினாலும், அதை எடுத்து நோக்க சர்வதேச சமூகம் அக்கறை காட்டுவதில்லை என்பது நடைமுறை வரலாறு.

இலங்கைத் தீவில் தமிழர்கள், காலனித்துவ சக்திகள் மேலோங்கிய நேரத்தில், தமது தமிழீழத் தேசத்தின் இறைமையை அவர்களிடம் இழந்தனர். பின்னர் காலனித்துவ பிரித்தானிய ஆட்சியாளர் தமிழ் மக்களுக்கு எதிரான முறையில், சனத்தொகை ரீதியாக அதிகமாக இருந்த சிங்களவர்களிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைக்கும் வரையிலான காலப்பகுதியில், பலமுறை தமிழர்களின் பிரதிநிதிகள் தமக்கேற்படக் கூடிய குறைபாடுகளை, தீங்குகளை ஜனநாயக வழிகளில் பிரித்தானியருக்கு எடுத்து விளக்கினர். நீதி வேண்டினர். ஆயினும் இத்தமிழ் பிரதிநிதிகள், தமிழர்களுடைய சக்தியைக் கட்டி எழுப்புவது பற்றி அதிகம் சிந்திக்கவில்லை. இதனால், பிரித்தானியர் எடுத்த முடிவிற்கு தலை வணங்கவேண்டிய இக்கட்டான நிலை தோன்றியது.

இலங்கை (CEYLON) என்ற பெயரில் ஒற்றை ஆட்சியின் கீழ், இலங்கைத் தீவிற்குச் சுதந்திரம் வழங்கிய நாள்முதல் பௌத்த சிங்களப் பேரினவாதம் வளர்ந்து இறுதியில் தமிழர்களை நாடற்றவர்கள் ஆக்கிய, சிங்கள பௌத்த குடியரசு யாப்பை இயற்றும் வரையான காலகட்டத்திலும், அன்றைய தமிழ்ப் பிரதிநிதிகள் ஜனநாயக வழிகள், சாத்வீகப்போர்கள் எனப் பலவகைகளில் பல எதிர்ப்புக்களை வெளியிட்டதுண்டு. ஆனாலும் இவர்களும் தமிழர்களுக்குத் தேவையான சக்தி நிலையை உருவாக்கத் தவறியதனால், இவர்களது கோரிக்கைகள் யாவும் மழுங்கடிக்கப்பட்டு தமிழர்களது உரிமைகள் சாகடிக்கப்பட்டது.

இந்நிலையில் சக்தி அமைப்பொன்றின் தேவையை தமிழீழம் நாடி நின்றது. இந்தப் பொறுப்பைத் தமிழீழ விடுதலைப் புலிகள் ஏற்றனர். 'சக்தி நிலையை உருவாக்குவது பேச்சுவார்த்தைகளால் அல்ல. தம்மையே தம் இனத்திற்காக அர்ப்பணிப்பதினால்தான் இச் சக்திநிலையை உருவாக்கமுடியும்'என்பதை" இவர்கள் உணர்ந்தனர்.

தம்மை இழந்தனர். சக்தியைப் பெற்றனர். வீடுகளை மறந்தனர். காடுகள் விடுதலை ஓசை எழுப்பியது. எத்தனை தியாகங்கள். எத்தனை விடுதலைக் குளியல்கள். இனத்திற்காய் தம்மையே சிதைத்தவர் எத்தனை பேர். ஊருக்காய் உடலில் வெடி சுமந்தவர் எத்தனை பேர். நாட்டுக்காய் நடுநிசியில் விழித்திருந்த விழிகள் எத்தனை. மாற்றானை மண்டியிடவைக்க உற்றாரை, உடன்பிறந்தவரை மறந்தவர்கள் எத்தனை பேர். இழப்பதினால் தான் சக்தியைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதை உணர்ந்தார்கள். சொந்த உணர்வுகளைக் குழிதோண்டிப் புதைத்தனர். உறுதியாக நிமிர்ந்தனர் நாடும் பலம் பெற்று எழுந்தது. வாழ்வுக்கான சொத்துக்கள் துறையாடப்பட்டன, விடுதலை எனும் பெரும் சொத்து அவர்களுடையதாயிற்று. இந்தவகையில் தான் தன்னல மறுப்பு -தியாகம் -சரியான தலைமைத்துவம் -கொள்கைக்காய் எமனையும் சந்திக்கும் நெஞ்சுறுதி -இதில் விளைந்ததுதான் 'தமிழீழ விடுதலைப் புலிகள்' எனும் மக்கள்படை. தன்னை, தன்வாழ்வை தன் இனத்திற்கே கொடுத்துவிட்டு மண்ணை, மண்ணின் விடுதலையை உயிராகப் பெற்றவன்தான் விடுதலைப் புலி. 'நான் என்ற தத்துவம் அழிந்தது. நாம் என்ற வேதம் எழுந்தது. சாதிகள் சக்தியை இழந்தன. பிரதேச வெறிகள் மறைந்தன. தமிழ்த்தேசிய இனம் என்ற மக்கள் தொகுதி, வரலாற்றுக்கு முன்பிருந்தே வாழ்கிறது என்ற உண்மை புலனாகியது. தமிழீழ மக்களின் தேசியப் பாதுகாப்பு இராணுவமாக தமிழீழ விடுதலைப் புலிகள். ஒரு தீவில் இரு நாடுகள். இரு தேசிய இனங்கள். தனித்தனி மொழி. தனித்தனிப் பண்பாடு. இன்று தனித்தனி இராணுவங்கள். சுருக்கமாகச் சொன்னால், தமிழர் மாபெரும் சக்திவாய்ந்த அமைப்பைப் பெற்றனர். தமிழீழ விடுதலைப் போராட்டம் வெற்றி நடைபோடுகின்றது. இன்று சிறீலங்கா இராணுவமே தச்சன்குளத்தில் வைத்து, "தமிழீழ மக்களின் தேசிய இராணுவமான விடுதலைப் புலிகள் தமக்குப் பெரும் சவால்" எனப் பகிரங்கமாக ஒப்புக்கொள்ளும் அளவுக்கு தமிழீழ மக்களின் 'சக்தி அமைப்பு' பலம் பெற்று நிற்கிறது. இந்த சக்தி அமைப்பை மேலும் மேலும் பலப்படுத்தினால் மட்டுமே, தமிழ்த்தேசியம் என்பது உறுதிபெறும். ஆட்சி வடிவு பெறும். இத் தமிழ்த் தேசியம், தமிழீழத் தமிழர்களுக்கு மட்டுமல்ல, உலகெங்குமுள்ள தமிழர்களுக்கு அத்தியாவசியத் தேவையாகி வருகிறது. தமிழகத்திலும் திராவிடத் தேசியத்தின் போலித்தனம் அம்பலமாகி திராவிட யுகத்தின் முடிவுரை எழுதப்பட்டுக்கொண்டிருக்கின்றது. ஆகவே தமிழ் வாழ, தமிழர்கள் வாழ தமிழ்த்தேசியம் தேவை. தமிழ்த்தேசியம் நிலைபெற, தமிழர்களின் சக்தி அமைப்பாம் விடுதலைப் புலிகள் மேலும் சக்தி பெற வேண்டும். இதற்கு உழைப்பது உலகெங்கும் உள்ள தமிழர்கள் கடமை ஆகும். சக்தியுடன் அமைதி தேடுவோம். மனச் சுத்தியுடன், அதற்காய் உழைப்போம். ■

சிறீலங்கா அரசின் அணுகுமுறை சமாதானத்திற்குத் தடை

— திரு.அன்ரன் பாலசிங்கம்

"இலங்கையில் இனப்பிரச்சினை இல்லை என்று ஜனாதிபதி டி.பி. விஜயதுங்கா கூறுவாரேயானால், பிரச்சினையை போர்க்களத்தில்தான் தீர்த்துக்கொள்ள வேண்டும்" என, விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் யாழ்ப்பாணத்தில் தெரிவித்துள்ளார். பத்திரிகையாளர்களுக்குப் பேட்டி தருகையில் மேலும் அவர் தெரிவித்ததாவது:

அரசின் மோசமான அணுகுமுறை சமாதானத்திற்கு பிரதான தடையாக இருக்கின்றது எனவும், பேச்சுவார்த்தைக்கு அடிப்படையாக அமைக்கக்கூடிய எந்தவொரு யோசனையையும் அரசு முன்வைக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளார். சமாதானத்திற்கான கதவை அரசு அடைத்துள்ளதால், முழு அளவிலான போருக்கு விடுதலைப் புலிகள் இயக்கம் தயாராகிக் கொண்டிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். நிலவரம் மிகவும் கவலைக்குரியதாக இருப்பதாகக் குறிப்பிட்ட அவர், தமிழ் இனம் முழுவதையும் போருக்காக நாம் தயார்படுத்திக் கொண்டிருக்கின்றோம் எனவும், இப்போது சமாதானத்திற்கோ அல்லது பேச்சுவார்த்தைக்கோ இடமில்லை எனவும் தெரிவித்துள்ளார். ■

சிறீலங்காப் பிரதமருக்கு ஒரே பதில்

எங்கள் அபிவிருத்திக்கு எங்களுக்கு பாதைவிடு உனது உணவும் சம்பளமும் எமக்குத் தேவையில்லை

சிறீலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வெளிநாடுகளில் வைத்து, "வடக்கு கிழக்குக்கு சிறீலங்கா அரசு உணவு மற்றும் அவசியப் பொருட்களை அனுப்புகிறது. வடக்கு கிழக்கில் பணிபுரியும் அரச உத்தியோகத்தர்களுக்குச் சம்பளமும் வழங்குகிறது" என்று கூறியுள்ளதாக வெளியான செய்தித்தாள்ச் செய்தி தமிழ் மக்கள் மத்தியில் ஆத்திரத்தையும், அதிர்ச்சியையும் தூண்டியுள்ளது.

தமிழர்களின் உயிர்களைப் பறிக்கும் சிறீலங்கா அரசு, தமிழர்களுக்கு உணவும் வாழ்வும் வழங்குவதாகக் கூறியுள்ள மாய்மாலக் கருத்துக்கள், உயிரிழப்புக்களாலும் வாழ்வு இழப்புக்களாலும் சொல்லொணாத் துன்புறும் தமிழர்களுக்கு வெந்த புண்ணில் வேல் பாய்ந்த உணர்வை ஏற்படுத்தியுள்ளது.

"எங்களை எங்களது அபிவிருத்திகளுக்கும், பொருளாதார முயற்சிகளுக்கும், முதலீடுகளைத் திரட்டவோ அல்லது வெளிநாட்டு மூலதன உதவியைப் பெறவோ முடியாது. தடுத்து நிற்கும் ஆக்கிரமிப்பாளனான சிறீலங்கா, தன்னை அரசு எனக் காட்டிக் கொள்வதற்காகவும், ஒட்டு மொத்தமான இன அழிவு, சர்வதேச சமூகத்தின் வரவை கொண்டுவரும் என்ற அச்சத்திற்காகவும், தமிழீழ மக்களுக்கு கால்வயிற்றுக் கஞ்சி ஊற்றுகிறது. அதேவேளை படிப்படியாக இனஅழிப்பை வெற்றிகரமாக நடாத்தி இனவிகிதாசாரத்தை வீழ்த்துவதற்கும், அச்சமூட்டல் மூலம் மக்களை அடிமைப்படுத்துவதற்குமான சகல நடவடிக்கைகளிலும் சிறீலங்கா திட்டமிட்டு தீவிரமாக இயங்கிவருகிறது.

பொருளாதாரத்தடை, நடமாட்ட முற்றுகை, போக்குவரத்து முற்றுகை, மருத்துவ முற்றுகை என எல்லாவிதமான முற்றுகைகளுக்கூடாகவும், தமிழீழ மக்களின் தன்மான உணர்வை, விடுதலை விருப்பை வேரறுக்கத் துடித்து வருகிறது.

அதே சிறீலங்கா அரசின் பிரதமர், வெளிநாடுகளில் வைத்து கூறியுள்ள கூற்று, ஒரு தீவில் இருநாடுகள் இருப்பதையும், இரு தேசிய இனங்கள் இருப்பதையும், குடியேற்ற விடத்தால் சிங்கள பௌத்த வெறியர்கள் தமிழீழ மக்களை ஆக்கிரமித்திருப்பதையும் உணரத் தொடங்கிவிட்ட சர்வதேச சமூகத்தவர்களைத் திசை திருப்ப கூறப்பட்டதொன்று.

உண்மைக்குப் புறம்பான கூற்று

அதேவேளை, "புலிகளுடன் நாம் பேசலாம். ஆனால், தமிழ் மக்களின் ஏக பிரதிநிதியாக அவர்களை ஏற்க முடியாது" என உண்மைக்குப் புறம்பான மற்றொரு கூற்று ஒன்றையும் சிறீலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வெளியிட்டுள்ளார். இன்றைய அரசியல் யதார்த்தத்தின்படி, தமிழ்த் தேசிய இனமும், தமிழ்த் தேசிய இனத்தின் தேசிய பாதுகாப்பை வழங்கும் விடுதலைப்புலிகளும் மட்டுமே, தமிழீழ அரசியல் உலகில் காணப்படுகின்றனர். இவர்களுக்கு எதிராக சிங்கள பௌத்த பேரினவாத இராணுவ அரசும் அவனை ஆதரிக்கும் குழுக்களுமே உள்ளனர். உண்மை இப்படியிருக்க, தமிழர்களின் ஏகபிரதிநிதியாக விடுதலைப்புலிகளை ஏற்க மறுக்கும் சிறீலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க யாருடன் பேசப்போகின்றார். தம்மை அடிவருடி, தமது கொள்கைகளை ஆதரிக்கும் ஒரு கூட்டத்தை தமிழீழ மக்களின் பிரதிநிதிகளாக உருவாக்கிக் காட்ட முற்படுகின்றாரா?

உள்ளூராட்சித் தேர்தல்

இதற்கிடை, சிறீலங்காப் பிரதமர் தன்னை வெளிநாட்டில் வைத்துச் சந்தித்த இந்திய அமைச்சர் மன்மோகன் சிங்கிடம், "வடக்கு கிழக்கில் வவுனியா, மட்டக்களப்பு பகுதிகளில் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்த ஜனாதிபதி நடவடிக்கை எடுத்து வருகிறார்" எனக் கூறியுள்ளார்.

இது இந்தியா, சிறீலங்கா அரசினூடாக ஐக்கிய இலங்கைக்கு உட்பட்ட தீர்வொன்றை தமிழீழ மக்கள் மேல் திணிக்க முயல்கிறது என்ற சர்வதேச அவதானிகளின் கருத்தை மெய்ப்பிப்பதாக உள்ளது. சிறீலங்காவின் பாஷைப்படி தன்னால் தீர்வு காணமுடியும் எனக்கூறப்படும் ஒரு விடயம் பற்றி வெளிநாட்டு அமைச்சர் ஒருவருடன் ஏன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்? ஏன் விளக்கமளிக்க வேண்டும்? அப்படித், தான் அளித்த விளக்கத்தை எதற்காகப் பத்திரிகையாளர் மகாநாட்டில் விளக்க வேண்டும்? இந்தக் கேள்விகளைக் கவனமாக எடுத்து நோக்கின், இந்திய வல்லாதிக்கம், சிங்கள பௌத்த இனவெறி அரசினூடாக தமிழீழ மக்கள் மேல் அரசியல் மேலாதிக்கம் செலுத்த முயல்கிறது என்ற உண்மை தெளிவாகிறது. இதற்கு முன்னர் அமெரிக்காவுக்கு சென்ற சிறீலங்கா அமைச்சர் கமீதும் அங்கு வைத்து அவரைச் சந்தித்த, தமிழர்கள் சிலரிடம், சர்வதேச சமூகத்தின் தலையீட்டை இந்தியா விரும்பாது என வெளிப்படையாகக் கூறியதாக அதிகாரபூர்வமற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

இவற்றையும் கேணல் கிட்டுவின் விடயத்தில், இந்தியா இழைத்த துரோகத்தனத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கையில், இந்தியா -சிறீலங்கா ஆகிய இரு அரசுகளும் தமிழீழ மக்களை அடிமைப்படுத்தி, உலகில் தோன்றி வளரும் இனத்தேசியத்துவ அடிப்படையில், தமிழ்த் தேசியத்துவம் தோன்றுவதைத் தடை செய்வதையே நோக்காகக் கொண்டுள்ளன, என்பது தெளிவாகின்றது.

பிரதேச இனக் கலவரங்களுக்கு தூபம்?

அத்துடன் உள்ளூராட்சித் தேர்தல் அறிவிப்பு மூலம் வவுனியா, மட்டக்களப்பு பகுதிகளில் பிரதேச இனவெறிகளைத் தூண்டுவதே சிறீலங்கா அரசின் உள்நோக்கமாக உள்ளது. தமிழீழத்தின் ஒரு மூலையில் கூட சிங்கள பௌத்த இனவாத அரசின் தேர்தல் நடைபெறுவது சாத்தியமில்லை என்பதை சிறீலங்கா அரசும் அதன் பாதுகாப்புப் படையும் நன்கு அறியும். இருப்பினும் இந்த உள்ளூராட்சித் தேர்தல் அறிவிப்பு மூலம், முஸ்லீம் -சிங்கள -தமிழ் இனக்கலவரங்களையும், பிரதேச உணர்வுகளையும் வளர்த்துவிட்டு, அதன் பின்பு சர்வசன வாக்குரிமை மூலம் வடக்கு கிழக்கைப் பிரிப்பதே சிறீலங்கா அரசின் சதி நோக்கம். இதையே அதன் பிரதமரும் வெளிப்படுத்தியுள்ளார். ■

அளம்பிலில் நடைபெற்ற இதயபூமி -1 வெற்றி விழா

■ மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு

மண்கிண்டிமலை முகாம் தகர்ப்பு இதயபூமி -1 நடவடிக்கையின் 45 ஆம் நாள் வெற்றி விழா அண்மையில் மணலாறு கோட்டத்தில், அளம்பிலில் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் பெரும்திரளான மக்கள் திரண்டிருந்தனர்.

மங்கள விளக்கை முன்னாள் மணலாறு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ரமேஸ் அப்பா ஏற்றி வைத்தார். முல்லை மாவட்டத் தளபதி சாலமன் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். தொடர்ந்து மாவட்ட சிறப்புத் தளபதி பாண்டியன் நினைவுத் தூபியை திறந்து வைக்க, நடுகைக் கல்லினை தமிழீழ துணை அரசியல் பொறுப்பாளர் கரிகாலன் திரை நீக்கம் செய்து வைத்தார். நினைவுத் தூபியின் திரைநீக்கத்தை மாவட்ட துணைப்படைப் பொறுப்பாளர் அமுதன் செய்தார். தொடர்ந்து மாவீரர்களின் உருவப் படங்களுக்கு வன்னி மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் மனோ, மன்னார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கணேஸ, முல்லை மாவட்ட பொது மேம்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புவியரசன், முல்லை மாவட்ட கடற்புலிகள் பொறுப்பாளர் மற்றும் மகளிர் படைப் பிரிவைச் சேர்ந்த செல்வி நம்மியா ஆகியோர் ஈகைச்சுடர் ஏற்றி மலர்மாலை அணிவித்தனர்.

இந் நிகழ்வில் வீரச்சாவடைந்த மாவீரர்களின் பெற்றோர் நினைவுப் பொருள்கள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். அத்துடன் மணலாறு விஜயன் எழுதிய இதயபூமி -1 என்ற வெளியீட்டுப் பிரதியை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் வாகீசனிடமிருந்து வன்னிமாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் மனோ அவர்கள் பெற்றுக்கொண்டார். அஞ்சலிக் கூட்டத்தில் வீரச்சாவு அடைந்த லெப். திருமலைநம்பியின் தந்தை வரப்பிரகாசம், தமிழீழ அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் கரிகாலன், மணலாறு விஜயன், மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் வாகீசன் ஆகியோர் உரையாற்றினர். ■

மலையகப் பகுதிகளிலிலும் புலிகள் ஊடுருவலாம்

மலையகப் பகுதிகளில் விடுதலைப் புலிகள் எதிர்காலத்தில் தமது நடவடிக்கைகளை விரிவுபடுத்துவார்கள் என்றும் எனவே தோட்டப் பகுதிகளில் பதற்றம் ஏற்படும் அச்சுறுத்தல் இருப்பதால், மாத்தளைப் பகுதி மிகுந்த அவதானத்துடன் வைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாநிலத்திலிருந்து விடுதலைப் புலிகளின் அணி பொன்று பதுளை, கண்டி மாத்தளைப் பகுதிகளுக்குள் ஊடுருவி இருப்பதாக பொலிசாருக்கு இரகசியத் தகவல் கிடைத்திருப்பதாகவும் இதனால், மிக அவதானத்துடன் செயல்படுமாறு மக்களுக்கு கோரிக்கை விடப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது. முன்பின் அறிமுகம் இல்லாதவர்கள் மற்றும் சந்தேக நபர்கள் தொடர்பாக அவதானமாக இருக்குமாறு தோட்ட அதிகாரிகளும் பொலிசாரினால் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்

மேலும் தம்புள்ள, மாத்தளை பிரதான பாதையில் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு வீதித் தடைகளும் போடப்பட்டிருப்பதாக 'லங்காதீப' மேலும் தெரிவித்துள்ளது. ■

பயணிகளைக் கொண்டே வவுனியாவில் சோதனை

வடபகுதியிலிருந்து செல்லும் பயணிகளை சோதனையிட சக பயணிகளையே வவுனியாவிலுள்ள தமிழ்த் தேசவிரோதக் குழு ஒன்று பயன்படுத்துகிறது.

வடபகுதியிலிருந்து சென்ற பயணிகளை நொச்சிமோட்டை இராணுவக் காவலரணுக்கு அண்மையில் தமிழ்க் குழு ஒன்று தடுத்து வைத்து, கொழும்பிலிருந்து வந்தவர்களில் ஐந்து பேரை மிரட்டி அழைத்து வந்து, மேற்படி பயணிகளைச் சோதனையிடுமாறு பணித்தனராம்.

இவர்கள் இருவரும் அச்சம் காரணமாக வடபகுதிக்கு வெளியே சென்ற பயணிகளைச் சோதனையிட்டதாக அங்கிருந்து வரும் செய்தி தெரிவிக்கின்றது. ■

திருமலை மாணவரை படையில்சேர வற்புறுத்து

திருகோணமலை மாவட்டத்தில் மாணவர்களை இராணுவத்தில் சேர்க்குமாறு பெற்றோரை சிறீலங்கா இராணுவத்தினர் வற்புறுத்தி வருகின்றனர்.

திருமலை மாவட்டம், கறுக்காமுனை, விநாயகபுரம் பகுதிகளை சுற்றிவளைத்த சிறீலங்கா இராணுவத்தினர் கறுக்காமுனை மக்களை அப்பகுதி பாடசாலை ஒன்றிற்கு அழைத்துச் சென்றனர்.

அங்கு வைத்து, "14 வயதுக்கு மேற்பட்ட உங்கள் ஆண், பெண் பிள்ளைகளை எமது இராணுவத்தில் சேருங்கள்" என வற்புறுத்திக் கூறினர். இதனால் வெருகல், ஈச்சிலம்பற்றை பிரதேச மக்கள் பெரும் பீதியடைந்துள்ளனர். ■

சுயதொழில் முயற்சிகளுக்கு கடன் வழங்க நடவடிக்கை

தென்மராட்சிப் பகுதியில் உள்ள வசதி குறைந்த மக்களுக்கு தமது சுயதொழில் முயற்சிக்காக குறைந்த வீதவட்டியின் அடிப்படையில் கடனாக பணத்தினை தென்மராட்சிக் கோட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகம் (த. பு. க) வழங்கி வருகின்றது.

இதேவேளை அப்பகுதியில் பிற இடங்களில் இருந்து அகதிகளாக வந்து இடவசதி இருந்தும் இருப்பிடவசதி இல்லாமல் இருக்கும் குடும்பங்களுக்கு நாவற்குழி, கொடிகாமம், மந்துவில் போன்ற இடங்களில் இதுவரைக்கும் 38 குடிசைகளை அடிப்படை வசதிகளுடன் அமைத்துக் கொடுத்துள்ளனர்.

இவ் வேலைத் திட்டங்கள் தொடர்ந்து இடம்பெற்று வருவதுடன், வசதிகுறைந்த மாணவர்கள், கல்வி கற்பதற்கு வசதிகளையும் செய்து வருகின்றனர். கிராமங்களில் அமைந்துள்ள பாலர் பாடசாலைப் பிள்ளைகளுக்கு ஊட்ட உணவும் வழங்கி வருகின்றனர். இவ் உதவிகளால் மக்கள் தமது வாழ்க்கையை இலகுவாகத் தொடர முடிகின்றது. ■

போர் முனைக்குச் செல்லாத புத்திசாலி ஜெனரல்கள்

■ சிறீலங்கா ஜெனரல்கள் குறித்துக் கிண்டல்

போர்முனையில் ஈடுபடாத புத்திசாலித்தனமான சில ஜெனரல்களும் சிறீலங்கா இராணுவத்தில் உள்ளனர் என கொழும்பில் இருந்து வெளிவரும் ஐலண்ட் ஆங்கில இதழில் அரசியல் விமர்சகர் ஒருவர் தான் எழுதிய கட்டுரையில் கிண்டலடித்துள்ளார்.

விமர்சகர் தனது கட்டுரையில் போர் முனையில் ஈடுபடாத புத்திசாலிகளான சில ஜெனரல்கள் கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி இராணுவ முகாம்களை மீளப்பெறுமாறு கூறிய ஆலோசனையை பாதுகாப்புச் சபை ஏற்காமல் விட்டமை பாராட்டக் கூடியதாகும் எனக்குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணக் கோட்டையைக் கைவிடுவதாக இராணுவம் எடுத்த முடிவு மிகப்பெரிய தவறாகப் போய்விட்டது எனவும் அவர் அதில் தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவிக்கையில், பாக்குநீரிணைப் பகுதியில் கண்காணிப்புக்கு மிகவும் பொருத்தமான கேந்திர இடத்தில் அமைந்திருந்த இக் கோட்டை முகாம், உள்ளும் புறமும் மிகவும் பாதுகாப்பானதாகும். ஒவ்வொரு முறையும் அங்கு புலிக்கொடி ஏற்றப்படும் போது விமானப் படை குண்டு வீசுவதாகக் கூறப்படுவது மிகவும் மடைத்தனமானதாகும். கோட்டை முகாமைக் கைவிட்டு, பின்னர் மீளப் பிடிக்கலாம் என்று இராணுவத்தின் உயர் பீடத்தினர் சிலர் தெரிவித்த கருத்தின் செல்வாக்கிற்கு அரசியல் தலைமைப்பீடம் கட்டுப்பட்டமை பெரும் துரதிர்ஷ்டமானதாகும் என்றும் குறிப்பிட்டுள்ளார். ■

சிங்களத் தீவிரவாதக் குழுவினர் இராணுவத்தினுள் ஊடுருவல்!

■ புதிய ஆட்சேர்ப்பு முறையால் நெருக்கடி

புதிதாக இராணுவத்திற்கு ஆட்களைச் சேர்ப்பதில் கடைப்பிடிக்கப்பட்டு வரும் தளர்ச்சியான நடைமுறை புதிய பிரச்சினையை உருவாக்கியுள்ளது. இராணுவ ஆட்சேர்ப்பின் போது அவர்கள் தொடர்பாக முழு விபரங்களும் பெறப்படாமல் சேர்க்கப்படுவதினால், தெற்கில் இயங்கும் சில பயங்கரவாதக் குழுக்களைச் சேர்ந்த அங்கத்தினர் பலர் இராணுவப் பயிற்சி பெற்றுவருவதாகவும் இவர்கள் மீண்டும் 'பயங்கரவாத' நடவடிக்கைகளில் ஈடுபடும் அறிகுறிகள் தென்படுவதாகத் தெரியவருகின்றது. ■

மட்டு. மாவட்டத்தில் நெற் செய்கைக்குத் தடை

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்ப் பகுதி ஒன்றில் 5000 ஏக்கர் காணியில் காலபோக வேளாண்மை செய்வதற்கு இராணுவம் தடை விதித்துள்ளது.

உறுகாமம் பகுதியில் உள்ள சந்தன ஆற்றுக்கு மேற்கேயும் முருந்தன் ஆற்றுக்கு மேற்கேயும் உள்ள சுமார் 5000 ஏக்கர் விவசாய நிலத்தில் பெரும் போகத்தில் விவசாயம் செய்ய இராணுவம் தடைவிதித்துள்ளது.

இத்தகவலை பிரிகேடியர் றொகான் குணவர்த்தன சமீபத்தில் மட்டக்களப்பு சாரதா படமாளிகையில் விவசாயிகள் மத்தியில் இடம்பெற்ற கூட்டத்தின் போது தெரிவித்தார். ■

அமெரிக்கா, பிரித்தானியாவில் தமிழர் ஆதரவு பிரசாரம்

அமெரிக்காவிலும் பிரித்தானியாவிலும் தமிழ்த் தீவிரவாதிகள் இலங்கைக்கு எதிராக பிரச்சாரங்களை செய்து வருகின்றனர். அந்த நாடுகளுக்கு சென்ற போது இதனை நான் நேரடியாகவே அவதானித்தேன் என பத்தேகம ரத்தினசார பிரிவினா அதிபதி வலிவிட்டியே சுமண தேரர் தெரிவித்தார்.

இலங்கை தொடர்பாக அவர்கள் செய்யும் பிரச்சாரங்களால், அந்நாட்டு அரசுகளும் மக்களும் அவர்களைப் பாதுகாப்புடன் போசித்தும் வருகின்றனர். எமது தூதுவர்களும், அந்நாடுகளுக்குச் செல்லும் அரச பிரதிநிதிகளும் இந்நிலை குறித்து எதுவுமே கூறுகிறார்களில்லை. அவர்கள் மௌனம் சாதிப்பது வியப்பாக இருக்கிறது. அமைச்சர்கள் இந்த நாடுகளுக்குச் சென்று, ஐந்து நட்சத்திர கோட்டல்களில் இருந்தவாறே அரச பணத்தைச் செலவிடுகின்றனர். இந் நிலையில் நாம் விரைவில் சர்வதேச அரங்கில் அநாதைகளாகி விடுவோம்.

அமெரிக்காவின் பிரதான நகரங்களில் தமிழர்கள் அங்குள்ள வீதிகளிலே பகிரங்கமாகவே தமது பிரச்சாரங்களைச் செய்கின்றனர். இதனை நியூயோர்க், வாசிங்டன், சிக்காகோ போன்ற நகரங்களில் நேரில் கண்டேன். இலண்டனில் சகல தெருக்களிலும் நூற்றுக்கணக்கானவர்கள் பிரிவினைக்கு ஆதரவாக போராட்டங்களைத் தொடருகின்றனர் என்று வலிவிட்டியே சுமணதேரர் மேலும் தெரிவித்துள்ளார். ■

சுமணதேரர் கவலை

கல்வி மேம்பாட்டுப் பேரவையினரின் 'விளக்கு' மாத இதழ் வெளியீடு

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் 'விளக்கு' மாத இதழ் வெளியீட்டு விழா யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில், தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவைத் துணைத் தலைவர் திரு. அ. பஞ்சலிங்கம் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இவ்விழாவில் தேசியக் கொடி ஏற்றல், மங்கள விளக்கேற்றல், தமிழ்மொழி வாழ்த்தையடுத்து வரவேற்புரையை பேரவைச் செயலாளரும், அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வனும் நிகழ்த்தினார்கள். முதற் பிரதியை தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவைத் தலைவர் அருட்திரு. பிரான்சிஸ் யோசப் அடிகளார் வழங்கினார். ■

நகரும் திசையெல்லாம் சுட்டுக்கொண்டே சென்றோம்

■ காயமடைந்த கேணல் தெரிவிப்பு

"யாழ்தேவி இராணுவ நடவடிக்கையின் போது முதல் நாளான செவ்வாய்க்கிழமை ஓர் இடத்தில் முகாமிட்டிருந்த சமயம், விடுதலைப் புலிகள் எம்மைச் சுற்றிவளைத்து மோட்டார்க் குண்டுகளால் மோசமாகத் தாக்கினர்". இவ்வாறு யாழ்தேவி நடவடிக்கையின்போது காயமடைந்த கேணல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "இத்தாக்குதல் நடவடிக்கையின் போது நாம் நகரும் திசைகள் எல்லாம் சுட்டவண்ணம் இருந்தோம். இருட்டாக இருந்தபடியால், எதையுமே எம்மால் தாக்கக் கூடியதாக இருக்கவில்லை. திறந்த வெளியில் நாம் சென்று கொண்டிருந்தபடியால், நாம் பலத்த தாக்குதலுக்கு இலக்காகிக் கொண்டிருந்தோம். மணல் பிரதேசமாக இருந்ததால், முன்னேறுவது கடினமாக இருந்தது" என்றும் அவர் தெரிவித்தார். ■

சிறீலங்கா ஜனாதிபதி எங்கே போகிறார்? எப்படி போகிறார்?

முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரேமதாசா தனது சொத்துக்கு உயில் எழுதி வைக்காதது போன்றே, தனது அரசியல் வெற்றிடத்தை ஐ.தே.கட்சியில் யார் நிரப்புவது என்பது குறித்தும் அவர் சிந்திக்கவில்லை. அவ்வாறு சிந்திப்பதற்கு அவர் இஸ்டப்படவுமில்லை. ஏனெனில் தனது 'சாம்ராஜ்யத்தின்' முடிவு இவ்வளவு விரைவில் வந்துசேரும் என அவர் எண்ணவில்லை.

இந்நிலையில், கடந்த மே மாதம் முதலாம் திகதி ஜனாதிபதி பிரேமதாசா கொல்லப்பட்டபோது, ஏற்பட்ட வெற்றிடம் அப்போதைய பிரதமரான டி.பி.விஜயதுங்காவால் நிரப்பப்பட்டது. பிரேமதாசாவினால்,, தனது அரசியல் வைரிகளை ஓரம் கட்டுவதற்கென முன்னிலைக்கு கொண்டுவரப்பட்டவரான டி.பி.விஜயதுங்கா, பிரேமதாசா மரணம் அடையும்வரை அவர் எதிர்பார்த்தது போன்று, அவர் கைப்பாவையாகவே செயற்பட்டவர். பிரேமதாசா ஆட்சிக் காலத்தில் அவருக்கு அடுத்து, அதிகாரங்கள் கொட்டிக் கிடந்த [illegible] நிதி அமைச்சர், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் என்ற முக்கிய பதவிகள் உட்பட மேலும் பல பதவிகளும், அவற்றிற்கான அதிகாரங்களும் இருந்தன.

ஆனால், டி.பி.விஜயதுங்காவின் அரசியற் பின்தளம், குடும்பப் பின்னணி என்பவை பலம் பொருந்தியவையாக இல்லை. இவையே பிரேமதாசா, இவருக்கு அச்சமின்றி உயர் பதவிகளையும் அதிகாரங்களையும் வழங்க உதவியதோடு, இறுதியில் ஜனாதிபதி பதவி கிட்டவும் உதவியதாயினும், ஜனாதிபதியாகப் பதவியேற்றபின்னர் பெரும் அரசியற் பின்தளம் ஒன்று இல்லாமை, அவருக்குச் சில சிரமங்களை ஏற்படுத்தின.

ஆகையினால், அரசியற் தளம் ஒன்றை உருவாக்கிக் கொள்ள வேண்டிய அவசியத்தை, சில மாத கால ஆட்சி அனுபவம் அவருக்கு உணர்த்தியது. ராஜீவ் காந்தியின் கொலையின் பின்னர் ஆட்சி அதிகாரத்திற்கு வந்த இந்தியப் பிரதமர் நரசிம்மராவ், அரசியற் தளம் இன்றி அல்லாடுவது கூட அவருக்கு ஒரு படிப்பினையாக இருந்திருக்கக் கூடும்.

இதேவேளை டி.பி.விஜயதுங்க ஒரு பௌத்த மத அடிப்படைவாதி. அத்துடன் ஓர் இனவாதி என்பதற்கும் அவரது கடந்தகால நடவடிக்கைகள் சில சுட்டிக் காட்டப்படக்கூடியன. இவரது திணைக்களம் ஒன்றில் வழங்கிய வேலைவாய்ப்பில், நூறு வீதமும் சிங்களவராக இருக்கப் பார்த்துக் கொள்ளப்பட்டதாகக் குறை கூறப்பட்டதும் உண்டு.

மேலும், டிங்கிரி பண்டா விஜயதுங்க ஜனாதிபதியாகப் பதவி யேற்றபோது, அவர் 'ஓர் இடைக்கால ஜனாதிபதி' என்றே அரசியல் பார்வையாளர்கள் கருதினர். அதாவது பிரேமதாசா விட்டுச் சென்ற ஒன்றரை வருடப் பதவிக் காலத்திற்கான ஓர் இடைக்கால ஜனாதிபதியாகவே விமர்சிக்கப்பட்டார். ஆனால், இன்றைய நிலையும் விஜயதுங்காவின் நடவடிக்கைகளும் அவர் எங்கே போகின்றார்? எப்படிப் போக முற்படுகின்றார் என்ற கேள்வியைப் பல மட்டங்களிலும் எழுப்பியுள்ளன.

இக்கேள்விகள் எழும்புவதற்கு இனப்பிரச்சினை குறித்து டி.பி.விஜயதுங்கவின் இன்றைய நிலைப்பாடும், ஜனாதிபதி ஆட்சி முறை பற்றிய அவரின் சிந்தனையும் முக்கிய அடிப்படைகளாகவுள்ளன.

நிரந்தர ஜனாதிபதியாகப் பதவி ஏற்று ஒரு வார காலத்திற்குள் (மே 14ம் திகதி) கண்டியில் பத்திரிகையாளரிடம் பேசிய டி.பி.விஜயதுங்கா, "வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம்தான் தீர்வு காணப்பட வேண்டும். நிரந்தரமான மார்க்கம் அதுதான். ஆனால் அதற்கான வழி எது என்றுதான் விளங்கவில்லை. பிரபாகரனுடன் பேச்சுவார்த்தை நடத்த யாராவது உதவினால் அது மிக மகத்தான செயலாகக் கணிக்கப்படும்" எனத் தெரிவித்ததோடு, "நாம் சமாதானத் தீர்வை விரும்புகிறோம். சமாதானம் விரைவில் உருவாக வேண்டும் என்பதே எமது அவாவும் பிரார்த்தனையும்" என்று தெரிவித்திருந்தார்.

ஆனால், அவரது இந்நிலைப்பாடு மூன்று மாத காலங்கள் கூட நீடிக்கவில்லை. அவர் தனது நிலைப்பாட்டை முற்றாகவே மாற்றிக் கொண்டார். வடக்கு -கிழக்கில் இனப்பிரச்சினை என்பதே இல்லை. விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை என்பதற்கே இடமில்லை. வடக்கு -கிழக்குப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வே ஒரே தீர்வு எனவும் தெரிவித்துள்ளதோடு, தான் செல்லும் இடமெல்லாம் வலியுறுத்தியும் வருகின்றார்.

டி.பி.விஜயதுங்காவின் இந்நிலைப்பாடானது, தனியாக இனப்பிரச்சினை தொடர்பாக அவர் செய்துள்ள கொள்கை மாற்றம் என்பதைவிட.., தென்னிலங்கை அரசியலில் டி.பி.விஜயதுங்க தனது நிலையினைத் தக்கவைத்துக் கொள்வதற்கும், எதிர்கால அரசியலில் தனது ஸ்தானத்தை நிலை நிறுத்திக் கொள்வதற்கான நடவடிக்கை என்றே சொல்ல வேண்டும்.

சிங்கள அரசியற் தலைவர்கள் தமது தலைமைத்துவத்தை நிலை நிறுத்திக் கொள்வதற்கும், தமது அரசியல் எதிர்காலத்தை நிலை நிறுத்திக் கொள்வதற்கும் எப்பொழுதும் தம்மை பௌத்த சிங்களத் தலைவர்களாக நிலை நிறுத்திக் கொள்வதன் மூலமே அதனை வெளிக்காட்டிக் கொண்டனர். இந்த வரிசையில், டி.எஸ்.சேனநாயக்காவில் இருந்து டி.பி.விஜயதுங்க வரை எவருமே மாறுபட்டவர்கள் அல்ல.

1956 ஆம் ஆண்டு தனது அரசியல் அதிகாரத்தை நிலை நிறுத்திக் கொள்வதற்காகவே எஸ்.டப்ளியு.ஆர்.டி.பண்டாரநாயக்கா தனிச் சிங்கள மசோதாவைக் கொண்டு வந்தார். இதன் மூலம் தனது தலைமைத்துவத்தை தக்க வைத்துக் கொண்டார். இதே போன்றே 1977 இல் இடம் பெற்ற இனக் கலவரத்தைத் தொடர்ந்து தொலைக் காட்சியில் பேசிய அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா, "நான் சிங்கள மக்களின் தலைவனாக இருக்கவே விரும்புகின்றேன்" என்று தனது உண்மைச் சொரூபத்தை வெளிக் காட்டினார்.

ஆதாவது, சிங்களத் தலைவர்கள் நெருக்கடியின் போதெல்லாம் தம்மை பௌத்த மத அடிப்படை வாதத்தின் தலைவர்களாகவே காட்டிக் கொள்ள முற்பட்டனர் -காட்டிக் கொண்டனர். இதன் மூலம் அரசியலில் தமது நிலையை ஸ்திரப்படுத்தியும் கொண்டனர்.

- ஜெயராஜ் -

இந்த நிலையில் தான் தற்பொழுது ஆட்சியில் இருக்கும் டி.பி.விஜயதுங்கவும், தனது ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்ளவும் எதிர்கால அரசியலில் நிலைப்படுத்திக் கொள்வதற்காகவும் தம்மை பௌத்த மத அடிப்படை வாதியாகவும் காட்டிக் கொள்ள, தமிழர் தேசிய இனவிடுதலைப் போராட்டத்தை முற்றாக எதிர்த்து நிற்க முற்பட்டுள்ளார்.

டி.பி.விஜயதுங்கவிற்கு ஜனாதிபதி பதவி என்பது எதிர்பாராத விதமாகக் கிடைத்ததொன்று என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. இதனை அவரே ஏற்றுக் கொண்டாலும் ஆச்சரியப்பட எதுவுமில்லை. ஆகையினால், இடைக் கால ஜனாதிபதியாக பதவி கிட்டியபோது அவரே அடுத்த பதவிக் காலம் குறித்து சிந்தித்திருப்பார் என எண்ணுவதற்கில்லை. ஆனால், பதவியில் அமர்ந்தபின்னர் அவரின் எண்ணமும் சிந்தனையும் அடுத்த ஜனாதிபதி பதவி பற்றியதாக மாறியதில் ஆச்சரியப்பட எதுவுமில்லை.

ஜனாதிபதி பிரேமதாசா கொல்லப்பட்டபோது, பிரதமர் என்ற ரீதியில் தற்காலிக ஜனாதிபதியாக டி.பி.விஜயதுங்க நியமிக்கப்பட்டிருப்பினும், பின்னர் இடைக்கால ஜனாதிபதியாக அவர் நியமனம் பெறுவதற்கு, முன்னாள் பிரதமர் என்பதைவிட.., ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பல அணியினர் இருந்தமையே காரணமாகும். அன்றைய நெருக்கடி நிலையில் ஐ.தே.க. உடைந்துவிடுமோ என்ற எதிர்பார்ப்பும் சிலரிடம் இருந்தது.

இந்நிலையில் தான், பிரேமதாசாவால் முன்னணிக்குக் கொண்டுவரப்பட்டவரானாலும், கட்சிக்குள் அணிசார்ந்த நடவடிக்கை மேற்கொள்ளாதவர் என்ற நிலையில் டி.பி.விஜயதுங்க, ஜனாதிபதியாகத் தெரிவு செய்வதற்கு சகலரினதும் ஒத்துழைப்பு கிடைக்கப்பெற்றது. ஆனால், இவரது ஆட்சிக் காலத்தைப் பயன்படுத்தி கட்சியில் முதன்மை பெறுவதற்கும் அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக நியமனம் பெறுவதற்குமான முயற்சியில் பலர் இறங்கினர். இதில் பிரதமரான ரணில் விக்கிரமசிங்கா முதன்மையானவராக இருந்தார்.

ஆனால், இடைக்கால ஜனாதிபதியாக நியமனம் பெற்ற டி.பி.விஜயதுங்க, அடுத்த ஜனாதிபதி பதவிக் காலத்திலும் குறியாக இருப்பது அவருடைய தற்போதைய நடவடிக்கைகளில் இருந்து அனுமானிக்க முடிகிறது. சிறீலங்கா ஜனாதிபதிகளில் சர்வாதிகாரிகள் எனப்படும் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா, ஆர்.பிரேமதாசா ஆகியோர் தம்மிடம் வைத்திருந்த அதிகாரங்களை விட, டி.பி.விஜயதுங்க தன்னிடம் கூடுதல் அதிகாரங்களைக் கொண்டுள்ளமை இதனை ஊர்ஜிதப்படுத்துவதாகவுள்ளது. அதாவது ஜனாதிபதிகளான ஜே.ஆர்.ஜெயவர்த்தனா, பிரேமதாசா ஆகியோர் ஜனாதிபதியுடன் வைத்திருந்த அமைச்சுக்களை விட, கூடுதலான அமைச்சுக்களையும் முக்கிய அமைச்சுக்களையும் டி.பி.விஜயதுங்க வைத்துள்ளார். அதாவது இன்றும் நிதி, மற்றும் பாதுகாப்பு ஆகிய முக்கிய அமைச்சுக்கள் இரண்டும் முழுமையாகவே ஜனாதிபதி டி.பி.விஜயதுங்காவிடம் இருப்பது குறிப்பிடத் தக்கதாகும்.

இதேவேளை, ஜனாதிபதி டி.பி.விஜயதுங்க மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்த சில நடவடிக்கைகளுக்கு ரணில் முட்டுக் கட்டையாக இருந்தமையானது, டி.பி.விஜயதுங்காவை விசனப்படையச் செய்திருக்கக் கூடும். குறிப்பாக ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியை, ஐக்கிய தேசியக் கட்சியுடன் அணைத்துக் கொள்ள ஜனாதிபதி எடுத்த முடிவு இறுதியில் கைவிடப்பட்டமையானது, ரணில் எதிர்ப்பால் என்றே அறிய முடிகின்றது. அதாவது ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ரணிலுக்கு எதிரான ஒரு போட்டியாளரை -காமினி திசநாயக்காவை உருவாக்குவதன் மூலம் ஜனாதிபதிப் பதவியை அடுத்த முறையும் தக்கவைத்துக் கொள்ள, டி.பி.விஜயதுங்க மேற்கொண்ட முயற்சி அதுவென்று கருதப்படுகின்றது. ஆனால் இவ்விடயத்தில் விஜயதுங்காவுக்கு ஒரு தோல்வி என்றே கருதவேண்டும்.

மேலும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசின் கட்டுப்பாட்டில் உள்ள வெகுசனத் தொடர்பு சாதனங்களைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வது, ஜனாதிபதி டி.பி.விஜயதுங்காவுக்கு பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. ரணிலின் இந்நடவடிக்கையானது, அடுத்த ஜனாதிபதி வேட்பாளருக்குரிய திட்டமிட்ட நடவடிக்கை என்றே அவரால் கருதப்படுவதாக அறிய வருகின்றது.

இந்நிலையில் தான் டி.பி.விஜயதுங்க பௌத்த மத அடிப்படைவாதத்திற்குத் தலைமை ஏற்பதன் மூலம் கட்சிக்கு உள்ளும், வெளியிலும் தனது நிலையை உறுதிப்படுத்தத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிகின்றது. சிறீலங்காவின் முன்னாள் ஆட்சித் தலைவர்கள் போலவே, இவரும் இவ்வழியைத் தேர்ந்தெடுத்திருப்பது அவரை நிலை நிறுத்திக் கொள்வதற்குப் பெரிதும் உதவும் என்பதில் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை.

ஆனால் முன்னாள் ஜனாதிபதிகளான ஜே.ஆர்.ஜெயவர்த்தனா, பிரேமதாசா ஆகியோர் பலமான அரசியல் அடித்தளத்தைக் கொண்டவர்களாக இருந்தமை காரணமாக, பௌத்த மத அடிப்படைவாதிகளின் ஆதிக்கத்தில் இருந்து ஓரளவேனும் விடுபட்டவர்களாக இருந்தார்கள். இதன் மூலம் தம்மை தேசியத் தலைவர்களாகப் பாவனை செய்யவும் முற்பட்டனர்.

ஆனால், டி.பி.விஜயதுங்காவுக்கு அவ்வாறான அடித்தளத்தை உருவாக்குவதற்கான கால அவகாசமோ, அன்றி அதை உருவாக்கும் திறமையோ இருப்பதாக இல்லை. அவ்வாறு இருந்திருப்பின், அவர் தனது நீண்டகால அரசியல் வாழ்க்கையில் அதனை உருவாக்கியிருக்க முடியும். இந்நிலையில்தான் இலகுவானதும், அதேவேளை உணர்ச்சி பூர்வமானதும், விரைவான பலனை அடையக் கூடியதுமான தீவிர மத வாதத்திற்குத் தலைமை தாங்க முன் வந்துள்ளார். இதேவேளை முன்னரே இனவாதப் போக்குடையவராக கணிக்கப்பட்டுள்ளவர். இம்முடிவை மேற்கொள்வது அவரைப் பொறுத்து சங்கடமான ஒரு விடயமாகவும் இருப்பதற்கில்லை.

இவரின் இம்முயற்சி, தற்பொழுதே குறிப்பிடக்கூடிய வெற்றியை ஈட்டிக்கொடுத்துள்ளதெனலாம். ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்றக் குழுக்கூட்டம் ஜனாதிபதியின் தீர்மானத்தை வரவேற்றுள்ளதோடு, இவரது இம்முடிவு குறித்துப் பாராட்டும் தெரிவித்துள்ளது. அத்தோடு இதுவரை ஐக்கிய தேசியக் கட்சியும், சிறீலங்காச் சுதந்திரக் கட்சியும் இனப்பிரச்சினை தொடர்பாகக் கடைப்பிடித்து வந்த தளம்பல் போக்கைக் கண்டித்து வந்த பௌத்த மத அடிப்படை வாத அமைப்புக்களான சிங்கள மகா சபையும், ஜெல உறுமய போன்ற அமைப்புக்களும் இம்முடிவை வரவேற்றுள்ளதோடு டி.பி.க்கு தமது ஆதரவைத் தெரிவித்துமுள்ளன.

இதேவேளை இலங்கையில் இனப்பிரச்சினை இல்லை என்ற அறிவிப்பின் மூலமும் இராணுவத் தீர்வே ஒரே வழி என்பதன் மூலமும், சிறீலங்கா இராணுவத்திடமும் அவர் தனது நிலையை உறுதிப்படுத்திக் கொண்டுள்ளார். இதுவரை இனப்பிரச்சினையில் அரசியல்வாதிகள் ஒரு

தொடர்ச்சி 13ம் பக்கம்.....

"ஒப்பரேசன் யாழ்தேவி" தோல்வி : திறந்த வெளிப் போரில் பலத்த அடி !

— ஜெயராஜ்

'ஒப்பரேசன் யாழ்தேவி' சிறீலங்கா இராணுவத்திற்கு எதிர்பாராத பெருந் தோல்வி ஒன்றைக் கொடுத்தது. ஒரு நாள் போரில் மட்டும், சுமார் 400 இராணுவத்தினரை களத்தில் இருந்து வெளியேற்றிய (கொல்லப்பட்டோ அன்றி காயமடைந்தோ) இந்நடவடிக்கை, இராணுவத் தரப்பிற்குத் தோல்வி என்பதில் கேள்விக்கே இடமில்லை. 'யாழ்தேவி' இராணுவ நடவடிக்கையின் போது, இராணுவத்தினர் எதிர்பார்த்ததைவிட பலமடங்கு அதிகமான இழப்புக்களைச் சந்திக்க வேண்டி இருந்ததாக, இராணுவ வட்டாரங்கள் ஒப்புக் கொண்டதாக 'சண்டே ரைம்ஸ்' குறிப்பிட்டது.

இத்தோல்வியை ஒப்புக்கொண்ட ஓர் இராணுவ அதிகாரி, "முன்னேறிய இராணுவ அணிமீது விடுதலைப்புலிகள் நடத்திய திடீர்த் தாக்குதலால், பல்லாயிரக்கணக்கான சிப்பாய்களைக் கொண்ட இராணுவ அணி குழப்பமடைந்து சின்னாபின்னமாகியது. இதனால் படையணி அல்லோல கல்லோல நிலைக்குத் தள்ளப்பட்டது" எனக் குறிப்பிட்டார்.

"ஒப்பரேசன் யாழ்தேவி" தோல்வியானது, கடந்த ஆண்டின் ஆரம்பத்தில் மணலாற்றுப் பிரதேசத்தில், 'ஒப்பரேசன் சிக்ஸர்' இராணுவ நடவடிக்கையின் தோல்வியுடன் ஒப்பிடக் கூடியதாயினும், இச்சமரில் சிறீலங்கா இராணுவத்திற்கு ஏற்பட்ட உயிர், மற்றும் தளபாட பொருட் சேதம் அதிகமானதாகும். அதாவது ஒப்பரேசன் சிக்ஸர் இராணுவ நடவடிக்கையும், ஒப்பரேசன் யாழ்தேவி இராணுவ நடவடிக்கை போன்றே ஆரம்பத்திலேயே ஒரு அதிரடித் தாக்குதல் மூலம், விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டது. ஆனால், அம்மோதலில் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட இழப்பை விட, இவ்விழப்பானது மும்மடங்கானதாகும்.

இதேவேளை, பெரும் சமர் என்ற ரீதியில் 'ஒப்பரேசன் பலவேகய -1' இராணுவ நடவடிக்கையுடனும் இவ் இராணுவ நடவடிக்கை ஒப்பிடப்படுகின்றதாயினும், இவ்விரு சமர்களுக்கும் இடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் உண்டு. 'பலவேகய -1' நடவடிக்கையானது, ஆனையிறவு இராணுவ முகாம் மீதான விடுதலைப் புலிகளின் தாக்குதலையும், முற்றுகையையும் முறியடிக்கும் நோக்கில் அவசர அவசரமாக மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையாகும். அச்சமரிலும் சிறீலங்கா இராணுவம் தனது முப்படைகளின் பலத்தையும் முழுமையாகப் பயன்படுத்தியிருப்பினும், இன்றுள்ள பலமான நிலையில் முப்படைகளும் அன்று இல்லை. அன்று சுப்பர் சொனிக் விமானங்கள், புக்காரா விமானங்கள், எம். ஐ. -8 உலங்கு வானூர்திகள், தாங்கிகளோ போர் முனையில் அறிமுகப்படுத்தப்படவில்லை.

இந்த ரீதியில் 'ஒப்பரேசன் யாழ்தேவி' பல வகையில் மாறுபட்டதாகும். இது மிகவும் இரகசியமாக, நன்கு திட்டமிடப்பட்டு, படையணிகள் ஒழுங்காகச் சேர்க்கப்பட்டு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாகும். இச்சமரில் இராணுவம் தனது தாங்கிகள் உட்பட பல கனரக வாகனங்களையும், ஆகாயப்படையின் முழுப்பலத்தையும் பாவித்தது. அத்தோடு விடுதலைப் புலிகளுடன் இடம்பெற்ற போர் அனுபவங்களும் கருத்திற் கொள்ளப்பட்டன.

இத்தாக்குதல் திட்டமானது, இரண்டு இலக்குகளைப் பிரதானமாகக் கொண்டிருந்தது. ஒன்று, யாழ் குடாநாட்டிற்கான தற்போதைய கடல்வழிப் பாதையான கிளாலிப் பகுதியைக் கைப்பற்றுதல். இதன் மூலம் யாழ் குடாநாட்டு முற்றுகையை தீவிரமாக்கல் அல்லது முற்றாக மூடிவிடுதல். இரண்டாவது விடுதலைப்புலிகளை திறந்த வெளியில் போருக்கு இழுத்து, பெருமளவு உயிர்ச் சேதங்களை ஏற்படுத்துதல் என்பன ஆகும்.

இவ்விரு நோக்கங்கள் குறித்து, இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட பின்னர், வெளிப்படையாகவே இராணுவத் தரப்பில் பேசப்பட்டது. இராணுவப் பேச்சாளரான பிரிகேடியர் சுனில் அங்கமன, "விடுதலைப்புலிகளை வெளிக் களப்போருக்கு அழைத்து வருவதே எமது நோக்கம். அவ்வாறுதான் மேற்படி பிரதேசத்தை விடுதலைப் புலிகளிடம் இருந்து விடுவிக்க முடியும்" எனத் தெரிவித்தார்.

அத்தோடு ஒப்பரேசன் யாழ்தேவியின் பிரதான நோக்கம் கிளாலியைக் கைப்பற்றி யாழ்ப்பாண முற்றுகையை பலப்படுத்துவதே என்பது, இராணுவ விமர்சகர்கள் பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதொன்றாகவே இருந்தது. இதனால், இப்போருக்கு இராணுவ, அரசியல் ரீதியில் பெரும் முக்கியத்துவமும் வழங்கப்பட்டது.

இதேவேளை, இச்சமரானது விடுதலைப் புலிகளைப் பொறுத்தும் மிகவும் முக்கியமான சமர் என்பதில் சந்தேகம் எதுவும் இருக்கவில்லை. கிளாலியைக் கைப்பற்றி இராணுவம் நீண்ட காலம் வைத்திருப்பது என்பது 'ஒப்பரேசன் வலம்புரி' -பூநகரி முடப்பட்டது; 'ஒப்பரேசன் பலவேகய -II' -கொம்படி மூடப்பட்டது; ஆகிய இரண்டு நடவடிக்கைகளை விட பாதகமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடியதாகவே இருக்கும்.

இது குறித்து அரசியல் விமர்சகர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், 'யாழ் நகருக்கான யுத்தத்தை விட, கிளாலிக்கான போர் முக்கியத்துவம் வாய்ந்தது' என்றார்.

இவ்வாறானதொரு நிலையில் ஆரம்பிக்கப்பட்ட போரில், இராணுவத் தரப்பு தமது திட்டத்திற்கு ஏற்ப புலிகளைத் திறந்த வெளிச் சமருக்கு இழுக்கும் நோக்கில் போர் நடப்பதற்கான களத்தை தெரிவு செய்தது. ஆனையிறவு -இயக்கச்சிப் பகுதியில் இருந்து புறப்பட்ட இராணுவம், மரங்களும் அரண்களும் உள்ள பிரதான வீதி ஊடாக முன்னேறாமல், யாழ் குடாக்கடல் நீரேரியை அண்டியதாக - திறந்த வெளி ஊடாக முன்னேறத் தொடங்கியது. இப்பகுதி சிறுபற்றைகளைக் கொண்டதாகவும் ஓரளவு மணற்பாங்கான பகுதியாகவும் இருந்தது.

இதன் மூலம் விடுதலைப் புலிகளுக்கு பேரிழப்பை உண்டுபண்ணுவதே நோக்கமாக இருந்தது. கிளாலியின் முக்கியத்துவம் கருதி வெட்ட வெளியில் புலிகள் தம்மைச் சந்திப்பார்கள் எனவும் இராணுவத் தரப்பில் கருதப்பட்டது. இந்நிலையில் விமானப்படையின் பலத்த தாக்குதல் மூலமும் பலமான பீரங்கிப் படைப் பிரிவினராலும் புலிகளுக்கு பெரும் சேதம் உண்டுபண்ணலாம் எனத் திட்டமிடப்பட்டிருந்தது.

மேலும் ஒப்பரேசன் பலவேகய -I அனுபவத்தின் மூலம் மணற்பரப்பில் சலாடின், பவல் கவச வாகனங்கள் திறம்படச் செயற்படவில்லை என்பதை கண்டறிந்த இராணுவம் ஏற்கனவே பெற்றிருந்த தாங்கிகளையும் பயன்படுத்தின. இதன் மூலம் பலவேகய -I, 1992 இல் மணலாற்றில் இடம்பெற்ற ஒப்பரேசன் சிக்ஸர் நடவடிக்கையின் போது இராணுவ முன்னிலை அணிகளுக்கு ஏற்பட்டது போன்ற, உயிரிழப்பைத் தவிர்க்கலாம் என்றும் கருதப்பட்டது.

இவ்வாறாக, இராணுவத் தரப்பு யுத்தத்திற்கான களத்தையும் போர் முறையையும் தெரிவு செய்த வேளை விடுதலைப்புலிகளும் புதிய போர் யுக்திகளை வகுத்துக் கொண்டனர். விடுதலைப் புலிகளின் போர் யுக்திகளும் கடந்த கால அனுபவத்தின் தொடர்ச்சியாகவே இருந்தது.

இராணுவம் திறந்த வெளிச் சமரொன்றிற்கு, தம்மை இழுக்க முற்படுவதை நன்கு விளங்கிக் கொண்டிருந்தமையால், பலவேகய -I, 1991 ஒகஸ்ட்டில் இடம்பெற்ற மணலாற்றுச் சமரான 'ஒப்பரேசன் மின்னல்' என்பவற்றில் பெற்ற அனுபவத்தைக் கொண்டு பெரும்படை எடுப்பை மரபு வழி இராணுவமாகத் தடுத்து நிறுத்தி போரிடுவதிலும் பார்க்க, அதிரடி மூலம் சிதைத்து விடுவதென்ற முடிவுடன் விடுதலைப் புலிகள் செயற்பட்டதை அவதானிக்க முடிந்தது.

ஒப்பரேசன் யாழ்தேவி ஆரம்பிக்கப்பட்டபோது, முதல்நாள் விடுதலைப்புலிகள் பலத்த எதிர்ப்பைக் காட்டவில்லை. சுமார் நான்கு கிலோ மீற்றருக்கு மேல் புலோப்பளை வரை இராணுவம் பெரும் எதிர்ப்பின்றி முன்னேறியது. ஆனால், அடுத்த நாட்காலை இராணுவம் முன்னேறத் தொடங்கி 500 மீற்றர் நகரும் முன்னரே, ஒரு பலமான அதிரடித் தாக்குதல் நடத்தப்பட்டது. இராணுவத்தினருடன் மிக நெருக்கமாக நின்று மோதிய விடுதலைப் புலிகள், இராணுவத்தின் முன்னணி நிலையைச் சிதறடித்தனர். இராணுவம் ஒரு கட்டத்தில் ஒரு கிலோ மீற்றர் வரை பின்வாங்கி ஓடியது.

இதேவேளை இராணுவத்தினரின் முன்னணி நிலையில் நிறுத்தப்பட்டிருந்த சிறீலங்கா கவசப் படைப் பிரிவும், தாங்கிகளும் புலிகளின் டாங்கி எதிர்ப்பு பிரிவினரின் பலமான தாக்குதலுக்கு உள்ளானது. இச்சமரில், இராணுவம் தனது முன்னணி நிலையில் நிறுத்தி வைத்திருந்த மூன்று தாங்கிகளில் இரண்டையும் இழக்க வேண்டியிருந்தது.

அன்று ஏற்பட்ட கடும் சமர், காலை 8.30 இல் இருந்து 12.30 மணி வரையிலுமே இடம்பெற்றது. பின்னர் புலிகள் தமது கடும் தாக்குதலை நிறுத்திக் கொண்டனர். இதைத் தொடர்ந்து அன்றும், அடுத்த நாளும் புலோப்பளைப் பகுதியில் தரித்த இராணுவம் இரு நாட்களின் பின் அல்லிப்பளை, கிளாலி வரையும் வந்தது. ஆனால், புலிகள் பெரும் எதிர்ப்பைக் காட்டாது இராணுவத்தினரின் நகர்ச்சிக்கு வழிவிட்டனர் என்றே கூறலாம். அதாவது இராணுவத்தினரின் விருப்பத்திற்கு ஏற்ப புலிகள், போர் புரியாது தமது திட்டத்திற்கு ஏற்ப போரை நடத்த முற்பட்டனர்.

ஆனால், விடுதலைப் புலிகள் மேற்கொண்ட இப்போர் முறையானது, அதாவது 'தாக்குதலும்

சிசில் வைத்தியரட்னா

தவிர்த்தலும்' என்னும் போர் யுக்தியானது, கடந்த ஆண்டு இடம்பெற்ற 'ஒப்பரேசன் பலவேகய-II' நடவடிக்கையின்போதும் பின்பற்றப்பட்ட போர்த் தந்திரோபாயத்தின் அடி ஒற்றியதே ஆகும்.

அத்தோடு, இச்சமரில் விடுதலைப் புலிகளின் படையணிகள், கடந்த காலச் சமர்களில் பயன்படுத்தியதை விட, கணிசமான கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தியுள்ளதையும் உறுதி செய்யக்கூடியதாக இருந்தது. இதில், மோட்டார்கள், ஆர். பி. ஜி. எறிகணை செலுத்திகள், கனரக துப்பாக்கிகள் என்பன முக்கிய இடத்தைப் பெற்றன. இக்கனரக ஆயுதங்கள் இராணுவத்தினரின் முன்னணிப் படையணிகளையும் கடந்து சென்று தாக்கக் கூடியவையாக இருந்தமையே, இராணுவத் தரப்பில் சேதம் அதிகரித்தமைக்கும், படையணிகள் சிதறியமைக்கும் காரணமாகும். அதாவது, தாக்குதலை வழிநடத்தி வந்த கேணல் தரத்தில் உள்ள உயர் இராணுவ அதிகாரி காயப்படும் அளவிற்கு, புலிகளின் மோட்டார் தாக்குதல்கள் இராணுவ அணிக்குள் புகுந்தன.

இந்நிலையில், ஒப்பரேசன் யாழ்தேவியின் நோக்கம், போர் முறைத்திட்டம் ஆகிய இரண்டும் தோற்கடிக்கப்பட்டன. அதாவது, விடுதலைப் புலிகளைத் திறந்த வெளியில் சமருக்கு அழைத்து, பெருமளவில் கொன்றொழித்தல் என்ற இராணுவத் தந்திரோபாயம் விடுதலைப் புலிகளின் போர் யுக்திகளினால் தோற்கடிக்கப்பட்டதோடு, அவர்களுக்கே பெரும் கேடு விளைவிப்பதாகவும் அமைந்தது. "இராணுவப் படையணிகள் திறந்த வெளிப்பரப்பிற்குள் முன்னேறிச் சென்றதே படையினருக்கு ஏற்பட்ட பெரும் பாதிப்பிற்கான காரணங்களில் ஒன்றாக அமைந்தது" எனத் தமது தந்திரோபாயத்திற்கு தாமே பலியானதை, ஓர் இராணுவ அதிகாரி பரிதாபமாக ஒப்புக் கொள்ள வேண்டியிருந்தது.

இதேவேளை, இத்தோல்வியானது சிறீலங்கா அரசியற் தலைமைக்கும், இராணுவத் தலைமைக்கும் ஒட்டு மொத்தமாகக் கிடைத்த தோல்வியாகும். தெளிவாகக் கூறின் -ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கவிற்கும், இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரட்னாவிற்குமான தனிப்பட்ட தோல்வியும் ஆகும்.

இராணுவத் தரப்பில், இராணுவத் தீர்வை மட்டுமே வற்புறுத்தும் கடும் போக்குடையவரான லெப். ஜெனரல் சிசில் வைத்தியரட்னவின் நேரடித் தலைமையில் வடக்கில் மேற்கொள்ளப்பட்ட பாரிய நடவடிக்கை இதுவாகும். லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ, மேஜர் ஜெனரல் விஜயவிமலரட்னா ஆகியோர் கொல்லப்பட்ட பின்னர் சுமார், ஒரு வருடத்தின் பின் மேற்கொள்ளப்பட்ட இப்பாரிய இராணுவ நடவடிக்கை பெரும் தோல்வியில் முடிவடைந்துள்ளது. ஆகையினால், இத்தோல்வி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரட்னவின் திறமை குறித்து கேள்வியை எழுப்பும் என்பதில் சந்தேகமில்லை.

இதேவேளை, இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வே ஒரே தீர்வு என வற்புறுத்தி வரும் டி. பி. விஜேதுங்கவிற்கு, இத்தோல்வி இராணுவத் தீர்வின் கனவுகளைப் புரியவைத்திருக்கும். அதாவது, இச்சமரில் அவருக்கு கிடைத்த அனுபவமானது இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு என்ற கொள்கைக்கு கிடைத்த தோல்வியாகும். ■

பனை வெல்ல உற்பத்தி மானியம்

வல்வெட்டித்துறை பகுதி மக்கள், குடிசைக் கைத்தொழிலாக பனைவெல்ல உற்பத்தியில் ஈடுபடுவதை ஊக்குவிக்கும் விதத்தில், 'தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு கழகம்' மானியங்களை வழங்கி வருகின்றது. இதனால், குடிசைக் கைத்தொழிலாக பனை வெல்லத்தை உற்பத்தி செய்யும் ஆர்வம் அதிகரித்து உள்ளது. ■

நிகழ்வும் நினைவும்...

'தராகி' கூறும் காரணங்களில் எனக்கு உடன்பாடும் முரண்பாடும் உண்டு. இது குறித்து நான் விரிவாக ஆராயவில்லை. ஆனால் 'தராகி'யின் இப்பதம் சில வேளைகளில் சிலரால் 'குடாநாட்டினை மையப்படுத்திய கொள்கை' என விளங்கிக் கொள்ளப்படலாம்.

தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடர்பாக, இராணுவ மூலோபாயம், தந்திரோபாயம் தொடர்பாக விரிவான கட்டுரைக்கான அவசியம் இருக்கின்றது என்பதனையே 'தராகி'யின் பத்தி உணர்த்துகின்றது. ■

சமாதான முயற்சிக்கு அரசு தயாராக இல்லை தமிழ் மக்கள் போராடியே ஆகவேண்டும்

★ இணைந்து செயற்பட வருமாறு விடுதலைப் புலிகள் கோரிக்கை

பேச்சும் இல்லை, சமாதான முயற்சிகளும் இல்லையென்று சிறீலங்கா அரசே திட்டவட்டமாக வெளிப்படையாக அறிவித்துவிட்டது. படையெடுப்புக்கள், இராணுவ அணுகுமுறைகள் மூலமே இனப்பிரச்சினையைக் கையாள அரசும் படைத்துறைத் தலைமையும் ஏகோபித்த முடிவை எடுத்துவிட்டன. இந்தக் கடும் போக்கை சிங்கள தேசத்தின் அனைத்துத் தரப்பினருமே அங்கீகரித்தும் விட்டனர். இந்த நிலையில் அமைதி வழிமுறையில் தீர்வு கிடைக்கும் என்ற எண்ணப்பாட்டை கைவிட்டுவிட்டு ஆயுதம் ஏந்திப் போராடி எம்மை நாமே பாதுகாத்துக் கொள்வதுடன் எமது மண்ணையும் எதிரியின் பிடியில் இருந்து விடுவிக்கப் பாடுபடுவோம். இந்த உன்னத நோக்கத்திற்காக ஆயுதப் போரில் இணையும் படி எமது இளைஞர்களையும் -இளம் பெண்களையும் நாம் அன்புடன் அழைக்கின்றோம். இவ்வாறு தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறையினர் அறிக்கை மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இவ்வறிக்கையின் முழு விபரமும் வருமாறு;

இன்று தமிழ் மக்கள் ஒரு நெருக்கடியான சூழ்நிலையைச் சந்தித்துள்ளனர்.

இன அழிப்பையே நோக்காகக் கொண்ட சிங்களப் படைகளின் மூர்க்கத்தனமான தாக்குதல்களுக்கு பொதுமக்கள் உட்படுத்தப் பட்டுள்ளனர்.

[illegible] ஆலயங்கள், சந்தைகள், வீடுகள் என்று பொதுமக்கள் நிலைகள் மீது கண்மூடித்தனமான விமானத் தாக்குதல்களையும் எறிகணைகள், மற்றும் பீரங்கிக் குண்டுத் தாக்குதல்களையும் சிங்களப் படைகள் தீவிரப்படுத்தியுள்ளன.

கடந்த ஒரு மாதத்தில் மட்டும் இவ்விதமான குண்டுத் தாக்குதல்களில் 53 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். 98 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

பொதுமக்களை இலக்காகக் கொண்ட பெரும்போர் ஒன்றை சிங்களப் படைகள் ஆரம்பித்து விட்டன என்பதையே கண்மூடித்தனமான இக்குண்டுத் தாக்குதல்கள் கோடுகாட்டுகின்றன.

பூரண பொருளாதாரத்தடை அரசின் நோக்கம் அதுவே

இதன் ஒரு அங்கமாகவே, யாழ் தேவி என்ற பெயரில் சிங்களப் படைகள் ஓர் இராணுவ நடவடிக்கையைச் செய்து கிளாலிப் பகுதியை ஆக்கிரமித்து பொதுமக்களின் போக்குவரத்தை அடியோடு துண்டிக்க முயன்றன.

ஆனால் இப்படையெடுப்பில் சிங்களப் படைகள் சந்தித்த பேரிழப்புகள் அதன் நோக்கத்தையே சிதைத்துவிட்டது. அதனால், ஆக்கிரமித்த கிளாலிப் பகுதியை விட்டு பின்வாங்க வேண்டிய நிர்ப்பந்தம் சிங்களப் படைத்துறைக்கு ஏற்பட்டது.

இதனால், கிளாலியில் நிரந்தரமாகத் தரித்து நின்று பொதுமக்களின் போக்குவரத்தைத் தடை செய்து குடாநாடு மீதான பூரண பொருளாதாரத்தடையை நடைமுறைப்படுத்தி, பொதுமக்களைத் துன்புறுத்த நினைத்த சிங்கள அரசின் எண்ணம் கைகூடவில்லை.

இதே போன்று தான் முன்னரும் குடாநாட்டுடனான தரைப் பாதைகளை ஆக்கிரமித்த சிங்கள அரசு, தமிழ் மக்கள் மீது விரித்த பொருளாதாரத்தடையை மேலும் இறுக்கி பொதுமக்களைத் துன்புறுத்த விரும்பியது.

கிளாலியூடான பயணம் சிங்கள அரசிற்குச் சவால்

எனினும், கிளாலிக் கடற்பாதையூடாக மக்கள் பயணம் போய் தங்களது வாழ்க்கைப் படகை ஓட்டத் தொடங்கியபோது சிங்கள அரசு தனது கடற்படையை ஏவிவிட்டு இந்த மக்கள் போக்குவரத்தை தடுத்து நிறுத்த முயற்சி செய்தது.

ஆனால், கடற்புலிகளின் தீவிர செயற்பாடுகளினாலும், துணிகரமான தாக்குதல் முறைகளினாலும் பயணிகளின் படகுப் போக்குவரத்திற்குப் பாதுகாப்பு கிடைத்தது. இது சிங்களக் கடற் படைக்கு சவாலாகவே [illegible] துவிட்டது.

விளைவு, கிளாலிக் கடல் சிங்களக் கடற்படையினதும், கடற்புலிகளினதும் பிரதான பொருதுகளமாக மாறியது.

பொதுமக்களின் படகுகளை அழிப்பதையே இலக்காகக் கொண்ட சிங்களக் கடற்படைக்கும் பொதுமக்களைப் பாதுகாப்பதையே இலட்சியமாகக் கொண்ட கடற்புலிகளுக்கும் இடையில் தினந்தோறும் கடற்சண்டைகள் நடைபெறத் தொடங்கின.

இறுதியில் 25-8-93 அன்று கிளாலிக் கடலில் நடந்த பெரியதொரு கடற்சண்டையும் அதன் இறுதியில் நிகழ்ந்த கரும்புலித் தாக்குதல்களும் சிங்களக் கடற்படையை கிளாலிக் கடலில் தூரவிலகியிருக்கச் செய்துவிட்டது.

தனது கடற்படையைக் கொண்டு மக்களின் படகுப் பாதையைத் தடுத்து நிறுத்தலாம் என்று நம்பியிருந்த சிங்களப் படைத்துறைத் தலைமைக்கு அது இயலாதது என்று புரிந்துவிட்டது.

இந்த நிலையில்தான் பெரும் எடுப்பிலான ஆகாயத் தாக்குதல்களின் உதவியுடன் டாங்கிகள், கவச வாகனங்கள், பீரங்கிகளின் சகிதம் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட சிங்கள இராணுவத்தையும் பயன்படுத்தி கிளாலியை ஆக்கிரமிக்க சிங்களப் படைத்துறை திட்டமிட்டது.

ஆனால், சிங்களப் படைத்துறைத் தலைமை எதிர்பார்த்தது போல, அப்படை நகர்த்தல் இலகுவாக அமையவில்லை.

இதனால், கிளாலியைப் படையினர் கைப்பற்றியிருந்தும் நிரந்தரமாகத் தங்கியிருக்க இயலாது ஆனையிறவுத் தளத்திற்கே பின்வாங்கிவிட்டனர்.

இனப்படுகொலை மூலம் போராட்டத்தை ஒடுக்கத் திட்டம்

ஆனால், இன்னொரு முனையால் வேறொரு படையெடுப்பை நடாத்த சிங்களப் படைகள் ஆயத்தம் செய்கின்றன. அதற்காக, இருபதாயிரம் துருப்புக்கள் ஆயத்த நிலையில் வைக்கப்பட்டிருக்கின்றன.

இந்தவிதமான ஒரு பெரிய படையெடுப்பு பரந்தளவில் குடாநாடு மீது நடைபெறுமாக இருந்தால் பொதுமக்களை சிங்களப் படையினர் எவ்வாறு [illegible] பார்க்கவே [illegible]

பல்லாயிரக்கணக்கில் இளைஞர்களையும், இளம் பெண்களையும் கொன்று குவிக்க முனைவர். காட்டுமிராண்டித்தனமான படுகொலை முறைகளையும், சித்திரவதை வடிவங்களையும் பயன்படுத்தி எமது இளம் சந்ததியை அழிக்க முனைவர்.

சிங்களவர்களாலேயே மேற்கொள்ளப்பட்ட ஒரு சாதாரண கிளர்ச்சியை ஒடுக்க அறுபதாயிரம் சிங்கள இளைஞர் -யுவதிகளை கொன்று குவித்ததில் பிரதான பாத்திரம் வகித்த சிசில் வைத்தியரட்னாதான் இப்போது இந்த யாழ் குடாநாடு மீதான படையெடுப்பை நடத்துகின்றார். அப்படியாயின், அந்த இராணுவ ஜெனரலின் கட்டளையின் கீழ் செயற்படும் சிங்களப் படைகள், தமிழ் இளைஞர், யுவதிகளை எப்படி வதைப்பர், படுகொலை செய்வர் என்பதை ஊகித்தறிய முடியும்.

தமிழினப் படுகொலை மூலம் விடுதலைப் போராட்டத்தை ஒடுக்குவதுதான் சிங்களப் படைகளின் திட்டம்.

இத்திட்டத்தின்படிதான் தென்தமிழீழத்தை ஆக்கிரமித்த சிங்களப் படைகள் அங்கே பெருந்தொகையில் தமிழ் மக்களைக் கொன்றொழித்து அவர்களது பொருளாதார வளங்களை அழித்தொழித்து தீவிரமான முறையில் தமிழினப் படுகொலையைச் செய்துள்ளன.

அதைத்தான் வடதமிழீழத்திலும் குறிப்பாக யாழ் குடாநாட்டிலும் செய்வதற்கு அரச படைகள் ஆயத்தங்கள் செய்கின்றன.

குடாநாடு சிங்களப் படைகளின் கைகளில் விழுமானால், தென் தமிழீழத்தில் நடந்ததைவிட பன்மடங்கு தொகைகளில் படுகொலைகளையும், பாலியல் வன்முறைகளையும், சித்திரவதைகளையும் சிங்களப் படைகள் மேற்கொள்ளும் என்பது வெளிப்படை.

துணிவாகவும் தீவிரமாகவும் செயற்பட வேண்டிய நேரம்

எனவே, அடிபாடமாக அடிமைகளைப் போல, சிங்களப் படைகளின் கைகளால் படுகொலை செய்யப்படுவதைவிட ஆயுதமேந்தி சிங்களப் படைகளுக்கு எதிராகப் போராடுவதன் மூலம் எமது இனத்திற்கு வரவிருக்கும் பேராபத்தைத் தடுத்து நிறுத்த முடியும்.

அதேவேளை, பெரும் படையெடுப்பு ஒன்று நடக்கப் போகின்றதே, நாம் கொல்லப்படப் போகின்றோமே, அழிவுகள் வரப் போகின்றனவே என அச்சத்துடன் மக்கள் முடங்கியிருக்க முனையக் கூடாது. மாறாக ஒரு தற்காப்பு நடவடிக்கைக்காக எம்மை நாமே தயார் படுத்தத் தொடங்கவேண்டும்.

முன்னரைவிட மிகத் தீவிரமாகவும், துணிவாகவும் திடமாக சிந்தனையுடனும் செயற்பட வேண்டிய நேரம் வந்துவிட்டது.

தம்மையும், தமது குடும்பத்தவர்களையும், தத்தம் ஊர்களையும் சிங்களப் படைகளிடம் இருந்து பாதுகாக்க வேண்டிய தேவை மக்கள் எல்லோருக்கும் எழுந்துவிட்டது.

நம்மை நாமே பாதுகாக்க ஆயுதமேந்திப் போராடுவோம்

இனியும் பேச்சு வார்த்தைகள் என்றும், சமாதான முயற்சிகள் என்றும் வீண் நம்பிக்கைகளுக்குள் எமது மக்கள் அல்லலுறக் கூடாது.

பேச்சும் இல்லை, சமாதான முயற்சிகளும் இல்லை என்று அரசே திட்டவட்டமாக வெளிப்படையாக அறிவித்துவிட்டது. படையெடுப்புகள், இராணுவ அணுகுமுறைகள் மூலமே இனப்பிரச்சினையைக் கையாள அரசும், படைத்துறைத் தலைமையும் ஏகோபித்த முடிவை எடுத்துவிட்டன. இந்தக் கடும் போக்கை சிங்கள தேசத்தின் அனைத்துத் தரப்பினருமே அங்கீகரித்தும்விட்டனர்.

இந்த நிலையில் அமைதி வழிமுறையில் தீர்வு கிடைக்கும் என்ற எண்ணப்பாட்டைக் கைவிட்டுவிட்டு ஆயுதமேந்திப் போராடி எம்மை நாமே பாதுகாத்துக் கொள்வதுடன் எமது மண்ணையும் எதிரியின் பிடியிலிருந்து விடுவிக்கப் பாடுபடுவோம்.

இந்த உன்னத நோக்கத்திற்காக ஆயுதப் போரில் இணையும்படி எமது இளைஞர்களையும் -இளம் பெண்களையும் நாம் அன்புடன் அழைக்கின்றோம்.

இது ஒரு அவசரமான அழைப்பு

எமது தாய்த் திருநாட்டின் இந்த அறைகூவலுக்கு உடனடியாகவே செவி சாய்க்கும்படி இந்த மண்ணின் மைந்தர்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

தமிழீழ மக்களைப் பொறுத்தவரையில் போராடினால்தான் வாழ்வுண்டு. நாம் இணைந்து போராடி எம்மையும், எமது குடும்பத்தவர்களையும், எமது ஊர்களையும் பாதுகாப்போம். ■

இராணுவத்திலிருந்து ஓடியோருக்கு மன்னிப்பு வழங்க வேண்டும்

*** சு.க. எம்.பி. கோரிக்கை**

இராணுவத்திலிருந்து தப்பியோடிய பத்தாயிரம் பேரையும் மன்னிப்பு வழங்கியோ, திருத்தங்கள் விதித்தோ மீண்டும் இராணுவத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும். அல்லது இளைஞர் விவகார அமைச்சு இவர்களுக்கான திட்டம் ஏதையாவது தயாரிக்க வேண்டும். இல்லையேல், பாரதூரமான விளைவுகள் ஏற்படலாம் என்று சுதந்திரக்கட்சி பாராளுமன்ற உறுப்பினரான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சின் சட்டமூலம் ஒன்றின் மீதான இரண்டாவது வாசிப்புத் தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில், இந்தப் பத்தாயிரம் பேரும் இந்த நாட்டின் இளைஞர் அணியினர், இவர்களது பிரச்சினையில் நாம் அலட்சியமாக இருந்தால், பாரதூரமான விளைவுகள் ஏற்படலாம் என்றும் எச்சரிக்கை செய்தார். ■

குண்டு துளைக்காத வாகனங்கள் இராணுவத்தினரின் பாவனைக்கு

*** மக்கள் வங்கி வழங்கியது**

மக்கள் வங்கியினால் கொள்வனவு செய்யப்பட்ட குண்டு துளைக்காத வாகனங்கள் இராணுவத்தினருக்கு வழங்கப்பட்டுள்ளன. தனது பணம் நகைகளைப் பாதுகாப்பாகக் கொண்டு செல்வதற்காக பல இலட்சம் ரூபா பெறுமதியான துப்பாக்கி ரவைகள் துளைக்காத வாகனங்கள் நான்கு மக்கள் வங்கியினால் கொள்வனவு செய்யப்பட்டன. எனினும் இவ் வாகனங்கள் பயன்படுத்தப்படாமல் இருந்த நிலையில் தற்போது இராணுவத்தினரிடம் அவை ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, மக்கள் வங்கி தனது தேவைக்காக இத்தகைய வாகனங்கள் நான்கைக் கொள்வனவு செய்யவுள்ளதாகவும் தெரிய வருகிறது. ■

தமிழ் ஆவணக்காப்பகம் Tamileelam Archive

13 . 02. 1987

அன்று இரவு நீகனது குடும்பத்தைச் சேர்ந்த எட்டுப்பேர் சிங்களப் படைகளினால் வெட்டிக் கொல்லப்பட்டனர். நீகனது அம்மா, நீகனது அக்கா, அவரின் கணவனும் மூன்று பிள்ளைகளும், ஒரு நெருங்கிய உறவுக்காரரும் கொல்லப்பட்டனர். இந்த வெறிச் செயல் நீகனை மேலும் கொதித்தெழச் செய்தது. எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றியது போலானான்.

இப்படியிருக்கும் போது தான், வடமராட்சி மக்களை படுகொலைசெய்ய வந்த, சிங்களப் படைகளுடன் சண்டை செய்ய மட்டக்களப்பிலிருந்து நீகன் ஒரு அணியுடன் வந்திருந்தான்.

சண்டையைச் சிறப்பாக நடத்தி விட்டு, மீண்டும் மட்டக்களப்புக்கு வந்த பிறகு, அமைதிப் படை என்ற பெயரில் இந்திய ஆக்கிரமிப்புப் படை தமிழீழம் வந்தது. ஒரு சில மாதத்திற்குள்ளேயே தமது அமைதி முகமூடியைக் கழற்றிவிட்டு, ஆக்கிரமிப்பு சுயரூபத்தைக் காட்டியது.

அந்த வேளையில், மட்டு -அம்பாறைத் துணைத்தளபதியாக நீகன் இருந்தான். மீண்டும் மீண்டும் மன்னிப்பு அளிக்கப்பட்ட போராட்ட விரோதிகள், மீண்டும் இந்தியப் படையுடன் சேர்ந்து தேசத்துரோகியானார்கள். "இவர்களுக்கு இனியும் மன்னிப்பு வழங்குவதே தேசவிரோதச் செயல்" என்று நீகன் கூறுவான்.

அந்த நாட்களில் மட்டக்களப்பு நகருக்குப் புலிகள் செல்வது முற்றாக மட்டுப்படுத்தப்பட்டது. இதற்குக் காரணம், இந்தியப் படையின் திறமையல்ல, தேச விரோதிகளின் துரோகம்தான்.

சுற்றிவளைப்புகள் மூலம் பிடிக்கப்படும் எமது ஆதரவாளர்களை இந்தியப் படை இந்தத் துரோகிகளிடம் ஒப்படைப்பர். உடனேயே வெட்டியோ, சுட்டோ கொல்லப்படுவர்.

தேசத்துரோகிகளின் கொட்டத்தை அடக்க எண்ணிய மட்டக்களப்பு -அம்பாறை மாவட்ட விசேட தளபதி கருணா அம்மான் இந்தப் பொறுப்பை நீகனிடம் கொடுத்தார். தந்திரோபாயங்கள் மூலமும், தாக்குதல்கள் மூலமும் தேசவிரோதிகளின் பலத்தை நீகன் சிதறடித்தார்.

போராளிகள் ஒழுக்கம் - கட்டுப்பாடுகளில் சிறந்து விளங்க வேண்டும் என்பதில் கவனமாக இருக்கும் அதேவேளை, போராளிகளை புலமை சார்ந்த செயல் வீரர்களாக உருவாக்குவதில், நீகன் எப்போதும் அக்கறையாக இருப்பார். இப்படித்தான் ஒரு முறை இந்தியப் படை வாகனத்திற்கென கண்ணி ஒன்று புதைக்கப்பட்டது. ஒரு போராளியை அழைத்து, நீகன் சொன்னார் -"நாகேஸ் நீதான் சரியான நேரத்தில் கண்ணியை வெடிக்கச் செய்ய வேணும்". அதற்கு அந்தப் போராளி, "நான் சரியாக அடிக்கமாட்டன் அண்ணை" என்று அவநம்பிக்கைப்பட்டான். ஆனாலும் நீகன் அந்தப் போராளிக்கு உற்சாக மூட்டி, அவரைக் கொண்டே கண்ணிவெடியை வெடிக்கச் செய்தார். அதில், ஒன்பது இந்தியப் படை பலியாகியது. இன்று அந்தப் போராளி ஒரு கண்ணிவெடி நிபுணராகவே வளர்ந்து விட்டான். இவ்விதம் ஆக்கிரமிப்புப் படைகளுக்கும், அடிவருடிகளுக்கும் நீகன் கொடுத்த அதிரடிகளை அடுக்கிக் கொண்டே போகலாம்.

1989 மே மாதம் ஒரு நாள், அதிகாலை இறக்காமம் என்ற கிராமத்தை இந்தியப் படைகள் சுற்றி வளைத்து விட்டன. நீகனும் இன்னுமொரு போராளியும் பொதுமக்களுடன் சேர்த்துப் பிடிக்கப்பட்டு விட்டனர். பதற்றமடையாத நீகன், தப்பியோடத் திட்டத்தை வகுத்துச் சந்தர்ப்பத்துக்காக காத்திருந்தான். கைது செய்யப்பட்டவர்கள் வரிசையாக நிறுத்தப்பட்டு, அடையாளம் காணும் படலம் ஆரம்பமாகியது. ஒரு முனையில் அமைதியாக நின்ற போராளியிடம் நீகனின் பார்வை செல்கின்றது. சைகையை விளங்கிக்கொண்ட அந்தப் போராளி தருணம் பார்த்து அருகிலிருந்த கரும்புப் பற்றைக்கூடாக ஓட்டமெடுக்கின்றான். அனைத்துப் படையினரது பார்வையும் அங்கே திரும்ப அதைப் பயன்படுத்தி நீகனும் நழுவி விடுகிறான்.

இது நடந்த சில மணி நேரத்தின் பின் தாங்கள் பிடித்தவர்களுள் ஒருவன்தான் இந்தியப் படைக்கும், தேசத்துரோகிகளுக்கும் சிம்மசொப்பனமாக இருந்த தளபதி நீகன் என்பதை அறிந்து, அந்த ஆத்திரத்தை அங்கு நின்ற மக்கள் மீதே காட்டினர்.

ஒரு மாவீரனைத் தப்ப வைத்த பெருமையில், இந்தியனதும் தேசத்துரோகிகளினதும் அடிஉதைகளை வாங்கினர்.

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், இந்தியப் படை உருவாக்கிய ரி.என்.ஏ. என்ற கூலிப் படை தமிழ் மக்களை வாட்டி வதைத்து வந்தது.

1989 ஆம் அண்டின் பிற்பகுதியில், இந்தியப் படை தமிழீழத்தைவிட்டு வெளியேறத் தொடங்கிய காலத்தில் இந்தக் கூலிப் பட்டாளத்தை நன்கு பலப்படுத்திவிட்டுச் செல்ல இந்தியா முயன்றது. ஒரு நாட்டின் படைகள் பயன்படுத்தும் அதிநவீன - சக்திவாய்ந்த படைக்கலன்களை வழங்கி இக்கூலிப் படையை இந்தியா வளர்த்துவிட்டது. இந்

-லெப். கேணல் நீகன்

தியப் படை வெளியேறியபின் இக் கூலிப்பட்டாளம் தனது சொந்தக் காலில் நின்று புலிகளுக்கெதிராகப் போர் செய்யும் என இந்தியா நினைத்தது.

அம்பாறை மாவட்டத்திலிருந்து இந்தியப்படை வெளியேறியபின், இந்தத் துரோகிகளது கூடாரங்களைத் தகர்த்து அழிக்கப் புலிகள் திட்டம் தீட்டினர்.

அம்பாறை மாவட்ட அடர்ந்த வனத்தின் ஒரு பகுதியில், தேங்காய் [illegible] அமைக்கப்பட்ட துரோகிகளின் முகாம் அமைப்பைப் பற்றி தளபதி கருணா அம்மான் விளக்கிக் கொண்டிருந்தார். லெப். கேணல் நீகன், மேஜர் அன்ரனி உட்பட பல போராளிகள் அதை அவதானித்துக் கொண்டிருந்தனர். திருக்கோவில் பகுதியில் அமைந்திருந்த ரெலோ, மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ். முகாம்களின் மாதிரி அமைப்பே அதுவாகும்.

ரெலோ முகாமை மேஜர் அன்ரனியின் தலைமையிலும், ஈ.-பி.ஆர்.எல்.எவ். முகாமை நீகனின் தலைமையிலும் சென்று தாக்கி அழித்து ஆயுதங்களைக் கைப்பற்றி வரவேண்டும் என்று கருணா அம்மான் தேவையான விளக்கங்களையும் ஆணைகளையும் பிறப்பித்துக் கொண்டிருந்தார்.

05. 11. 1989 அன்று திருக்கோவிலில் அமைந்திருந்த துரோகிகள் முகாம் இரண்டும் திட்டமிட்டபடி தாக்கி வெற்றிகொள்ளப்படுகின்றன. முகாமைவிட்டுப் பயந்தோடிய துரோகிகளை திருமலை எல்லைவரை நீகன் துரத்தி அடிக்கின்றான். திருமலையிலும் இதே வதைபடலம். துரோகிகள் மீது தொடர்கின்றது. இறுதியில் இந்தியப் படைகளுடன் சேர்ந்து இத் துரோகக் கும்பல்களும் இந்தியாவுக்குப் போய்ச் சேருகின்றன.

இந்திய ஆக்கிரமிப்புப் படைகளுக்கெதிரான போரில், மட்டக்களப்பு -அம்பாறைப் பிராந்தியத்தில் புலிகள் பெற்ற வெற்றிகளுக்கும், போராட்ட வளர்ச்சிக்கும் லெப். கேணல் நீகன் ஆற்றிய பங்கு அளப்பரியது. இந்தப் பிராந்தியத்தின் போராட்ட வரலாற்றில், நீகனுக்கென்று ஒரு அத்தியாயம் உண்டு.

இந்தியப் படையின் வெளியேற்றத்துடன் தற்காலிகப் போர் ஓய்வொன்று வருகின்றது. இந்த வேளையில்தான், நீகன் ஒரு வீரன் மட்டுமல்ல, அவன் ஒழுக்கமும் கட்டுப்பாடும் நிறைந்த பண்பாளன் என்றும் மக்கள் காண்கின்றனர். அத்துடன் ஒவ்வொரு புலிவீரனையும் ஒழுக்கமும் -கட்டுப்பாடும் நிறைந்த போராளியாக நெறிப்படுத்துவதில் -வளர்ப்பதில் நீகன் ஆர்வம் காட்டுகின்றான்.

> மாற்றானின் பிடியிலிருந்து எமது மண்ணை மீட்டெடுக்க - நாம் மரணத்தை ஏற்கவும் தயாராகவேண்டும்
>
> -லெப். கேணல் நீகன்

[illegible] புலிகள் இயக்கத்துடன் போர் நிறுத்தத்திற்கு இணங்கியிருந்த பொழுதிலும், சிங்களப் படையானது மறைமுகமாக ஒரு போருக்குத் தன்னை ஆயத்தப் படுத்திக் கொண்டிருந்தது. 10.06.1990 அன்று மீண்டும் போர் தொடங்கியது. ஆரம்பத்தில் சிங்களப் படை பலத்த இழப்பைச் சந்தித்தது.

தென் தமிழீழத்தில் சிங்களப் படைக்கு ஏற்பட்ட பாரிய இழப்பைத் தொடர்ந்து அரசின் முழுப் பார்வையும் அங்கே திரும்பியது. பாரிய படைஎடுப்புகளுக்கு உத்தரவிட்டது.

இப்படித்தான் சண்டை தொடங்கி இரு மாதங்களின் பின், பாலையடிவெட்டை என்ற பகுதிக்கு முன்னேறி வருகின்ற படையினர்க்கு நல்ல பதிலடி கொடுப்பது என்ற திட்டத்துடன் கருணா அம்மானும் நீகனும் செயற்படுகின்றனர். இராணுவத்தின் நகர்வை, அதன் பலத்தை -பலவீனத்தை அறிந்துவர இன்னொரு போராளியையும் அழைத்துக்கொண்டு 16. 07. 1990 அன்று நீகன் செல்கின்றார்.

அந்த வேளையில் எதிர்பாராத விதமாக இன்னொரு முனையில் இருந்து எதிர்ப்பட்ட சிங்களப் படை நீகனைக் கண்டுவிட்டுத் தாக்கத் தொடங்கியது. நீகன் குண்டடிபட்டு வீழ்ந்தார். நீகனால் நகர முடியவில்லை. நீகனைத் தூக்கிச் செல்லவும் மற்றப் போராளியால் முடியாமல் போய்விட்டது. இராணுவத்தினர் நெருங்கத் தொடங்கினர். நீகன் ஒரு மாவீரனைப் போல் -புலிகளுக்கே உரித்தான வீர உணர்வுடன் செயற்படத் தொடங்கினார். தனது இடுப்பில் கட்டியிருந்த கைத்துப்பாக்கியை சக போராளியிடம் கழட்டிக் கொடுத்தார். இரகசியமான சில தகவல்களை கருணா அம்மானிடம் சென்று தெரிவிக்கும்படி சொல்லிவிட்டுச் சக போராளியையும் தப்பிச் செல்லுமாறு ஆணையிட்டுவிட்டு, சயனைட் அருந்தி வீரச்சாவடைந்தார்.

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டத்தின் ஒரு 'காவலரண்' எல்லையிலே வீழ்ந்துவிட்டது. எதிரிகளிடம் அது கைப்பற்றப்பட [illegible] இல்லை.

எங்களுடைய நீகன் வீழ்ந்த இடம் எல்லை நிலம்தான்.

அதுதான் எங்களது விதை நிலமுமாகும்.

உறுதியை, வீரத்தை, ஒழுக்கத்தை எங்களுக்கெல்லாம் ஊட்டிய எங்கள் இதயத்தில் நிறைந்தவன் வீழ்ந்த இடம் விதை நிலம்தானே.

அந்த விதை நிலத்தில் -எல்லை நிலத்தில் -என்றோ ஒரு நாள் பட்டொளி வீசிப் பறக்கப் போகும் தமிழீழத்தின் தேசியக் கொடியில் உள்ள சிவப்பு நிறம், எங்களது நீகனின் கதையையும் சொல்லும். ■

அறியாத நீகனின் வரலாற்றுச் சிதறல்கள்

ஆட்களை அறிந்து அகமதை அளந்து
பழகுவதை உங்களின் ஆளுமை என்பேன்
ஏனெனில் பகை எதிர் சண்டையில் உங்கள்
மன நிலை வெளியிட்ட முகநிறம் கண்டேன்
அகதிகள் வந்தொரு குடியினை அமைத்து
ஆவலாய் அழைத்தனர் உங்களின் பெயரால்
மானம் காத்தவனே எங்கள் மாவீரனே
வெல்லாளின் மூத்த மகனே புலிக்கூட்டத் தளபதியே
எங்களின் வழிகாட்டியே முன்மாதிரியே உங்களின்
பின்னே இங்கொரு பேரணி,
அங்கே தெரிவது மக்கள் அணி

தாக்குதல்கள் தொடர்ந்தால்

சர்வ அதிகாரமுள்ள ஒரு நாட்டை உருவாக்கும் போராட்டம் தொடரும்

■ காமன்வெல்த் தலைவர்கள் மகாநாட்டில் புலிகள்

"இலங்கையின் வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் தமக்குரிய அரசு ஒன்றைத் தெரிவு செய்யும் உரிமை உள்ளவர்கள். எனவே அவர்களது இந்த உரிமையை உடனடியாகச் சர்வதேச சமூகம் அங்கீகரிக்க வேண்டும்" என, இவ்வாண்டு மாசி மாதம் ஜெனீவாவில் நடைபெற்ற 49 வது மனித உரிமைகள் பற்றிய சர்வதேச ஆணைக்குழுவில் பங்குபற்றிய பதினைந்து அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் தீர்மானம் நிறைவேற்றின. இந்த அரச சார்பற்ற சர்வதேச நிறுவனங்கள் நிறைவேற்றிய இக் கோரிக்கைக்கு பொதுநல அமைப்பு நாடுகளின் தலைவர்களாகிய நீங்களும் மதிப்பளித்து ஆதரவு நல்க வேண்டும். தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படுமானால், கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக இலங்கைத் தீவில் தமிழீழ மக்கள் அனுபவிக்கும் இனஒழிப்பு நடவடிக்கைகளுக்கும், உயிரிழப்புகளுக்கும் மாற்றுப் படக்கூடிய தீர்வினைக் காண முடியும் என நாம் நம்புகிறோம். இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமிழ் மக்களின் தாயக பூமியாக அங்கீகரிக்கப்படும் வகையில் முன் வைக்கப்படும் சமஷ்டி அமைப்புக் குறித்து தாம் பரிசீலனை செய்யத் தயாராக இருப்பதாக தமிழீழ மக்களின் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தெரிவித்துள்ளார். மீண்டும் மீண்டும் புலிகள் இதனை வலியுறுத்தி வருகின்றபோதிலும், சிறிலங்கா அரசு தமிழ் மக்களின் தாயகத்தை வடக்கு கிழக்கு எனக் கூறுபோட்டு இரண்டாகப் பிரிக்கும் முயற்சியில் பகீரதப் பிரயத்தனம் செய்து வருகின்றது.

சிறிலங்கா அரசு தொடர்ந்தும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை மறுத்து அவர்களை நசுக்கி வருமானால், தமிழ் மக்கள் தமக்கென சர்வ அதிகாரங்களும் கொண்ட ஒரு நாட்டை உருவாக்குவதற்கு தமது போராட்டத்தை தொடர்வதைத் தவிர வேறு வழியில்லை" என சைப்பிரசில் நடைபெற்ற காமன்வெல்த் நாடுகளின் தலைவர்களின் உச்சி மகாநாட்டில் கலந்துகொண்ட தலைவர்களுக்கு விடுதலைப்புலிகளின் சர்வதேச செயலகம் அனுப்பியுள்ள கடிதத்தில் தெரியப்படுத்தியுள்ளது. ■

தமிழீழக் கல்வித் தேர்வு

தமிழீழக் கல்வி மேம்பாட்டு பேரவையினால் ஆண்டுதோறும் நடத்தப்படும் தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வு இந்த ஆண்டு (1993) திட்டமிட்டபடி நடைபெறுமெனவும் பாடசாலைகளுக்கு அனுமதி அட்டைகளும் நேர அட்டவணைகளும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன எனவும், தேர்வு ஆணையாளர் தெரிவித்துள்ளார். ■

வீரவணக்கம்...

வாழ்க்கையை
விடுதலைப் போரினாலும்
மரணத்தை
அஞ்சாத தியாகத்தாலும்
கடைசிவரைக்கும்
கனப்படுத்தி
பூமிகனக்கப்
புதைந்த புலிகளே!

காலத்தின் செவிகளில்
உமது கர்ச்சனை...
யுகங்களின் நெற்றியில்
உமது திருப் பெயர்...

நாளைய மானுடப்
பிஞ்சு முகங்கள்
முகர்ந்து பார்க்கும்
ஒவ்வொரு பூவிலும்
உங்கள் உயிரின்
வாசம் கமழும்

நாளைய விடியலை
ஈழத்தில் எழுத
நீளும் கதிர்களில்
நிச்சயம் உமது
உயிரின் சூடும்
ஒன்றியிருக்கும்

துரோகத் தூசுப் படலத்தை
உயிரின் சுவாலையால்
பொசுக்கிய புலிகளே!

காலியான சயனைட் குப்பிகளும்
கழன்று கிடக்கும்
தோளன் துப்பாக்கிகளும்
இன்னும் உலராத
இளைய ரத்தமும்
அனைத்திலும் மேலாய்
உம் வாழ்வும் மரணமும்
விடுதலை வரித்த
அடையாளங்களாய்
வரலாற்று வரிகளில்
கனத்துக் கிடக்கும்
ரத்த சாட்சிகளே

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

ஓ! மாவீரனே

ஓயாத புயலே!
உனக்கென்னடா உறக்
தேயாத நிலவே
தேன் தமிழ் ஈழம்
உனை எப்படி மறக்கும்

உன் பெயர் கேட்டால்
உடைந்த எதிரிக்கு வே
மன்னவன் நீ உந்தன்
இழப்பினை எது வந்து

களத்தினில் செந்தண
கசக்கும் உன்விழி
கருணையின் உறைவி
உளத்தினில் உறுதியை
கொண்டவன் சாய்ந்த
உண்மையோ?
எங்ஙனம் தானடா!

நீ
தாயகம் காத்திட
தலைவனின் பாதையில்
தானை நடத்திய வீர
ஓய்தலின்றியே உழைத்
ஓய்ந்தது எப்படி?
ஒருமுறை வாய்திறந்து

கடலுக்கு வராத உறக்
உன
கண்ணுக்குள் எப்படி
கடலுக்குள் அளவிலா
உந்தன்
உடலெலாம் எங்கணும்
நிறைந்தது உயரிய வீர

வீரனுக்கேதடா சாவு
மா வீரனே!
உன் புகழ் விசும்பினை
பேரன்பு உனக்குண்டு
உன்
பேர் புகழ் வாழும் மக்க

ஆயுதம் ஏந்தினாய்
ஆயிரம் எதிரியைச் சாய்
நீயின்று ஏனடா
நித்திய ஓய்வினை ஏற்
ஓய்ந்திடோம் நாமினி
தொடர்கிறோம் உன்பணி
நிச்சயம் புலிக்கொடி ப

எங்கள்
உள்ளத்தில் உதிர்த்தி
உணர்வெல்லாம்
நிறைந்தனை எம்முயி
மாவீரன் உனக்கில்லை ம

நிலா தமிழின்தாசன்
('நாளை' கவிதைத் தெ



ும்!

கும்?

தோழா!

ம நின்றவன்!

யேன்!

கும்?
ம்!

மவும்!
மண்ணில்

ின் நெஞ்சில்!

தாய்!

ய்?

கும்!

தோழா!
ளம்.

ருப்பிலிருந்து)

நெருப்புக்குள்ளே நின்றவர்கள்!

ஏந்திய ஆயுதமும்
தாங்கிய சீருடையும்
கழுத்தில் சயனைட்
மாலை ஒன்றும் சுமந்தபடி
அன்று களத்தில் நின்றார்கள்.
ஆம் அவர்களன்று - பெரும்
நெருப்பிற்குள் நின்றார்கள்
அவர்கள் தான் எம் மாவீரர்கள்.

காக்கிச் சட்டையிட்டு
சீக்கியன் தொப்பிமாட்டி
தமிழீழ வீதிகளில்
தலைகீழாய் நடக்கையிலே
பொறுத்தது போதுமடா
பொங்கியெழுந்திடடா என
போர் முரசங் கொட்டி
தீப்பிழம்பாய் எழுந்து மறைந்தாரே
- எம் மாவீரர்கள்.

வரலாறு ஒன்று எழுதிவிட்டனர்
நெருப்புக்குள்ளே நின்ற எம் மாவீரர்கள்.
எப்படித் தெரியுமா?
தமிழீழம் என்ற மண் மீதிலே
குருதி தன்னை, எழுதும் மையாய்
தம்முடலை எழுது கோலாய்
பாவித்தன்றோ பாடல் தொடக்கம்
பாடமாய் எழுதினர்

■ குறிஞ்சிராணி

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



இளைஞர்கள் இல்லாத கிராமம்: சிறீலங்கா இராணுவம் விளைவித்த கொடூரம் !

"எல்லா ஆண்பிள்ளைகளும் அழிக்கப்பட்ட ஒரு கிராமம் உள்ளது. போவோமா பார்ப்பதற்கு?" என்று தோழன் கேட்டபோது, "எங்கே அது என்று ஆச்சரியத்துடன் கேட்டேன். மாத்தளை மாவட்டம் தம்புள்ளதேர்தல் தொகுதி, சிகிரியா பொலிஸ் பகுதியிலுள்ள பலுடாவே அந்தக் கிராமம்.

மூன்று தலைமுறைகளுடன் 25-தொடக்கம் 30 குடும்பங்கள் வாழும் புராதன கிராமம். இன்று இளைஞர்கள் இல்லாத இவ்வூரில் 79 வயதுடைய கடிகெதர உக்குபண்டாதான் பெரியவர். இவருக்கு 5பெண்பிள்ளைகள். இவரது இரண்டு ஆண்பிள்ளைகளும் இராணுவத்தின் அட்டூழியத்தால் அழிக்கப்பட்டுவிட்டனர்.

"எனது வாழ்க்கையில் எல்லாமாக இருந்தது இரண்டு ஆண் பிள்ளைகள்தான். எமது வீட்டுக் கதவை உடைத்து அவர்கள் இருவரையும் இழுத்துச் சென்றார்கள். அவர்கள் செய்த தீங்குதான் என்ன? காலையில் [illegible] கூலிவேலைசெய்யும் அவர்களுக்கு, அரசியலிற்குப் போக நேரமேது? பகலில் வேலைசெய்துவிட்டு, இரவில் வயலில் காவல் வேலைக்குப் போக, எமது குடும்பத்தில் இருந்ததே இந்த இரண்டு ஆண்பிள்ளைகள்தான். அந்தமாதிரியான இருவரையும் கொன்று விறகுபோல் கிரிபிஸ்ஸ சந்தியில் போட்டிருந்தார்கள். செய்தவர்களைத்தேடி அவர்களைக் கொன்று தின்றாலும் பரவாயில்லை".

"பலுடா குளத்தில் கொஞ்சத் தண்ணீர்தான் கிடைக்கும். இங்கு அரசாங்கத்தால் கிடைத்தது ஐந்தாம் வகுப்புவரையுள்ள பாடசாலை ஒன்றுதான். ஐந்தாம் வகுப்புக்குமேல் இங்கு எவரும் படித்ததில்லை."

"அவர்கள் இராணுவத்திற்கு மிகவும் ஆதரவாகத்தான் இருந்தார்கள். எத்தனையோ முறை தம்புள்ளைக்குச் சென்று இரத்தம் கொடுத்தார்கள். அப்படியானவர்களின் இரத்தத்தைத்தான் அந்தப் பாவிகள் குடித்துவிட்டார்கள்" என அந்த முதியவர் கூறினார்.

"அவர்களுக்கு நல்லது நடக்கக் கூடாது." என்று 63 வயதுடைய கமகெர உக்கு அம்மா தனது மகன் டிங்கிரி பண்டாவைக் கொன்றவர்களுக்குச் சாபமிட்டார். பாலுடாவேயில் இருக்கும் எல்லாத் தாய்மார்களும் அவ்வாறுதான் சாபமிடுகிறார்கள். அரசு கொடுத்த நட்டஈட்டில், 600 ரூபா கொடுத்து தங்கள் மகன்மாரின் படங்களை பெரியளவில் செய்து, புத்தரின் படத்திற்கு அருகில் வைத்துள்ளனர்.

"தகப்பன் இல்லாத பிள்ளையை இழுத்துச் சென்றார்கள் அத்துடன் பாடசாலை ஆசிரியரையும் இழுத்துக் கொண்டு போனார்கள். ஒரு எறும்பிற்குக் கூட துன்பம் செய்யாதவர்கள் என்று சொன்னேன். காலையில் பெல்வேகேர முகாமிற்கு வாருங்கள் பிள்ளையை அழைத்துச் செல்லலாம் என்று கூறினார்கள். நான் காலை 4மணிக்கு எழுந்து சென்றுகொண்டிருந்தபோது, இடைவழியில் நான் கண்டது விறகு கட்டைபோல் அடுக்கியிருந்த பிரேதங்களைத்தான். அவர்களுக்கிடையில் எனது மகனும் இருப்பதைக் கண்டேன். பிரேதத்தைக் கூட எடுத்துச் செல்ல விடவில்லை. அத்தனை [illegible] அவ்விடத்திலேயே [illegible] போட்டு எரித்தனர்".

"இதோ அரசால் வழங்கப்பட்ட மரணச் சான்றிதழ். இதில் தம்புள்ள பொது புதைகுழியில் அடக்கம் செய்யப்பட்டதாக இருக்கிறது. இது மீள முடியாத ஒரு பாவச் செயல். இந்த நாட்டில் அரசாங்கம் நடத்தும் [illegible] களுக்கும் கிடைக்க இருப்பது, குண்டு வெடித்து இறந்தவர்களுக்குக் கிடைத்த கதியே. அவர்களுக்கு எங்கள் சாபம் கிடைக்கும்" என அந்த மூதாட்டி கூறினார்.

வடக்கு கிழக்கு யுத்தத்தில் இராணுவத்தினர் இனத்திற்காக இறந்த தியாகிகள் என சிங்களவர் நினைக்கும் போது, பலுடாவே மக்கள் மரண அறிவித்தலில் தேடுவது, தங்கள் பிள்ளைகளைக் கொன்ற இராணுவத்தினர் இறந்துள்ளனரா? தமது சாபம் பலித்துள்ளதா? என்பதையே.

கடவுள் தங்களின் வேண்டுதலைச் செய்து முடித்துள்ளார் என்றும் கூறுகின்றனர். பலுடாவே மக்கள் எல்லோரும் தங்கள் பிள்ளைகளைக் கொன்ற பெல்வேகேர முகாமில் இருந்த கஜபா ரெஜிமென்ரின் குழு, யாழ்ப்பாணத்தில் குழுவாகவே கொல்லப்பட்டுவிட்டதாகக் கூறுகின்றனர்.

"எனது கணவனை அவர்கள் கொன்றபின், வந்த பொலிசார் கணவனைக் கொன்ற விபரத்தை ஒருவருக்கும் சொல்ல வேண்டாம் என்றும். அப்படிச் சொன்னால் இராணுவத்தினர் மிகுதிப் பேரையும் கொன்று, வீடுகளையும் எரித்து விடுவார்கள் என்று சொன்னார்கள். ஜே.வி.பி காரர் காட்டிலிருக்கும் போது, நாம் காட்டில் வயல் வேலைக்குச் சென்றால் அடிப்பார்கள். கடைசியில் ஆண்கள் எல்லோரையும் இராணுவத்தினரே கொன்றுவிட்டனர். எங்களுக்கு நடந்தது போல் இந்த உலகத்தில் எவருக்கும் நடக்கவில்லை" என்கிறார் கணவனை இழந்த 26 வயதுடைய சோமாவதி என்னும் பெண்.

இவர்களுக்கு இந்த அநியாயத்தைச் செய்தவர்கள் யார்? அவர்கள் இப்பொழுது எங்கு இருக்கிறார்கள்? 57 வயதுடைய கமகெதர ஜீன்பண்டா இவ்வாறு கூறுகிறார்.

"பெல்வேகேர அரச இராணுவம் தான் இந்த அநியாயம் செய்தது. அவர்கள் எல்லோரும் கஜபா ரெஜிமெண்டைச் சேர்ந்தவர்கள். அந்த முகாமிலிருந்து இரண்டு பேர் அத்தனபாலுகஜா அருகில் குண்டு வெடித்ததில் இறந்தனர். இதன் எதிரொலிதான் பாவப்பட்ட 22ஜீவன்கள், மிருகங்கள் போல் பலியாகக் காரணமாக அமைந்தது."

"குண்டு வெடித்தவுடன் [illegible] அந்த முகாமிலிருந்த 20 இளைஞர்களை, குண்டுவெடித்த இடத்திற்குச் சுட்டுக் கொல்லக் கூட்டிச்சென்றார்களாம். ஆனால் அந்த முகாம் பொறுப்பாளர் அவர்களை வேறு தேவைக்குப் பயன்படுத்தலாம் என்றும், கிராமத்து இளைஞர்களைப் பிடித்து சுட்டுக் கொல்லுங்கள் என்றாராம். இந்த விடயத்தை அங்கிருந்து விடுதலையாகிய சிகிரியா இளைஞர் ஒருவர் சொன்னார். எங்களுக்காக உங்கள் மகன்மார் இறந்தார்கள் என்றும் அவர்சொன்னார்.

இவ்வாறு சாட்சி சொல்லும் கமகெதர ஜீன்பண்டா, பரம்பரை பரம்பரையாக ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர். தனது சகோதரிகளின் கணவன்மாரை இராணுவத்தினர் கொன்றும் கூட கிராம மக்களின் வெறுப்பின் மத்தியிலும், அவர் ஐ.தே.க. ஆதரவாளராகவே இருக்கிறார். இதுபற்றி அவரிடம் கேட்டபோது

" என்ன செய்வது? பிறக்கும் போது நான் யூ.என்.பி காரன்,- வேறுயாருக்கு ஓட்டுப்போட"? என்றார்.

இவர்கள் எல்லோரும் ஆண்களைப் பிடித்துச் சென்றதைத்தான் பார்த்திருக்கிறார்கள். ஆனால் படுகொலையை நேரில் பார்த்ததுடன், உயிர்தப்பி வந்த அபேரத்ன கூறுவது என்ன? "1988ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 7ம் திகதி இரவு நாங்கள் பிடுங்கிக் கொண்டுவந்த பெரிய வெங்காயத்தை வெட்டிக்கொண்டிருந்தோம். வெளியே பட்டாசு வெடித்தது போல் சத்தம் கேட்டது. ஜே.வி.பி காலம் என்பதால் வெளியே செல்லப் பயந்து அறுவடை செய்திருந்த வெங்காயத்தின்மேல் படுத்துவிட்டேன். "வீட்டைத் திறவுங்கள், ஆண்கள் இருந்தால் வெளியே வாருங்கள் என வெளியேயிருந்து சத்தம் கேட்டது. கதவைத் திறக்க முன்பு கதவை உடைத்து உள்ளே புகுந்தனர். அண்ணனையும் என்னையும் வெளியே இழுத்து வந்தார்கள். ஜே.வி.பி இருக்கிறார்களா? பொய் சொன்னால் கொன்றுவிடுவோம்" என்றார்கள். எங்கள் சிங்கள இராணுவம் என்பதால் நான் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. "ஐயோ சாமி இங்கு ஒருவரும் இல்லை" என்றேன். அண்ணனை வாகனத்துக்குள் கொண்டு சென்றார்கள். மற்றும் சிலரை கொண்டு சென்று 45நிமிடம் எங்களுக்குத் தொடர்ந்து அடித்தார்கள்.

6 பஜ்ரோ வாகனத்தில் வந்த 20 அல்லது 30 இராணுவத்தினர் அங்கு இருந்தனர். நான்கு பேர் எங்களை, கை, கால், தடி, துவக்கு என்பவற்றால் அடித்தனர்.

எங்களை ஜீப்பில் ஏற்றி பன்சாலைக்குக் கிட்ட உள்ள கிணற்றில் எங்களில் இருவரைத் தள்ளிவிட்டார்கள். கரையிலிருந்த கற்களையும் எம்மேல் உருட்டிவிட்டனர். பின்னர்அமார் மேலும் 15 பேரைக் கொண்டுவந்து கிணற்றிற்குள் தள்ளினார்கள். சிறிது நேரத்தில் வெளியே இழுத்து கைகளைக்கட்டி ஜீப்பில் கொண்டு சென்றனர். போகும் வழியில் சடலங்கள் ரோட்டுக்குக் குறுக்கே இருந்தன. அவற்றில் ஒன்று எனது அண்ணனுடையது எனக் கண்டு கொண்டேன். ஜீப்புகள் அச்சடலங்களுக்கு மேலாக அவற்றை அரைத்துக் கொண்டு சென்றன. கிரிபிஸ்ஸ சந்தியில் எங்களை ஜீப்பிற்கு வெளியே இழுத்தெடுத்துவிட்டு, இராணுவத்தில் அல்லது பொலிசில் உங்கள் உறவினர்கள் இருக்கிறார்களா? எனக் கேட்டனர். எங்களுக்கு அவ்வாறு யாரும் இருக்கவில்லை.

மூன்று மூன்றுபேராக வரிசையாக முன்னேவரச் சொல்லி, முழங்காலில் இருக்கவிட்டு சுடத்தொடங்கிவிட்டனர். யாரும் கதைக்கவில்லை. அனைவரும் மரணபயத்தில் இருந்தோம். நான், கடைசியாகப்போன மூவரிலும் கடைசியாகத்தான் போனேன். எங்கள் மூவரையும் வரிசையாக இருக்கவைத்து, ஜே.வி.பி காரர் எங்கே எனக் கேட்டனர். எங்களுக்குத் தெரியாது என்றோம். எமக்குச் சற்றுத் தள்ளி இராணுவத்தினர் நின்றுகொண்டிருந்தனர். எங்களைச் சுடுவதற்காக முன்னால் இருவர் நின்றுகொண்டிருந்தனர். அவர்கள் எங்களைப் பார்த்து பார்த்து சுட்டுக் கொண்டிருந்தார்கள் முதலாவது ஆளைச் சுட்டபோது சடலம் இரண்டாவது ஆளின் மேல் சரிந்தது. இரண்டாவது ஆளைச் சுடும்போது நானும் இறந்துவிட்டதாக நினைத்தேன். இரண்டு பேருடைய சடலங்களும் என்மேல் சாய்ந்ததால் நான் விழுந்துவிட்டேன். [illegible] சிறிது சென்று திரும்பவும் சுட்டார்கள். ஒரு குண்டு கூட என்மேல் படவில்லை.

ஜீப்புகள் புறப்பட்டதும், மெதுவாகத் தவழ்ந்து சென்று மரத்தின் பின்னால் சிறிது நேரம் பதுங்கியிருந்தேன். கல் துண்டுகள் பிடித்ததால் ஏற்பட்ட காயம் தான் இருந்தது. முகம் முழுவதும் இரத்தமாக இருந்தது. அங்கிருந்து காட்டுக்குச் சென்று, கைக் கட்டுக்களைத் தேய்த்து அறுத்துக் கொண்டேன்" என்றார்.

இச்சம்பவத்தில் கணவனை இழந்தவர்கள் 25பேர். 25 பிள்ளைகள் தாய் தகப்பனை இழந்தனர். இவர்கள் அனைவரும் பத்து வயதிற்குட்பட்டவர்கள். இக்கிராமத்து ஆசிரியையை மணம் முடித்து சிகிரிய மகா வித்தியாலயத்தில் கல்வி கற்பித்து வந்த ஆசிரியர் ஒருவரும் இங்கு கொல்லப்பட்டார். கிராமத்தில் உள்ள 15 வயதுதொடக்கம் 40 வயதுவரையுள்ள ஆண்கள் அனைவரும் கொல்லப்பட்டனர். ■

நன்றி: ராவய

நிகழ்வும் நினைவும்...

'யாழ்தேவி' நடவடிக்கையினைப் பொறுத்தவரை அதனை முறியடிப்பது போராட்டத்திற்கு அவசியமானது.

நான் இதனைக் குறிப்பிடும் போது கிழக்கில் போராட்டம் வெற்றியினைத் தழுவுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டிய அவசியத்தினையும் குறிப்பிட்டே ஆகவேண்டும். தமிழீழப் பிரதேசம் முழுவதனையும் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கு போதுமான வளங்கள் இல்லாத போது, நான் முன்பு குறிப்பிட்டது போன்று, கட்டுப்பாட்டுப் பிரதேசங்களைப் பாதுகாத்தல், விடுவிக்கப்படாத பிரதேசங்களை விடுவிக்க முனைதல் போன்ற தெரிவு வரிசையைத்தான் கொள்ள முடிகின்றது. வடக்கில் கூடுதலான பிரதேசங்கள் கட்டுப்பாட்டில் இருப்பதனால், அப்பிரதேசங்களைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்தும் போது, வடக்கில் கணிசமான வளங்களைக் கொண்டிருத்தலும் அவசியமாகின்றது. வடக்கின் புவியியல் அமைப்பு, கிழக்கைக் கட்டுப்பாட்டினுள் வைத்திருப்பதனை விட வடக்கினைக் கட்டுப்பாட்டினுள் வைத்திருப்பதற்கு சாதகமாக அமைந்துள்ளது என்பதனையும் கவனத்தில் கொள்ள வேண்டும். விடுதலைப் புலிகள் தமது வளங்களைக் கூடுதலாக வடக்கில் வைத்திருப்பதனால் தான், வடக்கைக் கட்டுப்பாட்டினுள் வைத்திருக்க முடிகின்றது என நோக்குவதனை விட, புவியியல், இனப் பரம்பல் காரணமாக வடக்கினைக் கட்டுப்பாட்டினுள் வைத்திருப்பது இலகுவானது எனும் அடிப்படையிலும் நோக்க வேண்டும். உண்மையில் தற்போது விடுதலைப் புலிகள் இராணுவ நோக்கில் முதன்மைப்படுத்தும் பிரதேசம் எது எனக் கேள்வி எழுப்பின் அது 'மணலாறு'ப் பிரதேசமே என்பதே எனது பதிலாக இருக்கும். வடக்கையும் கிழக்கையும் இணைத்து நிற்கும் எமது இதயப்பிரதேசமாக அது விளங்குகின்றது. மணலாற்றில் நடைபெற்ற மோதல்களில் விடுதலைப் புலிகள் தொடர்ச்சியாகப் பிரயோகித்து வரும் பலத்தினைத் தொடர்ந்து அவதானித்தால் இதனைப் புரிந்து கொள்ள முடியும். அண்மையில் 'மண்கிண்டிமலை' இராணுவ முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கு இதயபூமி -1 என பெயரிடப்பட்டமை அங்கு இன்னும் பல இதயபூமித் தாக்குதல்கள் இடம்பெறலாம் என்பதனைச் சுட்டி நிற்கின்றது.

'தராகி' இப் பத்தியில் எழுதிய எல்லா விடயங்கள் தொடர்பாகவும் பதில் தர நான் முனையவில்லை. ஆனால் விடுதலைப் புலிகள், கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினைப் பாதுகாக்க முனைவதனை 'யாழ்ப்பாணம் முதல் கொள்கை'யாக பார்ப்பதனை விட்டு, கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினைப் பாதுகாப்பதனை, அதிலும் சேர்த்து முக்கியத்துவம் நிறைந்த பிரதேசத்தினைப் பாதுகாக்க முயலும் கொள்கையாகப் பார்ப்பதே பொருத்தமானது. இன்னொரு வகையில் கூறுவதாயின் 'யாழ்ப்பாணம் முதல் கொள்கை' எனப் பிரதேசரீதியாக நோக்குவதனை விட, ஒட்டுமொத்தமாக போராட்டத்திற்கு, கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினை இழப்பதனால் ஏற்படக்கூடிய பாதிப்பினைக் கவனத்திற் கொண்டு 'போராட்டம் முதல் கொள்கை'யாக நோக்கப்படுதலே பொருத்தமானது.

'தராகி'யின் பத்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பாக விரிவாக நோக்குவது, விடுதலைப் புலிகளின் இராணுவ மூலோபாயம், தந்திரோபாயம் தொடர்பான விரிவான கட்டுரை ஒன்றினாலேயே சாத்தியமாகும். 'நிகழ்வும் நினைவும்' போன்ற சிறு பத்தியினால் இது சாத்தியமாகாது. 'யாழ்ப்பாணம் முதல் கொள்கை' எனத் 'தராகி'யால் வர்ணிக்கப்படும் நடவடிக்கைக்கு

தொடர்ச்சி 9ம் பக்கம் ....

இலண்டனில்

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நடாத்திய "இருளும் ஒளியும்" கலைக்கோலம்

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பிரித்தானியக் கிளையினர், தமிழீழ மக்களின் புனர்வாழ்வுத் திட்ட நிதி நோக்கி நடாத்திய..., 'இருளும் ஒளியும்' தமிழ்க் கலைக்கோல நிகழ்ச்சி, கடந்த 31.10.1993 ஞாயிறன்று மாலை, அக்டன் நகர மண்டபத்தில், நிகழ்வுற்றது!

எமது தாய்மண்ணின் பலதரப்பட்ட, பல நிலைப்பட்ட பக்க விளைவுகளுடன் நிகழ்ந்து கொண்டிருக்கும் தமிழ்த்தேசிய இன விடுதலைப் போராட்டத்தின் போது, தமிழ் மக்கள் மீதான, சிறீலங்காவின் -சிங்கள பௌத்த அரசின் அத்துமீறிய, மனிதாபிமானத்திற்கு எதிரான தாக்குதல்களைத் தாக்குப் பிடித்து, தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்துடன் நம்மை நெருக்கமாகப் பிணைந்து நிற்கின்றார்கள் தமிழீழ மக்கள்.

பொருளாதார, மருத்துவ, உணவு, உடை, உறையுள் தேவைகளை புறக்கணிப்பதன் மூலம், ஒரு தேசிய இனத்தின் ஆத்மீக பலத்தினைச் சிதறடிக்கலாமென்ற நவீன அரசியற் தந்திரத்தை உபயோகிக்கும் முகமாக, எமது மக்களைப் பலத்த, பயங்கரமான, இருள் சூழ்ந்த நெருக்கடிகளுக்குள் சிக்க வைத்து நிற்கிறது, சிங்கள இனவாத அரசு! தேவை அதிகரித்துக் கொண்டு போக, அதற்கான விநியோகம் அருகிக் கொண்டு செல்ல மக்கள் தளர்ந்து, 'போராட்ட இயக்கத்திற்கும், தமது தேசிய இலட்சியத்திற்கும் எதிரான கிளர்ச்சிகளில் இறங்கக் கூடுமென்ற நப்பாசையுடன் செயற்பட்டு வருகின்றது இந்த 'தூரதரிசனமற்ற' ஒற்றைச் சிந்தனை கொண்ட அரசு.

தொடர்ச்சியான குண்டு, எறிகணைத் தாக்குதல்கள் மட்டுமன்றி போக்குவரத்துத் தடைகள் மூலமும், எமது மக்களின் பலத்தை நிலைகுலைய வைக்க நிற்கும் இந்த அரசின், எதேச்சையான இந்த நடவடிக்கைக்கு எதிரான போராட்ட காலப் புனர்வாழ்வு கருதி மட்டுமன்றி, ஒரு நீண்டகாலப் பொருளாதார மீட்பு நடவடிக்கைகளிலும், அபிவிருத்தித் திட்டங்களிலும், தேச நிர்மாண வேலைப்பாடுகளிலும், மிகவும் தீவிரமாக இயங்கி வருகின்றது தமிழர் புனர்வாழ்வுக் கழகம். உலக நாடுகளிலுள்ள தனது கிளைகளின் மூலம் தனது வேலைத்திட்டங்கள், வேலைப்பாடுகள், நிதி நிலைப்பாடுகளைப் புலம்பெயர்ந்து வாழ் தமிழ் மக்களுக்கும் மற்றும் அல்லரசு நிறுவனங்களுக்கும் வெளிப்படுத்தி வருகின்றனர். இந்த வகையில், பிரித்தானியாவில் வாழ்கின்ற தமிழ் மக்களின் ஆதரவு நோக்கி நடைபெற்றதே 'இருளும் ஒளியும்' தமிழ் கலைக்கோல நிகழ்ச்சியாகும்.

இதுபோன்ற 'தனியார் நலன்பேணாத' சமூகசேவை நிகழ்ச்சிகளுக்கு, இந் நாட்டின் தமிழ்க் கலைஞர்களையும், கலை நிகழ்ச்சிகளையும் ஒழுங்கு செய்வதிலுள்ள பிரச்சினைகளையும், தடைகளையும் பற்றிச் சொல்ல வேண்டிய தேவையே இல்லை. இதைவிட, இந்நிகழ்ச்சிகளுக்குப் பொதுமக்களைத் திரட்டுவதில் உள்ள சிக்கல்களையும் நாம் புறக்கணிக்க முடியாது! எனினும் அக்டனில் நிகழ்ந்த இந்தக் கலைக் கோலத்திற்குப் போதுமான ஆதரவினை அன்புத் தமிழ் மக்களும், கலையுலக

நண்பர்களும் தந்தமை, நமது தாய் மண்ணில் எமது மக்களுக்குள்ள அக்கறை, அறவே மங்கி விடவில்லை என்பதைக் காட்டியது!

திரு. தாமோதரம் அவர்களின், குத்துவிளக்கேற்றலுடன் ஆரம்பமான இந்நிகழ்ச்சிக்கு, புதுக் கோலம் நாட்டிய அஞ்சலி நிகழ்ச்சி, முத்தாரம் வைத்தது!

'இருள் கிழித்து மின்னுகின்ற கண்களே' என்ற புலவர் சிவநாதன் அவர்களின் பாடல் வரிகளுடன் ஆரம்பமான, இளைய சந்ததியினரின் இந்த நாட்டிய அஞ்சலி, திருமதி பத்மினி குணசீலன் அவர்களின் நட்டுவாங்கத்தையும், திருமதி அம்பிகா தாமோதரம் அவர்களின் இனிய குரலையும், திருமதி கலைவாணி இந்திரகுமார், திரு. முத்து சிவராசா அவர்களது இணைந்த பக்கவாத்திய இசையையும் தாங்கிய ஒலியிழையின் பின்னணியில் படைக்கப்பட்டது! கண்ணுக்கும், காதுக்கும், நெஞ்சுக்கும் விருந்தாக இது அமைந்தது!

இருளைத் தொடர்ந்து ஒளி பிறக்கும் என்ற உலக நம்பிக்கையினை உத்தரவாதப்படுத்தும் நிலையில் அமைந்த இந்தக் கலைக் கோலத்தின் இரண்டாவது நிகழ்ச்சியாக, புலவர் சிவநாதன் அவர்களால் நெறிப்படுத்தப்பட்ட 'யாருக்குப் புனர்வாழ்வு' என்ற கவிதா நிகழ்வு இடம்பெற்றது!

'புனர்வாழ்வு யாருக்கு?' என்ற புதிர்க் கேள்வியாகத் தொடங்கிய இக் கவிதா நிகழ்வு, தமிழீழ மக்களின் துயர நிகழ்வுகளை... வெளிக் கொணர்ந்ததோடு, புலம் பெயர்ந்து வாழ் மக்களின் எதிர்காலம் பற்றிய கேள்விக் குறியையும் வரைந்து சென்றது! இது எமது மக்களின் சிந்தனைக்கு விருந்தாகியது!

மூன்றாவது நிகழ்ச்சியாக, 'இராக தான சங்கமம்' என்ற இளைய இசைக் கலைஞர்களின் படைப்பு காதுக்கு விருந்தாகியது! திருமதி கலைவாணி இந்திரகுமார் அவர்களின் மாணவ மணிகளுடன், திரு. முத்து சிவராசா அவர்களது மாணவ முத்துக்களும், இணைந்து இந் நிகழ்ச்சியைத் தந்தனர்! அரங்கேற்றத்துடன் உறங்காது, எமது இளங் கலைஞர்கள், இனங்காணப்

பட்டு, வளர்க்கப்பட வேண்டுமென்ற ஒரு நிலைப்பாட்டினை, இந் நிகழ்ச்சி வலியுறுத்தியது!

கலைக்கோலத்தின் இறுதி நிகழ்ச்சியாக மட்டுமன்றி, உறுதி நிகழ்ச்சியாகவும் அரங்கேறியது, 'நா அங்கே பா இங்கே' என்ற கான மழை நிகழ்ச்சி!

அசையும்... நா அங்கே!
எழும் ... பா இங்கே!

என்ற கம்பீரமான, தீர்க்கமான குரலுடன் ஆரம்பித்த இந் நிகழ்ச்சி, எமது மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தின் மகத்துவத்தையும், எமது போராளிகளின் தரிசனத்தையும் விளக்கும் மணியான நிகழ்ச்சியாகி, கலைக்கோலத்திற்கு மகுடம் வைத்தது!

இந் நிகழ்ச்சியில், இளைய இசைக் கலைஞர்கள் பங்கு பற்றி, நாம் யாருக்கும் சளைத்தோமில்லை என்று நாதமெழுப்பி, எம்மையெல்லாம் வியப்பிலும் பரபரப்பிலும் ஆழ்த்தினர்! இந் நிகழ்ச்சி, எமது காதுகளுக்கும், நெஞ்சுக்கும் ஒரு புதிய தெம்பையும், நம்பிக்கையையும் தந்து நின்றது! யாழ். சீலனின் ஒலியமைப்பு மேற்பார்வையிலும் திரு. வாதன் அவர்களின் ஒளியமைப்பு மேற்பார்வையிலும் இந் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. மொத்தத்தில், எமது இன்னலைத் தொடர்ந்து இன்பம் பிறக்குமென்றும், கலக்கத்தைத் தொடர்ந்து நிம்மதி கிடைக்குமென்றும், குழப்பத்தைத் தொடர்ந்து அமைதி கிடைக்குமென்றும், எல்லாவற்றிற்கும் மேலாகப் போராட்டத்தைத் தொடர்ந்து விடுதலை கிடைக்குமென்றும் புத்தொளி வீசிச் சென்றது, தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பிரித்தானியக் கிளையினர் வழங்கிய 'இருளும் ஒளியும்' கலைக்கோல நிகழ்ச்சி!

நிறைவுகள் இங்கே கூறப்பட்டன! குறைபாடுகள் தாமாகவே உங்களை வந்து சேரவல்லன!

-நிறைவோதி-

வரலாற்றில் என்றுமில்லாத கட்டத்தில் இருக்கிறோம்

☆ ஜெனரல் கமில்டன் வனசிங்க

"வரலாற்றில் என்றும் காணப்படாத ஒரு சூழலில், நான் இப்புதிய பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கின்றேன். எதிர்கால சவால்களுக்கு தீரமாக முகம் கொடுக்கும் வகையில் செயற்பட வேண்டியுள்ளது" என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகவும், பாதுகாப்பு ஒருங்கிணைப்புக்குழுவின் தலைவராகவும் அண்மையில் பதவியேற்றுள்ள ஜெனரல் கமில்டன் வனசிங்க தெரிவித்தார்.

'திவயின' என்ற சிங்களப் பத்திரிகை டபிள்யு. ஜி. குணரத்தின என்பவருக்கு ஜெனரல் கமில்டன் வனசிங்க வழங்கிய செவ்வியிலிருந்து திரட்டப்பட்ட முக்கிய அம்சங்கள் வருமாறு:-

கேள்வி:
பாதுகாப்பு செயலாளர் என்ற வகையில் நீங்கள் எதற்கு உயர்ந்த முன்னுரிமை அளிக்கின்றீர்கள்?

பதில்:
நாட்டின் ஒற்றையாட்சித் தன்மையைப் பாதுகாத்து நாட்டை எதிர்நோக்கியுள்ள சவால்களை முறியடித்து ஐக்கிய இலங்கையில் சமாதானத்தை நிலைநிறுத்துவதையே.

கேள்வி:
இருபது ஆண்டுகளாகத் தொடரும் இந்தப் 'பயங்கரவாதத்தை' முறியடிக்க இலகுவில் இயலுமா?

பதில்:
என் மீது சுமத்தப்பட்டிருக்கும் பொறுப்பு அதிகம் பெரியது. வரலாற்றில் என்றும் காணப்படாத சூழலில் நாம் பயணம் செய்துகொண்டிருக்கிறோம். வடக்கு -கிழக்கு யுத்தம் இதற்குக் காரணமாகும். யுத்த பூமியில் எதிரிகளைப் பலவீனப்படுத்தி சமாதானத்திற்கு அணிவகுக்க நாம் அர்ப்பணமாகியுள்ளோம். அதற்கு மக்களின் ஒத்துழைப்பு அவசியம்.

கேள்வி:
அதன் பிரதான சவால், உங்கள் கீழ் உள்ள முப்படைகளுக்கும் பொலிசுக்குமா?

பதில்:
ஆம். அந்தச் சவால்களுக்கு பயமின்றித் தீரமாக நாம் முகம் கொடுப்போம். எமது நாட்டின் ஒற்றையாட்சியை பாதுகாக்க வேண்டும். வாழ்வைத் தியாகம் செய்வதன் மூலம் நாம் அதற்கு தயாராக உள்ளோம்.

கேள்வி:
தொடர்ந்து மேற்கொள்ளப்படும் இந்த யுத்தத்தில் வடக்கு -கிழக்கு சாதாரண மக்களை வெற்றி கொள்ளும் முயற்சி இல்லையா?

பதில்:
படையினர் தொடர்ந்தும் போரில் ஈடுபட்டுள்ளனர். ஆயுதம் ஏந்தியவர்களுடன் போராடும் அதேவேளையில், வட கிழக்கில் பலதரப்பட்ட இனங்களின் மனங்களை வெல்வதற்கும் நாம் முயல்கின்றோம்.

கேள்வி:
இதுவரை இயங்கிய ஜே. ஓ. - சியின் பணிகள் தற்போது யார் வசம்?

பதில்:
பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைகள் இணைப்புத் தலைமையகத்திடம். அது தொடர்ந்தும் உள்ளது.

கேள்வி:
அண்மையில் அநுராதபுரத்திற்கு இடமாற்றப்பட்ட ஜே. - ஓ. சி. தலைமையகத்திற்கு நடந்தது என்ன?

பதில்:
அது கலைக்கப்பட்டு விட்டது. அதற்குப் பதிலாகவே நடவடிக்கை இணைப்பு தலைமை அலுவலகம் கொழும்பில் இருந்து இயங்குகிறது. முப்படைத் தளபதிகள், பொலிஸ் மா அதிபர், தேசிய உளவுச் சேவைப் பணிப்பாளர், விசேட அதிரடிப் படையின் அதிகாரி ஆகியோர் இக்குழுவில் இடம் பெறுகின்றனர். இக்கூட்டங்களில் பாதுகாப்புச் செயலாளர் தலைமை வகிக்கிறார்.

கேள்வி:
இந்தப் புதுக்குழுவின் செயற்பாடு குறித்து விவரிக்க முடியுமா?

பதில்:
சகல உபடத்தி நடவடிக்கைகள் ஏற்பாடுகள் செய்தல், ஆலோசனை, உத்தரவு பிறப்பித்தல். சுருங்கக் கூறுவதானால், சகல தாக்குதல் நடவடிக்கைகளும் இக்குழுவின் நடவடிக்கைகளாகும். ஜனாதிபதியும் அரசும் என்மீது விசுவாசம் வைத்து இந்தப் பணியை என்னிடம் ஒப்படைத்து உள்ளனர். நாட்டுக்கு நல்ல பணியைத் தொடர்ந்தும் செய்ய எனக்கு தொடர்ந்தும் அவகாசம் கிடைத்துள்ளது.

கேள்வி:
அண்மைக் கால நிகழ்வுகள் பலவற்றில் புலிகளுக்கு நன்மை கிடைத்துள்ளதாகத் தெரிகிறது. ஜானகபுரத் தாக்குதலிலும் பருத்தித்துறைக் கடலிலும் கிளாலியிலும் கடற்படையினருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களில் புலிகளின் இலக்கு சரியானதாகக் கூறப்படுகிறது. இதுபற்றி நீங்கள் என்ன கூறுவீர்கள்?

பதில்:
ஓரிடத்தில் வெற்றி அல்லது தோல்வி என்பது யுத்தத்தில் வெல்வதல்ல நாம் எந்த இடத்திலும் யுத்தத்தில் தோல்வியுறவில்லை. தாக்குதல் என்ற வகையில் முக்கியமான எந்த யுத்த பூமியும் எமக்கு இல்லாமல் போகவில்லை. யுத்தத்தில் இலாப நட்டங்கள் எதிர்பார்க்கப்படுவதுதான்.

கேள்வி:
தோல்வி ஏற்பட்டால் பின்னடைவு ஏற்படுமா?

பதில்:
உண்மையாகவே இல்லை. எங்கள் வீரர்களின் தைரியம் மிக உயர்ந்தது. தோல்வியில் நாம் கலங்குவதில்லை. சோர்வு கொள்வதில்லை. எங்களுடைய தியாகபூர்வமான போக்கு மென்மேலும் அதிகரிக்கின்றது. யுத்த களத்தில் உயிர்த் தியாகம் புரிந்த வீரர்களின் மூலம் மேலும் உத்வேகம் பெற்று நாம் முன்னேறுகின்றோம்.

கேள்வி:
அண்மையில் இராணுவத்தில் ஆட்களைச் சேர்ப்பதற்கான கல்வித் தகைமை, வயது என்பன குறைக்கப்பட்டது தொடர்பாக சிலர் விமர்சிக்கின்றனரே. இது நியாயமா?

பதில்:
இது எவ்வகையிலும் நியாயமானதல்ல. அவ்வாறு பேசுபவர்கள் உலகில் இராணுவம் பற்றித் தெரியாதவர்களே. தமது சொந்தக் கையெழுத்தைக் கூடப் போடத்தெரியாதவர்கள் எமது அயல் நாடுகளில் இராணுவத்தில் பெருமளவில் இருப்பதை அவர்கள் தெரிந்துகொள்ளவில்லைப் போலும்.

கேள்வி:
படையில் சேர்வதற்குரிய கல்வித் தகைமை ஐந்தாம் வகுப்பில் சித்தி என்று குறைக்கப்பட்டிருக்கிறது அல்லவா?

பதில்:
அதில் என்ன தவறு இருக்கிறது. நாட்டுக்கு சேவையாற்ற மனமுவந்து முன்வரும் பிள்ளைகளுக்கு கல்வித் தகைமை இல்லை என்று காரணம் காட்டி அந்த வாய்ப்பை மறுப்பது சரியா? நாட்டுப் பற்று கல்வி பெற்றவர்களுக்கு மட்டும்தானா இருக்கிறது.

கேள்வி:
பாதுகாப்புப் படையில் உள்ளவர்கள்கடந்த 21 ஆண்டுகளிலும் பெரும் தியாகங்கள் புரிந்துள்ளனர் அல்லவா?

பதில்:
ஆம் நாட்டுக்காகப் அநேக தியாகங்கள் புரிந்த பலர் எம்மிடம் இருக்கின்றார்கள். சிலர் எம்மிடையே இல்லை. சிலருக்கு கை, கால்கள் இல்லை. இத்தகைய வீரர்களையும் அவர்களது சொந்தங்களையும் உடன் பிறப்புக்களையும் எம்மால் என்றும் மறக்கமுடியாது. ■

இனிப் போருக்கான சங்கு முழங்கட்டும்

தாய் உனக்குத் தந்ததென்ன பாலா? இல்லைத்
தண்ணீரா? தமிழிச்சி முலையில் உந்தன்
வாயருந்திக் கொண்டதென்ன பாலா? அன்றி
வடித்த கஞ்சித் தண்ணீரா தமிழா! இன்னும்
பாயிலென்ன படுக்கையடா எதிரி எங்கள்
படலையிலே வந்திடவும், தெருவின் ஓரம்
நாயெனவே கிடப்பதற்கா பிறந்தாய்,
உந்தன் நரம்பினிலே என்றுனக்கு வீரம் பாயும்?

விழி திறந்து பாருந்தன் தாய் மண் இங்கே
வேதனையால் துடிக்கின்றது உலகின் மூத்த
மொழியிறந்து போகின்றது எதிரி வானின்
மேகத்தில் மறைந்திருந்து வீசும் குண்டால்
அழிகிறதே திருநாடு விம்மி விம்மி
அழுகிறதே அட தமிழா நீயேன் இங்கு
பழிசுமந்து வாழ்கின்றாய் எழும்பு. உன்னை
படுத்திருக்க வோடாவுன் அன்னை பெற்றாள்?

வேலெடுத்து வாளெடுத்து பகைவர் அஞ்ச
வில்லெடுத்த பரம்பரையின் விழுதே! இன்று
காலெடுத்து நடப்பதற்கும் பயந்து நீயேன்
காற்செருப்பாய் வாழ்கின்றாய் தமிழன் என்ற
நாலெழுத்தைக் கேட்டவுடன் எதிரி மேனி
நடுநடுங்க வேண்டாமோ? தாயின் வீரப்
பாலருந்திக் கொண்டவனே! எழடா வந்த
பகைவனுக்குக் குழிவெட்டிப் புதைப்போம் வாடா.

அன்பார்ந்த தமிழீழ மக்களே!

இது அவசர அழைப்பு.

கண்களைத் திறந்துபார்.... குண்டுவீச்சு விமானங்கள். காதில் விழுவதெல்லாம் கவச வாகன இரைச்சல்கள். பீரங்கிப் படகில் இருந்து சீறிட்டுவரும் எறிகணைகள். ஆம், யுத்தத்தின் சத்தங்கள் உங்கள் வாசல்வரை வந்துவிட்டன.

நித்திரைக்காக எப்படி நீங்கள் நீட்டிப் படுக்கலாம்? அறுபதினாயிரம் தங்களின இளைஞர்களையே கொன்று சிங்களப் படைகள் தங்கள் கோரப் பற்களில் குருதி வழிய [illegible]

தென் தமிழீழத்தில் எங்கள் உடன் பிறப்புக்களைக் கொன்றொழித்த சிங்களப் படையினர் இரத்தம் வடியும் குத்தீட்டிகளுடன் உங்கள் வாசலுக்கு வரத்துடிக்கின்றனர்.

நீங்கள் எப்படித் தூங்கிக் கிடக்கலாம்?

இது விழிகள் சிவப்பேற விழித்துக் கொள்ளும் நேரம். குருதிக் கலன்கள் கொதிப்பேறவேண்டிய காலம்.

வீட்டுக்கொருவராயினும், நாட்டுக்காகப் போராட வாரதவரின் பாட்டும் கூத்துடனும் எதிரி வந்து உங்கள் படலையைத் தட்டுவான்.

கண்ணுக்கெதிரே உங்கள் தாயை, தங்கையை, தம்பியை தள்ளாடும் உங்கள் பேரனை ஒருவரையும் மிச்சமின்றி ஒத்திவெடுப்பான்.

இன்னும் நீ் னியும் கண்களை மூடிவிட்டு விழிகளைத் திறந்து பார்த்தால்,

உங்கள் கைகள் கட்டப்பட்டிருக்கும். உங்கள் தங்கை எல்லாம் இழந்து எதிரிலே .... கிடப்பாள்.

நீங்கள் குந்தியிருந்த குடியிருப்புக்கள் சின்னாபின்னமாகிக் கிடக்கும்.

உன்ன தமிழரின் பாதிப்பேர் வீதியில் கிடப்பார்கள். மீதிப்பேர் மூச்சு விடவும் எதிரியிடம் அனுமதி கேட்டு நிற்பார்கள்.

இந்தக் கொடுமை ஏன் வரவேண்டும்?
சிந்தித்துப் பாருங்கள்.

மானமிழந்து, வீரமிழந்து, மண்ணை இழந்து வாழும் வாழ்வு மகிமை தராது.

வந்த எதிரியை வாசலில் வரவிட்டு குந்தியிருப்பது பெருமை தராது.

தமிழனின் வேர்கள் வீரம் உறிஞ்சி விளைந்ததே தவிர மானமிழந்து மரத்துப் போனவை அல்ல.

யானையைக் கூட அடக்கினாள் 'அரியாத்தை' என்ற தமிழிச்சி. யாரிவள் உன் பேத்தி.

பூனைக் கண்ணோடு புகுந்த அந்நியனை ஓட விரட்டினான் பண்டார வன்னியன். யாரிவன்? உன் பூட்டன்.

இந்த வீரத்தின் பாலருந்திய நீ மட்டும் எப்படி விழுந்து கிடக்கலாம்?

முந்திபெங்கள் பரம்பரையென்றால், இன்னேரம் வேலெங்கே? வாளெங்கே? வெற்றிக் கொடியெங்கே? தேரெங்கே? என்று தேடியிருப்பார்கள்.

தாயும், மனைவியும் கொற்றவைக்கு முன்னால் கூத்தாடிவிட்டு நெற்றியிலே திலகமிட்டு வழியனுப்பியிருப்பார்கள்.

வெற்றி அல்லது வீரச்சாவு என்று தமிழன் களம் நோக்கிப் புறப்பட்டிருப்பான்.

இந்த வரலாறு அன்றுடன் முடிந்துவிடவில்லை. எதிரிக்கு நாங்கள் இதைச் சொல்லி வைப்போம்.

தமிழனின் நாடி நரம்புகளில் ஓடுவதெல்லாம் வீரத்தின் குருதி.

தமிழனின் நெஞ்சில் எரிவதெல்லாம் மானத்தின் நெருப்பு.

இந்தத் தடவை எதிரிக்கு நல்ல பாடம் புகட்டுவோம்.

பிரபாகரன் காலம் பொற்காலம் என்று சரித்திரம் குறித்து வைக்கட்டும்.

தமிழன் வெற்றி பெற்ற வரலாறு விளங்கட்டும். இனிப் போருக்கான சங்கு முழங்கட்டும்.

- புதுவை இரத்தினதுரை

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

தி.மு.க தலைவர் கருணாநிதியின் அரசியல் அந்திம காலம் நெருங்குகின்றதா?

"இந்திரா காங்கிரசுடனான கூட்டணியை முறித்துக் கொண்டதோடு, பா.ஜ வுடன் உறவு ஏற்படக்கூடும் என்ற எண்ணத்தையும் தோற்றுவித்த தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா, மிகப் பெரிய அரசியல் தவறு செய்துவிட்டார் எனத் தோன்றுகிறது. உடனடியாகத் தேர்தல் வந்தால் அவரது பரம எதிரியான தி.மு.க கருணாநிதி 'மாபெரும்' வெற்றியுடன் பதவிக்கு வருவார். அது மட்டுமல்ல, ஜெயலலிதாவின் தனிப்பட்ட செல்வாக்கும் சரிந்துள்ளது."

"தனது இரண்டாண்டு கால ஆட்சியின் மூலம், ஜெயலலிதா தனது நற்பெயரை எல்லாம் போக்கடித்துவிட்டார். கருணாநிதியைத்தான் மக்கள் ஆதரிக்கின்றனர். ஜெயலலிதாவின் ஆதரவாளர்களில் கூட, கால் வாசிப்பேர் கருணாநிதியையே சிறந்த முதல்வர் என்று கருதுகின்றார்கள். தி.மு.க, தேர்தலில் படுதோல்வியடைந்து இரண்டு ஆண்டுகள் ஆவதற்குள் கருணாநிதியின் சூரியன் உதயமாகி இருக்கின்றது".

இந்திரா காங்கிரஸ் - அ.தி.மு.க கூட்டணி முறிவடைந்ததைத் தொடர்ந்து, கடந்த மார்ச் மாத இறுதியில் இந்தியா டுடே நடத்திய கருத்துக் கணிப்பின் அடிப்படையில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் இவை. இக் கருத்துக் கணிப்பை 'மார்க்கெட் ரிசர்ச்' துறையில் முன்னணியில் இருக்கும் 'மார்க்' என்ற நிறுவனம் நடத்தியது.

'மார்க்' நிறுவனம், இதுபோன்ற கருத்துக் கணிப்புக்களையும், தேர்தல்கால கருத்துக் கணிப்புக்களையும் இதற்கு முன்னர் நடத்திய அனுபவமுள்ளது. இக் கருத்துக் கணிப்புக்களில் பெரும்பாலானவை மிகவும் துல்லியமாக அமைந்திருந்ததை, பின்னைய தேர்தல் முடிவுகள் காட்டியிருந்தமையும் குறிப்பிடத் தக்கது.

ஆறு மாதத்திற்கு முற்பட்ட 'மார்க்' நிறுவனத்தின் கருத்துக் கணிப்பு இவ்வாறாக இருக்க, இக் கருத்துக்கணிப்பு நடத்தப்பட்டு சுமார் ஆறு மாதங்களுக்குப் பின்னர் இடம்பெற்ற இரு இடைத் தேர்தல்கள், தமிழகத்தில் ஜெயலலிதாவின் செல்வாக்கு இன்றும் வீழ்ச்சி கண்டுவிடவில்லை என்பதை உணர்த்துமாப்போல் உள்ளது. அண்மையில் ராணிப்பேட்டை சட்டமன்ற தொகுதிக்கும், பழனி நாடாளுமன்றத் தொகுதிக்கும் நடைபெற்ற தேர்தலில் அ.தி.மு.க அமோக வெற்றியீட்டியமை இதனை வெளிக்காட்டியுள்ளது.

1991இல் இடம்பெற்ற பொதுத் தேர்தலின் பின், அரசியற் கட்சிகளின் கூட்டணிமாற்றம், அரசியற்சூழ்நிலை மாற்றங்களின் பின் மிகவும் இழுபறி நிலையில் இடம்பெற்ற ராணிப்பேட்டை சட்டமன்ற மற்றும் பழனி பாராளுமன்றத் தொகுதிக்கான இடைத் தேர்தல், தமிழகத்தில் அ.தி.மு.க, தி.மு.க, காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் பலப்பரீட்சைக் களமாகவே அமைந்தது. இத்தொகுதிகளில் வெற்றியீட்டுவதென்பது எதிர்கால அரசியலுக்கு கட்டியம் கூறும் ஒன்றாகவும் அமைந்திருந்தது.

இந் நிலையில், இத்தேர்தலுக்கு கட்சிகள் யாவும் முக்கியத்துவம் கொடுத்திருந்தபோது, அரசியல் வட்டாரங்களிலும் தேர்தல் முடிவு ஆவலோடு எதிர்பார்க்கப்பட்டு வந்தது. இதேவேளை இத் தேர்தலில், அ.தி.மு.க வைத் தோற்கடிக்க எதிர்க்கட்சிகள் முனைப்பாகச் செயல்பட்டன. குறிப்பாக தி.மு.க தலைமை, இத்தேர்தல் வெற்றியில் பெரிதும் நம்பிக்கை கொண்டிருந்ததோடு, முக்கியமான இரு பிரமுகர்களையும் தேர்தலில் நிறுத்தியிருந்தது.

ராணிப்பேட்டைத் தொகுதியில் முன்னாள் தி.மு.க அமைச்சரும், மூத்த உறுப்பினர்களில் ஒருவரான ஆற்காடு வீராசாமியையும், பழனியில், செல்வாக்கு மிக்கவரும், முன்னாள் எம்.பியுமான சுப்புலட்சுமி ஜெகதீசனையும் நிறுத்தியிருந்தது.

இருப்பினும் தி.மு.க தேர்தலில் கண்ட தோல்வியானது, அக்கட்சியின் தலைவரான கருணாநிதிக்குக் கிடைத்த பெரும் பலத்த அடி என்றே கொள்ளலாம். ஆனால் இத்தோல்வியைக் கொண்டு, 'மார்க்' ஆறுமாதத்தின் முன் செய்த கருத்துக் கணிப்பு தவறானது என்று கூறிவிட முடியாது. ஆறுமாத காலத்திற்குள் தி.மு.க பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ளது என்பதே உண்மையாகும்.

இந்திரா காங்கிரசுடன், இவ்வருடம் அ.தி.மு.க உறவை முறித்துக்கொண்டபோது, அது ஜெயலலிதா செய்த மிகப் பெரும் தவறாகவே கருதப்பட்டது. பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுக்களாலும், அரசியலில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தமை காரணமாகவும் ஜெயலலிதாவின் அரசியல் எதிர்காலம் கேள்விக்குரியதொன்றாக மாறியிருந்தது.

இந்திராகாங்கிரசுடன் உறவை முறித்துக்கொண்டமை காரணமாக, எதிர்க்கட்சியான தி.மு.க முன்வைத்த ஊழல் குற்றச்சாட்டுக்கள்; ஜனதா கட்சித் தலைவரும், தமிழக நல்லாட்சித் இயக்கத்தலைவர் சுப்பிரமணிய சுவாமி சுமத்திய நிலபேர ஊழல் குற்றச்சாட்டுக்கள், மற்றும் ஜெயலலிதா எம்.எல்.ஏ. பதவி பறிப்பு மனு போன்றவையும், காங்கிரஸ் கட்சியுடனான உறவு முறிந்தபின்னர் தமிழக காங்கிரஸ் கட்சித்தலைவர்கள் முன்வைத்த விடுதலைப்புலிகளுடனான ஜெயலலிதாவின் உறவு பற்றிய குற்றச்சாட்டுக்களும் ஜெயலலிதா அரசு எப்பொழுதும் கவிழ்க்கப்படலாம் என்ற நிலைமையே ஏற்படுத்தியிருந்தது. மேலும், ஜெயலலிதாவுடன் நெருக்கமாகிவிட்ட ஆளுநர் பீஸ்மன் நாராயணசிங்கின் இராஜினாமாவும், அரசியலில் தலையை நுழைத்துக்கொள்ள விரும்பும் சென்னா ரெட்டியின் ஆளுநர் நியமனமும் இதனை வலியுறுத்துமாப் போலவே இருந்தன.

இந்நிலையில் ஜெயலலிதாவும் சில கடும் நடவடிக்கைகளை மேற்கொண்டார். அமைச்சரவை மாற்றம் ஒன்றைச் செய்தார். அதில் நம்பிக்கைக்குரியவர்களாய் இருந்த, மூன்று அமைச்சர்களை வெளியேற்றினார். இவர்கள் காங்கிரசுடன் நட்பு பேண முற்பட்டதே காரணம் என அறிய முடிந்தது. அதே வேளை, தனது விசுவாசிகளை புதிய அமைச்சர்களாக நியமித்ததோடு அமைச்சரவையையும் விரிவுபடுத்தினார். இதில் முன்னர் அமைச்சரவையில் இருந்து நீக்கப்பட்ட வீரப்பனுக்கும் அமைச்சர் பதவி வழங்கப்பட்டமை புறநடையாக இருந்தது. இருப்பினும் வீரப்பன் ஜெயலலிதாவை முன்னர் தீவிரமாக விமர்சித்தவரானாலும், அவர் கட்சியில் இருந்து வெளியேற முடிவு செய்துள்ளார் எனக் கிடைத்த தகவல்களைத்தொடர்ந்தே அவருக்கு அமைச்சர் பதவி வழங்கப்பட்டது.

ஜெயராஜ்

இவ் அமைச்சரவை மாற்றம், அ.தி.மு.க வின் செல்வாக்கை எந்தளவு மக்கள் மத்தியில் அதிகரிக்க உதவியது என்பது கேள்வியே. ஆனால் காவேரி நீர்ப்பிரச்சினை தொடர்பாக காலவரையற்ற உண்ணாவிரதம் என ஜெயலலிதா எடுத்தமுடிவும், அவர் மேற்கொண்ட உண்ணாவிரதமும் அவரது செல்வாக்கை மீண்டும் ஆளுமைக்குட்பட்ட நிலையில் நிலைநிறுத்தியது என்றே கூறலாம். ஜெயலலிதாவின் 'அரசியல் ஸ்ரண்ட்' என வர்ணிக்கப்பட்ட இவ் உண்ணாவிரதப் போராட்டம், எது எவ்வாறு ஆயினும் அவரது சரிந்த புகழை சிறுதளவேனும் தாங்கிப் பிடிக்க உதவியது என்பதில் சந்தேகமில்லை.

ஆனால், இதுமட்டும் ஜெயலலிதாவின் தேர்தல் வெற்றிக்குக் காரணம் என்று கூறிவிட முடியாது. இவையாவற்றிற்கும் மேலாக எதிர்க் கட்சிகளினது, குறிப்பாக காங்கிரஸ் கட்சியின் பலவீனமான நிலையும், தி.மு.க விற்குள் காணப்பட்ட கட்சிப்பூசலுமே ஜெயலலிதாவின் வெற்றிக்குக் காரணம் என்பதில் அபிப்பிராயப் பேதங்கொள்ள ஏதுமில்லை என்றே கூறலாம்.

கடந்த ஏப்ரல் மாதத்தின் ஆரம்பத்தில், கோவையில் நடந்த மதுரை மாநாட்டில் 'வாரிசுகளை நியமிப்பதற்கு கழகம் சங்கரர் மடமல்ல. வேளைவரும்போது எனக்கு அடுத்தது யார் என்று தேர்வு செய்துகொள்ளும் அளவிற்குக் கழகம் ஜனநாயக வலுவுள்ளதுதான்' என தி.மு.க தலைவர் கருணாநிதி குறிப்பிட்டு, உட்கட்சி மோதலுக்கு ஒரு முடிவுகொண்டுவர முற்பட்டாராயினும், ஓரிரு மாதங்களுக்குள் இப்பூசல் தடுத்து வைக்க முடியாததாக வெளிக் கிளம்பியது.

தி.மு.க விற்குள் எழுந்த கட்சிப் பூசலானது, அதன் தலைவர் கருணாநிதியின் இரு மனைவிமார்களுடனும் அதன் பிள்ளைகளுடனும் தொடங்கி, தி.மு.க வின் முக்கிய தலைவர்களில் ஒருவரான வை. கோபாலசாமி வரையும் நீண்டுசெல்கிறது. கருணாநிதியின் மூத்த மனைவியான தயாளு அம்மாவும் அவரின் இரு புதல்வர்களான ஸ்ராலின், அழகிரிசாமியும் மற்றும் மருமகன் முரசொலிமாறனும் ஒரு அணியில் நிற்க; இரண்டாவது மனைவியான ராசாத்தி அம்மாளும், அவர்மகள் கனிமொழியும், கருணாநிதியின் சொத்துரிமைக்குப் போட்டியிடுவதுபோல் அவரது அரசியல் வாரிசு ஆவதற்கும் முற்பட்டுள்ளனர்.

இதில், தி.மு.கவின் இளைஞர் அணித்தலைவரான ஸ்ராலினின் பக்கம், தலைவர் கருணாநிதியின் கடைக்கண் பார்வை இருப்பதாகவே படுகின்றது. ஸ்ராலினை அடுத்த கட்சித்தலைவராக்கும் பணியில் கருணாநிதி ஈடுபடுவதாக கட்சி வட்டாரங்களில் பலமாகப் பேசப்படுகின்றது. இதனால் பல மூத்த தலைவர்களே முணுமுணுப்பதாகவும், தொடர்புடைய வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

இந் நிலையில்தான், ஸ்ராலினுக்குப் போட்டியாளராகவும், தென் மாவட்டங்களில் குறிப்பிடத்தக்க செல்வாக்குப் பெற்றவருமாக கருதப்படும் வை. கோபாலசாமியையும், அவருடன் சார்புடையவர்களையும் ராசாத்தி அம்மாளும் கனிமொழியும் ஆதரிக்கும் நிலை உள்ளது. இதன் மூலம், கனிமொழி தனது அரசியல் பாகத்தைப் பெற்றுக்கொள்ளப் பார்க்கிறார்.

இதன் அடிப்படையில்தான், கோவை மாநாடு முடிந்து இரண்டு மாதங்களுக்குள்ளேயே மீண்டும் உட்கட்சிப் பூசல் பூதாகாரமாக எழுந்தது. 'கருவின் குற்றம்' என நாஞ்சில் மனோகரன் எழுதிய கவிதை ஒன்று, அவரை கட்சியிலிருந்து கருணாநிதி வெளியேற்றும் அளவிற்குச் சென்றது. பின்னர் அவர் எவ்வளவோ முயற்சித்தும் கருணாநிதி கட்சியில் சேர்த்துக் கொள்ளவில்லை.

இதே வேளை, நாஞ்சில் மனோகரனை கட்சியிலிருந்து வெளியேற்றியதை மதுரையில் நடந்த கூட்டத்தில் பேசிய வை. கோபாலசாமி கண்டித்தார். நாஞ்சில் மனோகரனை நீக்கியது, அவசரத்தில் எடுத்த முடிவு என்றார். அவரை மீண்டும் சேர்த்துக்கொள்வது பற்றி, தலைமை மறுபரிசீலனை செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

ஆனால், முரண்பாடுகள் தீவிரமடைந்ததே ஒழிய குறையவில்லை. மதுரையில் நடந்த வேறொரு கூட்டத்தில் பேசிய கருணாநிதியின் மகன் அழகிரிசாமி, தனது தகப்பனாரை எதிர்த்துக் கிளர்ச்சி செய்பவர்களை, தெருநாய்கள் என்று பேசினார். ஆனால், அழகிரிசாமியின் பேச்சுக்கு கட்சித்தலைமை மன்னிப்புக் கோரிக் கடிதம் பெற்றுக்கொண்டாலும், நாஞ்சில் மனோகரனை கட்சியில் சேர்த்துக் கொள்ளாமை கட்சியின் தலைமை, ஸ்ராலின் ஆதரவாக உள்ளதை வெளிப்படுத்தி நிற்கிறது.

இந் நிலையில் மார்ச் மாதத்தின் இறுதியில், 'மார்க்' நிறுவனம் மேற்கொண்ட கருத்துக் கணிப்பானது, ஆறு மாதங்களின் பின் தலைகீழாக மாறியதில் ஆச்சரியம் எதுவுமில்லைதான்.

ஆனால் இவ் இடைத்தேர்தல், தி.மு.க விற்கு நல்ல படிப்பினை. இவ் அனுபவத்தின் அடிப்படையில் தி.மு.க இனி ஒரு தேர்தலை எதிர்கொள்ள வேண்டுமானால், அது தனது உட்கட்சிப் பூசல்களைத் தீர்த்துக் கொள்ள வேண்டும். ஆனால், தனது வாரிசைக் கட்சியின் வாரிசாக உருவாக்க முற்படும் முதுமை பெற்றுவிட்ட கருணாநிதியின் தலைமையால், அது முடியுமா? என்பதே இன்றுள்ள கேள்வி. அவ்வாறு இல்லாது விட்டால், எதிரி ஆனாலும் தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழப்பாடி கூறியிருப்பதுபோல் "தி.மு.க வின் பிளவு தவிர்க்க முடியாதது. எம்.ஜி.ஆர் வெளியேறி அ.தி.மு.கவை ஆரம்பித்த நேரத்தில் ஏற்பட்ட பாதிப்பைவிட, அதிகம் இருக்கலாம். கருணாநிதி தன் அரசியல் வாழ்வின் அந்திம காலத்தை நெருங்குகிறார்" என்பது, ஒரு சரியான அரசியல் எதிர்வு கூறலாக அமைந்துவிடும். ■

நன்றி: ஈழநாதம்

சிறிலங்கா ஜனாதிபதி...

தெளிவான வழியைப் பின்பற்றாமையினால், தாம் பெரும் நெருக்கடிகளுக்கு உள்ளாகியுள்ளதாகவும், போரில் வெற்றிபெற முடியாதுள்ளதாகவும் குற்றம் சுமத்தி வந்த இராணுவத்திற்கு ஒரு வாய்ப்பை டி.பி. விஜயதுங்க வழங்கியுள்ளார்.

டி.பி. விஜயதுங்கவின் இந்நிலைப்பாடானது, இராணுவத் தரப்பிலும் பலமாக வரவேற்கப்பட்டதோடு பாராட்டும் தெரிவிக்கப்பட்டு இராணுவத் தளபதி சிசில் வைத்தியரட்ன, ஜனாதிபதியின் இந்நிலைப்பாட்டை வெளிப்படையாகவே பாராட்டியும் உள்ளார். அவர், "ஜனாதிபதி டி.பி. விஜயதுங்காவின் இம்முடிவானது, வடக்கில் இராணுவத்தினர் யுத்தம் புரிய நல்லதொரு வழிகாட்டியாக அமைகின்றது" என்றார்.

அதாவது, டி.பி. விஜயதுங்க நிலையில்லாது தடுமாறிய தனது அரசியல் தளத்தை நிலைநிறுத்த, தன்னைப் பௌத்தமத அடிப்படைவாதத்தின் தலைவனாக வெளிக்காட்டிக் கொண்டுள்ளார். இதன் மூலம், ஐக்கிய தேசியக் கட்சிக்குள் உள்ள அடிப்படைவாதிகளின் பலமான ஆதரவையும், அதற்கு வெளியேயுள்ள பௌத்த அடிப்படைவாதிகளின் நம்பிக்கைக்கு உரியவராகவும் அவர் தன்னை ஆக்கிக் கொள்வதன் மூலம் பலமானதொரு அரசியல் தளத்தைப் பெற்றுக் கொள்ள முற்படுகின்றார். இதேவேளை இராணுவத் தீர்வு என்பதை வலியுறுத்துவதன் மூலம் இராணுவத்தின் நம்பிக்கைக்கு உரியவராகவும் மாறியுள்ளார்.

ஆனால், ஜனாதிபதி டி.பி. விஜயதுங்காவின் இம் முடிவானது பௌத்த சிங்கள பேரினவாதிகளுக்குப் பெரும் ஊக்கமும், புத்துணர்வும் வழங்கும் ஒன்றாகவே அமையும். அதேவேளை பல தசாப்தங்களாக இடம்பெற்றுவரும் இனப்பிரச்சினைக்கான தீர்வையும், சமாதானத்தையும் காணாத தொலைவிற்குத் தூரத் தள்ளிவிடும் என்பதே நிதர்சனம். ■

சிறு கதை

புதிய முகங்கள்

ஆதிலட்சுமி சிவகுமார்

கோயில் கிணற்றில் தண்ணீர் அள்ளிச் செப்புக் குடத்தை நிரப்பி விட்டு, கோபுரத்தை அண்ணாந்து பார்த்து நெடுமூச்செறிந்தாள் தங்கேச.

"முருகா... நீயெண்டாலும் ஒருக்கா கண்ணைத் திறக்கமாட்டியோ?...."

ஆத்திரமும், ஆதங்கமுமாய் வாய் முணுமுணுத்தது! கோயில் மடத்திலும், வடக்குப்புற வீதியில் கிளை எறிந்து, பரந்து நிற்கும் மருதமரத்தின் கீழும் மூட்டை முடிச்சுக்களோடு கூட்டம் கூட்டமாய்ச் சனங்கள்.

எல்லோர் முகங்களிலும்... பயம்... பசி... தாகம்... துன்பம்... இவர்கள் நேற்றிரவு அச்சுவேலியில் இருந்து ஓடிவந்தவர்கள். ஆண்களிற் சிலர் தேர்முட்டியின் நிழலில் நின்று சுவாரஸ்யமாய் கதை பரப்பிக் கொண்டிருந்தார்கள். இவர்களைப் போலத்தான் தங்கேசவும்... உடுத்த உடுப்போடு... ஊரைவிட்டு ஓடி வந்திருக்கிறாள்...

பல மாதங்களாகி விட்டன. கூடிப் பிறந்த அண்ணன் வீட்டுக் "கார்க் கராஜ்" தான் இப்போது தங்கேசவின் வசிப்பிடம்.

"உள்ளே கரிப்புகை படியக்கூடாது..." இது அண்ணன் மனைவியின் கட்டளை.

வெளித் தாழ்வாரத்தில் மூன்று கற்கள் வைத்து... ஒரே தடவையில் சமையலை முடித்து விடுவாள் தங்கேச. சாப்பிடுவது -படுப்பது -பிள்ளைகள் படிப்பது -நாகராசாவின் சயிக்கிள் நிறுத்துவது எல்லாம் இந்தக் 'கராச்சு'க்குள்தான்! அண்ணன் சவூதியில் சேவையர்.

வீட்டில் நிறைய வசதிகள். 'வோட்டர் பம்' பூட்டி 'ராங்'குக்கு தண்ணீர் நிரப்புவார்கள். அண்ணனின் மூத்த மகள் கிரிஜா ஒவ்வொரு நாளும் பின்னேரங்களில் குறோட்டன் செடிகளுக்குத் தண்ணீர் இறைப்பாள்.

ஆனால்...

தங்கேச தண்ணீர் அள்ளுவதும், குளிப்பதும் கோயில் கிணற்றில்தான். தங்கேச செப்புக் குடத்தை உன்னித் தூக்கி இடுப்பில் வைத்தாள்... தண்ணீர் பட்டதும் இடுப்பு சில்லிட்டது. நடக்க நடக்க தண்ணீர் குலுங்கி இடுப்பை நனைத்தது. மூச்சு வாங்கியது. ஒழுங்கை ஓரமாகத் குடத்தை இறக்கி வைத்துவிட்டு நின்றாள்.

"கடவுளே... கட்டேலை போறவரைக்கும் என்ரை கையையும் காலையும் இயங்க விட்டுடு..." மனதுக்குள் வேண்டிக் கொண்டாள்.

எண்பத்தொன்பதாம். ஆண்டுக் கடைசி...

இந்திய இராணுவம் அவள் கணவனைப் பிடித்தது... ஏன் பிடித்தார்கள் என்று இன்னும்தான் தெரியாது. அடித்து நொருக்கியதில் அவன் நிரந்தர நெஞ்சு வருத்தக்காரனாகிப் போனான். சயிக்கிள் ஓட முடியாது; பாரம் தூக்க முடியாது; பெலத்து இரும முடியாது; உடனே வாய்க்குள்ளிருந்து இரத்தம் வரும்.

"உழைச்சுத் தராட்டியும் பராவாயில்லை... ஒரு மூலைக்குள்ளை உயிரோடை இருந்தால் காணும்..." மனதுக்குள் வரிந்து கட்டிக்கொண்டாள். எங்கிருந்தோவொரு வைராக்கியம் வந்து மனதுக்குள் புகுந்தது.

அயற்சனங்களுக்கு மா இடித்துக் கொடுத்தாள்; -தினந்திதிகளுக்குச் சமைத்துக் கொடுத்தாள் -தன்னாலான எல்லாம் செய்தாள்.

ஆறு வயது நகுலனும்... நான்கு வயது ஜனனியும் அவள் சொத்துக்கள்...

"என்ரை குஞ்சுகளை வளர்த்து ஒரு நிலைக்கு கொண்டு வந்திடவேணும்" மூச்சுக்கு மூச்சு இதைத்தான் நெஞ்சில் பதித்துக் கொள்வாள்.

மூன்றாவது குழந்தையாய்... நாற்பத்திரண்டு வயதான நாகராசா. அக்கினிக்கும் அருந்ததிக்கும் முன்னால் "உன்னை என்றும் கைவிடேன்" என்று சத்தியம் செய்து கைப்பிடித்தவன், இன்று கையாலாகாதவனாக -நடமாடுகின்ற எலும்புக் கோர்வையாக -ஒரு நாள் கூட தங்கேச முகஞ்சுழித்தது கிடையாது. ஐந்தோ... பத்தோ... கிடைக்கும் பணத்தில் சீவியம் நடத்தினாள். ஆனால்... அவனுக்குத் தான் தன் மனைவி உலர்ந்து சருகாகிப் போவது நெஞ்சில் வலியை உண்டாக்கியது.

மெல்ல மெல்ல சுருட்டுக் கொட்டிலுக்குப் போனான். வறுமைதான் -வசதியீனம்தான் -ஆனால் இன்மையாகக் குடும்பம் நகர்ந்தது!

• • •

ஒரு நாள் விடிகின்ற நேரம். காகம் குருவிகள் கூட இன்னமும் கண்விழிக்காத பொழுது. பலாலிக்காரனுக்கு என்ன வந்ததோ? மளமளவென்று 'செல்'கள் தாறுமாறாக விழுந்து அதிர்ந்தன... எங்கே விழுகிறதென்று ஊகிக்கமுடியாமல்... பைத்தியம் பிடித்தவன்போல செல்கள் கூவின... துவக்குச் சூடுகள் தவில் கச்சேரியாய் ஒலித்தன...

"உவங்கள் உப்பிடித்தான் கொஞ்ச நேரம் அமளிப்பட்டுப் போட்டு சுருண்டு போவாங்கள்... பயந்தாங்கொள்ளிகள்..." போராளிகள் மீதான உறுதியான நம்பிக்கையோடு அவள் எண்ணம் சொல்லிற்று.

அடுப்பில் கிடந்த பானைத் தண்ணீர் மேல்... நீத்துப் பெட்டியில் மாவை அள்ளிவைத்து மூடினாள். சுவாமிநாதன் வீட்டுக்கு நூற்றைம்பது இடியப்பம் கொடுக்க வேண்டும். அடிவளவுக்குப் போன நாகராசா வேர்க்க விறுவிறுக்க வந்தான். "இ... இஞ்ச தங்கேச... ஆமிக்காரன் வாசிகசாலையடிக்கு வந்திட்டானாம்" அவன் அவளிடம் சொல்லிக் கொண்டிருக்கும் போதே -ஒழுங்கையால் சனங்கள் இடம்பெயர்ந்து கொண்டிருந்தார்கள். "இந்தச் சனம் சும்மா வெருளுது... ஆமி என்னெண்டு இஞ்சை வரும்?..." அவள் மனம் நம்ப மறுத்தது.

"டும்... டும்..." மண்டைக்குள் நரம்புகள் சிதறுவது போன்ற உணர்வு... இந்தப் பிரபஞ்சம் முழுவதையுமே உலுக்கிவிடும் சத்தம். கரும் புகை... வெடிமருந்து நாற்றம்... தலை கிறுகிறுத்தது! ஓடினார்கள்... நகுலனும் ஜனனியும் அழ அழ ஓடினார்கள்... ஓடிவந்து அண்ணன் வீட்டில் அடைக்கலம் தேடினார்கள்.

ஒரு மாதம் ஓடியது.

ஒன்றிரண்டு பேர் துணிந்து ஊருக்குப் போய்ச் சாமான்கள் எடுத்து வந்தார்கள். அடுத்த தடவை போனவர்களோடு, அவள் தடுக்கத் தடுக்க நாகராசா போனான். போய் அவன் கொண்டு வந்த செய்தி, "வீட்டைக் குண்டு வைத்துத் தகர்த்து விட்டார்கள்" என்பதுதான்.

தங்கேச அழுதாள்... நெஞ்சு வெடித்து உள்ளேயிருந்த துன்பமெல்லாம் உருகும்படி அழுதாள்.

அவளுடைய அழுகை, வீடு தகர்ந்து போய் விட்டதே என்பதற்காகவல்ல; இரண்டு வாரங்களுக்கு முன்னர் தான் சுவாமிநாதனிடம் இரண்டாயிரம் ரூபா கடன்பட்டு அடுப்படிக்குத் தகரமடித்து பூட்டும் போட்டிருந்தாள்.

"அம்மா, அம்மா..." நகுலன் மூச்சிரைக்க முன்னால் வந்து நின்றான்.

"என்ன குஞ்சு... என்ன?..."

"உங்களிட்டை சுவாமி மாமா வந்திருக்கு"

நெஞ்சுக்குள்ளே ஒரு தடவை பகீரென்றது.

"இரண்டாயிரம் ரூபா காசு குடுக்க வேணும்..." வாய் முணுமுணுத்தது. கால்கள் பின்னிப் பின்னி நடக்க மறுத்தன.

வாசலில் சுவாமிநாதன் நின்றார். தங்கேச குடத்தை இறக்கி வைத்தாள். சாரச்சீலையை முறுக்கிப் பிழிந்து உதறினாள்.

"நீ இஞ்சை இருக்கிறாய் எண்டு கேள்விப்பட்டு வந்தனான் தங்கேச. நாங்களும் அகதியா வெளிக்கிட்டு வந்து கிட்டடியிலை தான் இருக்கிறம். உனக்குத் தந்த இ ரண்டாயிரத்தையும் தந்திடு. எனக்கு கஸ்டமாக்கிடக்கு..."

"எங்கடை வீட்டையும் உடைச்சுப் போட்டாங்களாமண்ணை... ஒரு சாமானும் எடுத்துக் கொண்டு வரேல்லை..."

"அதுக்கு நானென்ன செய்யத் தங்கேச. ஏமாத்திப் போடாதை. நாளைக்கு வாறன். பாத்து மாறிவை" சுவாமிநாதன் எழும்பினார்.

"நாளைக்கு எண்ணண்டண்ணை... திடீரெண்டு..." -குரல் கெஞ்சிற்று.

"ஏன் உன்ரை அண்ணன் பெஞ்சாதியிட்டை வாங்கித்தாவன்" -வெடுக்கென்று வந்தது பதில்.

இதயம் சுக்குநூறாய் வெடித்துச் சிதறி... தங்கேசவுக்கு தொண்டை வரண்டது.

"நாளைக்கு வருவன், கட்டாயம் வை".

சுவாமிநாதனையே பார்த்துக்கொண்டு நின்றாள் தங்கேச. கட்டளை காயப்படுத்தியது!

"தங்கேச... நாளைக்கு என்ன செய்யப்போறாய்?" நாகராசாவின் ஏக்கம் கலந்த குரல்...

தங்கேசவுக்கு தாங்க முடியவில்லை. எத்தனையோ நாட்களாய்த் திரண்டிருந்த துன்பமேகம் கண்ணீராய்க் கொட்டியது.

"அப்ப என்னைப் பிடிச்ச ஆமிக்காரன் சுட்டிருக்கலாம். ஏன் இப்படி உசிரோடை விட்டானோ தெரியவில்லை".

நாகராசாவின் குரலில் விரக்தி... சோகம்...

"டேய் நகுலன்... கொம்மா எங்கையடா?" முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்த நகுலனை அண்ணன் மனைவி அதட்டுவது கேட்டது.

"ஓம், இஞ்சை இருக்கிறன்".

"இஞ்சை தங்கேச அவற்றை கூடப் பிறந்த சகோதரம் எண்டு போட்டு உதிலை இருக்கவிட்டனான். நாங்கள் இந்த ஊரிலை கௌரவமா இருக்கிறம். எங்கடை கௌரவத்தைக் கெடுத்துப் போடாதேங்கோ".

ருத்திரகாளியாய் தன் முன் நிற்கும் அண்ணன் மனைவியை மிரட்சியோடு பார்த்தாள் தங்கேச!

"ஏன் மச்சாள் நாங்கள் என்ன செய்தனாங்கள்?"

"பிள்ளையைத்தேடி நாலுபடிச்ச மனிசர், நாகரீகமான மனிசர் வாற இடம் இது. உங்களிட்டை இப்படிக் கடன்காரர் வந்து போறது எங்களுக்குத்தான் அவமானம் தெரிஞ்சுதே".

எதிர்பார்க்காத இந்தச் சொல் அம்புகள், இராணுவம் ஏவுகின்ற 'செல்'களைப்போல மிகக்கொடியனவாய்...

"எங்களுக்கேன் இப்பிடி ஒரு அவல வாழ்க்கை..." சகிப்புத்தன்மையின் எல்லையைத் தாண்டி, மனது கோழைத்தனமாகக் குமுறியது.

"அம்மா... அம்மா..."

புழுதியும் அழுக்குமாய் தன்முன் நின்ற மகனைப் பார்த்தாள்.

"ஆமிக்காரனை நான் இந்தத் துவக்காலை தானம்மா சுடுவன்" -அவன் கையில் பப்பாசிக் குழல் -கண்களில் உறுதி -தீயில் பொசுங்கிய இதயத்தின் மீது தேன்தடவிய அந்த வார்த்தைகள்...

"ஓ! எங்கடை இந்தத் துன்பமெல்லாத்துக்கும் அவங்கள் எங்கடை நிலத்திலை இருக்கிறது தான் காரணம். அவங்களைச் சுட்டுக் கலைக்க வேணும்".

அவனுடைய அழுக்கு மேனியை இறுக அணைத்து, புழுதி படிந்த உச்சியில் முத்தமிட்டாள். அணைத்துத் துன்பங்களையும் விரட்டிவிட்டு, இதயம் ஒரு முறை சிலிர்த்துக் கொண்டது. ■

நிகழ்வும் நினைவும்

-திலீபன்-

யாழ்ப்பாணம் முதல் கொள்கையா? போராட்டம் முதல் கொள்கையா?

விடுதலைப் புலிகளின் இராணுவச் சிந்தனையில், 'யாழ்ப்பாணம் முதல் கொள்கை' (JAFFNA FIRST POLICY) ஆதிக்கம் செலுத்துவதாக கடந்த 31.10.1993 அன்று வெளியாகிய 'தி ஐலண்ட்' (THE ISLAND) செய்தித்தாளில் 'தராகி' தெரிவித்துள்ளார். யாழ். குடாவின் மீது இராணுவத்தினரால் மேற்கொள்ளப்படக்கூடிய தாக்குதலை எதிர்பார்த்திருந்த விடுதலைப் புலிகள், அதனை எதிர்கொள்ள கிழக்கிலிருந்து படையணிகளை குடாநாடு நோக்கி நகர்த்தியதாகவும், இதனால் கிழக்கில் மேற்கொண்டிருக்கக்கூடிய வெற்றிகரமான தாக்குதல்களை மேற்கொள்ள முடியாது போய்விட்டது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

'தராகி', 'தி ஐலண்ட்' செய்தித்தாளில் தொடர்ச்சியாக ஞாயிற்றுக்கிழமைகளில் பத்தி எழுத்தாளராக (COULMNIST) இருந்து வருபவர். முன்னர் இவர் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (PLOT) முக்கிய அங்கத்தவராக இருந்து இயக்க நடவடிக்கைகளில் ஈடுபட்டவராகையால் அவருக்கு இயக்கங்கள் தொடர்பான பல்வேறு தகவல்கள் தெரிந்திருந்தன. கிழக்கைச் சேர்ந்தவராகவும், இயக்க நடவடிக்கை காரணமாக வடக்கில் செயற்பட்டவராகவும் இருந்தமையால், தமிழீழத் தேசத்தின் புவியியல் அமைப்புப் பற்றிய அறிவு அவரிடம் இருந்தது. பழைய இயக்கச் செயற்பாடு காரணமாகவும் அவரது இயல்பான சிநேக மனப்பான்மை காரணமாகவும் அவருக்குப் பலரது தொடர்பும் இருந்தது. இவற்றை எல்லாம் இணைத்து, விடுதலைப் போராட்டம் பற்றிய பல தகவல்களை வெளியிடக்கூடிய பத்தி எழுத்தாளராக அவர் மாறிவிட்டார்.

சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கும் தமிழீழத் தேசத்தின் தகவல்களை, தந்திரோபாயங்களை உய்த்தறிய ஒரு 'தராகி' தேவைப்பட்டார். எனவே குறிப்பிடத்தக்க சம்பளத்துடன் 'தி ஐலண்ட்' தராகியைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டது. 'தராகி' எழுதும் பத்திகள் பலரினதும் மதிப்பினைப் பரவலாகப் பெறத் தொடங்கியது. ஆனால், தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு தன்னை ஒரு காலத்தில் அர்ப்பணித்திருந்த 'தராகி', சிங்கள பௌத்த இனவாதத்திற்குத் தகவல்களைத் திரட்டி வெளியிடுபவராகத் தரமிறங்கியது கவலைக்குரியது. இதனைக் குறிப்பிடும் அதேவேளை, அவரது எழுத்தில் இருக்கும் தரம் தொடர்பாக, எவரும் குறைத்து மதிப்பிட முடியாது என்பதையும் குறிப்பிட்டே ஆக வேண்டும்.

'தராகி' வெளியிடும் கருத்துக்களுடன் எனக்கு உடன்பாடுகளும் முரண்பாடுகளும் இருந்து வருவதுண்டு. இருப்பினும் அவரைப் பற்றியும், அவரது கருத்துக்களைப் பற்றியும் இதுவரை 'நிகழ்வும் நினைவும்' பகுதியில் எழுதியதில்லை. ஆனால், 'தராகி'யின் மேற்குறிப்பிட்ட கருத்தினை வாசித்த போது, இது தொடர்பாக சிறிய குறிப்பாவது எழுத வேண்டும் என மனம் உந்தியது. அதேவேளை அவரது முழுப் பத்திக்கும் பதிலளிப்பது எனது நோக்கம் அல்ல என்பதும் இங்கு குறிப்பிட வேண்டியது. 'யாழ்ப்பாணம் முதல் கொள்கை' விடுதலைப் புலிகளின் இராணுவச் சிந்தனையில் ஆதிக்கம் செலுத்துவதாக 'தராகி' குறிப்பிட்டது எந்த அளவுக்குச் சரியானது?

இக் கேள்விக்கு நாம் பதில் காண வேண்டுமாயின், விடுதலைப் புலிகளின் இராணுவ மூலோபாயம், தந்திரோபாயம் குறித்துச் சிறிது நோக்க வேண்டும். இங்கு மூலோபாயம் என்பது இலக்கினை அடைந்து கொள்வதற்கான அடிப்படை வழியாகப் புரிந்து கொள்ளப்படலாம். தந்திரோபாயம் என்பது இவ் மூலோபாயத்தினை அடைந்து கொள்வதற்குப் பயன்படுத்தப்படும் வழிமுறைகளாக இனங்காணப்படலாம்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தினை, வெற்றியினை நோக்கி நகர்த்திச் செல்வதற்கு விடுதலைப் புலிகள் அரசியல், இராணுவ, இராஜதந்திர, சமூக, பொருளாதார, பண்பாட்டுத் தளங்களில் செயற்படுகின்றனர். இராணுவ ரீதியாக எதிரியினை வெற்றி கொள்வதற்கு, தமிழீழ பிரதேசத்தினை எதிரியிடம் இருந்து மீட்டல்; மீட்கப்பட்ட பிரதேசங்களை எதிரி மீள ஆக்கிரமிப்புச் செய்யாமல் தடுத்தல்; மீட்கப்படாத பிரதேசங்களை மீட்டெடுப்பதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ளல் போன்ற அடிப்படை இராணுவ மூலோபாயத்தினை விடுதலைப் புலிகள் கொண்டுள்ளனர் எனலாம்.

இம் மூலோபாயத்தினை அடைந்து கொள்வதற்கு, எதிரியின் முகாம்களை தகர்த்தழித்தல்; எதிரியின் நகர்வினைக் கட்டுப்படுத்தல் போன்றவை அண்மைக் காலங்களில் தந்திரோபாயமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. உதாரணமாக கொக்காவில், மாங்குளம் முகாம்கள் தகர்க்கப்பட்டமையினூடாக ஆனையிறவில் இருந்து தாண்டிக்குளம் வரையிலான பிரதேசங்கள் முழுமையான கட்டுப்பாட்டினுள் கொண்டு வரப்பட்டது. ஆனையிறவு முகாமும் விடுதலைப் புலிகளின் வசம் வீழ்ந்திருக்குமேயானால், குடாநாட்டினையும் வன்னிப் பிரதேசத்தினையும் இணைத்துக் கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்கு அனுகூலமாக அமைந்திருக்கும்.

மேலும், கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களை எதிரி மீள ஆக்கிரமிப்புச் செய்யாமல் இருப்பதற்கு, எதிரியின் பலத்தை ஒரு இடத்தில் குவிய விடாது பரவலாக்கும் தந்திரோபாயத்தினையும் விடுதலைப் புலிகள் பின்பற்றியிருந்தனர். உதாரணமாக, 1992 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இராணுவத்தின் மீதான தாக்குதல் நடவடிக்கைகளை கிழக்கில் பரவலாக்கியமை, ஏற்கனவே கட்டுப்பாட்டினுள் இருந்த பிரதேசத்தை ஆக்கிரமிக்க முயன்ற எதிரியின் திட்டத்தினை தடுத்து நிறுத்தியது.

இந்த வகையில் நோக்கின், விடுதலைப் புலிகளின் படையணிகளின் நகர்வு மூலோபாயத்தினை அடைந்து கொள்வதற்கு நிலைமைகளுக்கேற்ப மேற்கொள்ளப்படும் தந்திரோபாயத்தின் அடிப்படையிலேயே நடைபெறுகின்றது என்பதனைப் புரிந்து கொள்ள முடியும்.

இவற்றை அடிப்படையாகக் கொண்டு 'யாழ்தேவி'க்கு எதிராக விடுதலைப் புலிகளின் செயற்பாட்டினைப் புரிந்துகொள்ள முடியும். 'யாழ்தேவி' நடவடிக்கையினை எதிர்கொள்வது, கிழக்கில் இராணுவ நடவடிக்கையினை மேற்கொள்வதனை விட, போராட்டத்திற்கு அவசியமாக இருந்தது. இங்கு கிளாலியில் இராணுவம் நிலைகொள்ள முடியாது எனும் எடுகோளுடன் பிரச்சினையைக் கையாள முடியாது. வெற்றிலைக்கேணியிலிருந்து ஆனையிறவுக்கு இடைப்பட்ட பகுதியும் இராணுவம் நிலை கொள்வதற்குச் சாதகமான பகுதியல்ல. ஆனால், போக்குவரத்தினைத் துண்டித்து குடாநாட்டின் மீது அழுத்தத்தினை ஏற்படுத்த இராணுவம் அங்கு நிலைகொண்டது. ஆனால் அதனை, 'தராகி' முன்பு குறிப்பிட்டது போல விடுதலைப் புலிகள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டனர் என்பது வேறுவிடயம். ஆனால் இராணுவம் அங்கு நிலை கொண்டது. இதே போல் கிளாலியிலும் இராணுவம் நிலை கொள்வதற்கான வாய்ப்பினை முற்றாக நிராகரிக்க முடியாது. கிளாலியில் இராணுவம் நிலை கொண்டுவிட்டதாக அரச தரப்புச் செய்திகள் வெளிவந்த போது, அதனை விடுதலைப் புலிகளுக்கு ஒரு பின்னடைவு என 'தராகி' வர்ணித்தமை இங்கு நினைவு கொள்ளக்கூடியது.

எனவே, கிளாலியினைக் கைப்பற்றும் இராணுவ நடவடிக்கையினை உறுதியாக எதிர்க்க வேண்டியது அவசியமானது. கிளாலியில் இராணுவம் நிலை கொண்டிருந்தால், அதனை விடுதலைப் புலிகளின் பின்னடைவு என வர்ணிப்பதனை விடப் போராட்டத்தின் பின்னடைவு என வர்ணிப்பதே பொருத்தமாக இருந்திருக்கும். 'தராகி' போராட்டத்துடன் விடயங்களை இணைக்காமல் விடுதலைப் புலிகளுடன் மட்டும் விடயங்களை இணைக்கும் ஒரு பார்வையினைக் கொண்டிருப்பது சரியானது அல்ல. போராட்டம் வெற்றி கொள்ளப்பட வேண்டுமானால், எத்தகைய இராணுவ வெற்றிகள் முக்கியமானவை என்பதனைக் கணிப்பிடுவது 'தராகி'யின் பார்வையினைச் செம்மைப்படுத்த உதவும்.

தொடர்ச்சி 10ம் பக்கம் ....

தமிழ்க் குழுக்களின் கோரிக்கை அரசு ஏற்றுக்கொள்ளக் கூடாது

■ பிக்கு பெரமுன வலியுறுத்து

பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு, தமது மூன்று கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என தமிழ்க் கட்சிகளும் குழுக்களும் வலியுறுத்துகின்றன. இவை ஏற்றுக்கொள்ள முடியாத நிபந்தனைகளாகும். எனவே அரசோ ஜனாதிபதியோ இந்த நிபந்தனைகள் விதிக்கும் கட்சிகளுடனோ குழுக்களுடனோ பேச்சு வார்த்தையில் ஈடுபடக்கூடாது.

இவ்வாறு ஜனாதிபதிக்கு எழுதிய கடிதம் ஒன்றில் ருகுணரட்ட பிக்கு பெரமுன எனும் அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

இந்த நிபந்தனைகளை ஒத்துக் கொண்டு, பேச்சுவார்த்தைக்கு அரசு தயாராக உள்ளதா? அல்லது இதனை நிராகரித்துள்ளதா என்பதே அரசின் கட்டுப்பாட்டை மீள உருவாக்கும் கட்டமைப்பு நிறைவேற்றுவதற்கு அரசு தயாராக உள்ளதா என்ற இரண்டு கேள்விகளுக்குமுள்ள பதில்களையே அரசிடமிருந்தும் ஜனாதிபதியிடமும் மக்கள் இன்று எதிர்பார்க்கின்றனர் என்று பிக்கு பெரமுன மேலும் தெரிவித்துள்ளது.

இக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இந்த நாடு இப்போது இனப்பிரச்சினையை எதிர்கொள்ளவில்லை. பயங்கரவாதப் பிரச்சினையையே எதிர்கொள்கிறது என தாங்கள் குறிப்பிட்டுள்ளதை திருப்தியுடன் நாம் கவனத்தில் எடுத்துள்ளோம்.

விடுதலைப் புலிகள் தந்திரோபாயத்தின் மூலம் இந்நாட்டின் பெரும் பகுதியை அரசின் கட்டுப்பாட்டிலிருந்து செயலிழக்கச் செய்துள்ளனர்.

சகல விதத்திலும் அரசின் கட்டுப்பாட்டை மீளக்கொண்டு வருவதே அரசின் வெளிப்படையான அரசியல் மற்றும் அரசியலமைப்பின் கடமையாகும்.

ஜனாதிபதி பிரேமதாசா கொல்லப்பட்ட பின்னர், அவரைக் கொன்றவர்கள் எனக் குற்றஞ்சாட்டப்பட்ட விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை ஒன்றை மேற்கொள்வதற்கு அரசு தயாராக உள்ளதாக நீங்கள் அறிக்கை ஒன்றில் கூறியிருந்தீர்கள். பிரதமரும் இதே போன்று அறிக்கை வெளியிட்டுள்ளார்.

பேச்சுவார்த்தை நடத்த முடியாத இந்தக் கோரிக்கைகளை, தமிழ்க்கட்சிகள் மீண்டும் மீண்டும் கோரி வருகின்றன என்று அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ■

யாழ் மாவட்ட மாணவர் தொகை மூன்றில் ஒரு பங்காக வெட்டு

92/93ஆம் ஆண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கு, பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு அறிவித்த வெட்டுப் புள்ளி முறையால் யாழ் மாவட்டத்திலிருந்து பல்கலைக் கழக அனுமதி பெறும் மாணவர் எண்ணிக்கை, கடந்த ஆண்டைவிட 1/3 பங்காகக் குறைவடைந்துள்ளது. 91 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சை, ஆகஸ்டில் நடத்தப்பட்டபோதிலும் சிறீலங்காவின் குண்டு வீச்சு ஆக்கிரமிப்புக்களால் 92 ஏப்ரலில் விசேட பரீட்சைக்குத் தோற்ற வேண்டிய அவல நிலை, யாழ் மாவட்ட மாணவருக்கு ஏற்பட்டது. ஆனால், இதிலும் சிறீலங்கா பௌத்த சிங்கள இனவாத அரசு தனது பாரபட்சத்தைக் காட்டத் தவறவில்லை. 91 பரீட்சையைவிட அதிக புள்ளிகள் 92 ஆம் ஆண்டுப் பரீட்சார்த்திகளிடம் கோரப்பட்டது. இதனால் குப்பி விளக்குக் கூட இன்றிக் கல்வியில் சாதனை படைக்கும் தமிழீழ மாணவர்கள், மேற்படிப்பு வசதி மறுக்கப்பட்ட நிலையில் உள்ளனர்.

வரண்ட பிரதேச மக்களுக்கு கல்வி ஓர் அடிப்படை மனித உரிமையாக உள்ளது. கல்வி வசதி மறுக்கப்பட்டால் இவர்களின் தொழில் வாய்ப்பும் மறுக்கப்பட்டு வாழ்விழப்பர். இதனையே சிறீலங்கா தனது இலட்சிய நோக்கமாகக் கொண்டு தமிழீழ மாணவர்களை நசுக்குகிறது. ■

டி.பி. விஜயதுங்காவால் பிரச்சினையை தீர்க்க முடியாது

- முதலமைச்சர் சந்திரிகா -

"தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகள் தீர்க்கப்பட்டிருந்தால், தமிழர்கள் இன்று பிரபாகரனின் பின்னால் சென்றிருக்க மாட்டார்கள்" என, மேல் மாகாண முதலமைச்சர் சந்திரிகா தெரிவித்துள்ளார். டி.பி. விஜயதுங்கா தான் ஒரு வீரனைப் போல், பிரபாகரனைத் தூற்றித் திரிவதாகத் தெரிவித்த அவர், விஜயதுங்காவால் பிரச்சினையைத் தீர்க்க முடியாது எனவும் கூறியுள்ளார். ■

மக்கள் நடமாட்டத்தை...

தீர்வு என்பதற்கு பக்கத் துணையாக நிற்பதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

நாகதேவன்துறையில் படுதோல்வி

இதற்கிடையில், கடந்த வாரம் கிளாலிப் போக்குவரத்துப் படகுகள் மீது நாகதேவன்துறைப் பகுதியில் சிறீலங்காக் கடற்படையினர் கடுமையான தாக்குதலைத் தொடுத்தனர். ஆயினும் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த கடற்புலிகள், உடன் பதிலடி கொடுக்கத் தொடங்கினர். சுமார் ஒரு மணி நேரமாக இடம்பெற்ற பலத்த மோதலின் பின், கடற்புலிகளின் உக்கிரமான தாக்குதலை எதிர்கொள்ள முடியாத நிலையில் சிறீலங்காக் கடற்படையினர் பின்வாங்கிச் சென்றுள்ளனர். உலங்கு வானூர்திகளின் துணையோடு கடற்படையால் மேற்கொள்ளப்பட்ட இந்நடவடிக்கையின் படுதோல்வி, கடற்புலிகளின் வலிமையை மீண்டும் நிரூபித்துக் காட்டியுள்ளது. ■

நீதிமன்ற உத்தரவை...

காவின் உயர்நீதிமன்றத்தையும், அதன் நீதிமன்றத் தீர்ப்பையும் அவமதிக்கும் செயலாக உள்ளதென கொழும்பு அவதானிகள் கருதுகின்றனர்.

இதற்கிடை மலையகத் தமிழர்களையும், இலங்கைத் தமிழர்களுக்குரிய விகிதாசாரத்துக்குள்ளேயே அடக்கி, நியமனங்கள் வழங்கும் புதிய முறையை, சிறீலங்கா நடைமுறைப்படுத்தியதன் மூலம் மலையகத் தமிழர்களுக்கு உரிய 5.5 சதவீத ஒதுக்கீட்டையும் சிங்களவர்களுக்கு வழங்கி, சிங்கள விகிதாசாரத்தை மேலும் அதிகரித்துள்ளது. ■

தலைமைச் செயலகம்,
தமிழீழம்
22. 05. 1993

உலக வரலாற்றின் ஒரு புதிய அத்தியாயமாக, இங்கு எமது தாயக மண்ணில், ஒரு புரட்சிகர வரலாறு எழுதப்பட்டுக்கொண்டிருக்கிறது. இந்த வரலாற்றின் கதாநாயகர்கள் பலர். அவர்களது தனிமனித சரித்திரங்களின் தொகுப்பாகவே எமது வரலாற்றுக் காவியம் படைக்கப்படுகிறது.

எமது தேசத்தின் தியாக வரலாற்றில் அன்னை பூபதி ஒரு உன்னத இடத்தை வகிக்கிறார். அந்த அன்னையின் தனித்துவமான சரித்திரத்தை அற்புதமான கலை வடிவமாகத் தந்துள்ள முல்லை மாவட்டக் கலைஞர்களை நான் மெச்சுகிறேன்.

ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தில் கலை, இலக்கியப் படைப்பாளிகளின் பங்கு மகத்தானது. தேசிய சுய உணர்வைத் தட்டி எழுப்பி, தேசியப் போராட்டத்திற்கு ஊக்கசக்தியை ஊட்டுபவர்கள் கலைஞர்கள். தேசிய உருவாக்கத்திற்கு செழுமையும் முழுமையும் கொடுப்பவர்களும் அவர்களே. இந்த இலக்கில் எமது தேசத்து கலை, இலக்கியப் படைப்பாளிகளும் கணிசமான பங்களிப்பைச் செய்துவருகின்றனர்.

போராட்ட வாழ்வைச் சித்தரிக்கும் கலைப் பணியில் முல்லை மாவட்ட கலைஞர்கள் முன்னுதாரணமாக நிற்கிறார்கள். முன்னரும் மாவீரர் நாளையொட்டி 'தமிழோசை' என்ற கலைப்படைப்பை உருவாக்கிப் பலரின் பாராட்டுக்களைப் பெற்றிருந்தனர். இன்று 'இது எங்கள் தேசம்' என்ற அன்னை பூபதியின் வரலாற்றைப் பின்னணியாகக் கொண்டு இந்தக் கலைப் படைப்பை உருவாக்கியுள்ளனர். இயல்பாகவே கலைஞர்களுடன் மிக நெருக்கமான உறவை வழிவழியாகக் கொண்டிருக்கும் முல்லை மண்ணிலிருந்து வெளிவரும் இந்தப் படைப்பையிட்டு நாம் பெருமிதம் அடைகின்றோம். அனைத்து கலைஞர்களையும் பாராட்டுகின்றோம். மேலும் மேலும் இவர்களது கலைப்பணி சிறக்க வாழ்த்துகிறோம்.

காலத்தின் குரலாக, ஒடுக்கு முறைக்கு எதிரான எதிர்ப்புணர்வை எதார்த்தமாகச் சித்தரிக்கும் இந்தக் கலையாக்கம் எமது மக்களின் இதயங்களைப் பற்றிக்கொள்ளும் என்பது திண்ணம்.

'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்'

தலைவர்,
தமிழீழ விடுதலைப் புலிகள்.

சர்வதேச திரையரங்குகளில் . . . . .

U.T.O
211 Katherine Road
London E6 1BU, UK
T/F 081-470 8593

T.C.C
Groot Hertoginnelaan 108
2517 EB Den Haag, Nederland

L.T.T.E
Postbox 47, 7600 Struer
Denmark Tel/Fax
97-841221

T.C.C
P.O.Box 1089 Vika
0110 Oslo 1, Norway

T.C.C
Victoria 3170, Australia

W.T.C.C
SWITZERLAND

T.C.C
Post Fach 340331
Germany

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France

T.C.C
Palermo, Italy

T.C.C
Spanga, Sweden